**PROPOSED KEY ANSWERS**
**FOR THE PRELIMINARY EXAMINATION HELD ON 01.11.2020**
**FOR THE POST OF DISTRICT JUDGE (ENTRY LEVEL)**
**IN THE TAMIL NADU STATE JUDICIAL SERVICE**
**(Notification No.02/2019, dated 12.12.2019)**

The proposed key answers for Paper-I and Paper-II, indicated in the Question Booklet (A-Series), for the Preliminary Examination conducted on 01.11.2020 (Sunday) are hereby hosted.

Objections if any, from the candidates with regard to any of the proposed key answer should be sent to the Registrar (Recruitment), High Court, Madras by e-mail : recruitmentdj2019@rediffmail.com in the prescribed format, provided in the link, i.e., "Link for submitting objections, if any, to the proposed Key Answers".

The candidates are required to download the format for submitting objections from the link provided, fill the columns thereof and submit the same along with the enclosures, through their registered email ID, within two days from today.

Objections received after two days or columns not duly filled with requisite particulars or incorrect question number or vague objections without any material to support etc., will receive no attention.

Sd/ xxxx

Dated: 11.11.2020. Registrar (Recruitment).

**DELFN2532**

Q.Booklet Series : **A**

Q.Booklet No. ____________ Register No. ____________

**Time : Three Hours (09.00 a.m. to 12.00 noon)**
**(Forenoon Session)**

**Marks: 100**
**(0.25 negative mark for each incorrect answer)**

# (OBJECTIVE TYPE)

## PAPER – I

## 2020

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

## IMPORTANT INSTRUCTIONS

1. The Candidates will be supplied with Question Booklet 15 minutes before commencement of the examination.

2. This Question Booklet contains 100 objective type questions. Before answering, the candidates are requested to verify whether all the questions are in seriatim and ensure that there are no blank pages in the question booklet. In case, any defect is noticed, it shall be reported to the Invigilator immediately and before commencement of the Examination, so as to be replaced with a new (same series) Question Booklet. Thereafter, it will not be replaced.

3. The Question Paper is Bi-lingual, i.e., in English and Tamil. All questions carry equal marks i.e., 100 × 1 = 100 marks. **For each, incorrect answer, 0.25 marks will be deducted.**

4. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet, except in the space provided for rough work.

5. Personalized OMR Answer Sheets of the Candidates will be supplied by the invigilator for answering the Questions. If the OMR Answer Sheet is, in anyway defective, the same shall be brought to the notice of the Invigilator immediately before shading, so as to supply a spare OMR answer sheet.

[Turn over

SPACE FOR ROUGH WORK

1. In 2018, in Aruna Shanbaug case, Supreme Court gave legal sanction to ———— euthanasia and execution of a ———— of persons suffering from chronic terminal diseases and likely to go into a permanent vegetative state.

Which of the following will be appropriate to fill in the blank?

(A) active, dying will

(B) passive, living will

(C) active, living will

(D) passive, dying will

2018ல் அருணா சன்பக் வழக்கில் உச்ச நீதிமன்றம் நீண்ட காலமாக நோய்களில் வாடி நிரந்தர அசைவற்ற தன்மைக்கு செல்லக்கூடிய நிலையிலுள்ள நபர்களின் எந்த கருணை கொலை மற்றும் விருப்பத்திற்கு சட்ட ரீதியான அனுமதி கொடுத்தது?

கீழ்கண்டவற்றில் காலியிடத்தை நிரப்ப எது சரியானது?

(A) செயலுள்ள, இறக்கும் விருப்பம்

(B) செயலற்ற, வாழும் விருப்பம்

(C) செயலுள்ள, வாழும் விருப்பம்

(D) செயலற்ற, இறக்கும் விருப்பம்

2. In 2016, the Supreme Court has clarified that the "Third Gender" will include

(A) Transgender

(B) Gays & Lesbians

(C) Bisexuals

(D) All of these

கீழ்கண்டவற்றுள் எது மூன்றாவது பாலினத்தில் சேரும் என்று உச்சநீதிமன்றம் 2016-ல் தெளிவுபடுத்தியது?

(A) திருநங்கை

(B) ஆண் மற்றும் பெண் ஓரினச்சேர்க்கையாளர்

(C) இருபால் சேர்க்கையாளர்

(D) மேற்கண்ட அனைத்தும்

3. "What cannot be done directly, cannot be done indirectly". This statement relates to

(A) Doctrine of Pith and Substance

(B) Doctrine of Colorable Legislation

(C) Doctrine of ancillary Powers

(D) Doctrine of waiver

"நேரடியாக செய்ய இயலாததை மறைமுகமாகவும் செய்ய இயலாது" இந்த கூற்று எதனுடன் சம்மந்தப்பட்டது?

(A) உட்கருவும் அடிப்படைப்பொருள் கூறும் என்னும் கோட்பாடு

(B) நன்கு மறைக்கும்படி அமைந்த சட்டம் இயற்றல் கோட்பாடு

(C) துணை அதிகார கோட்பாடு

(D) உரிமை விடுப்பு கோட்பாடு

4. Statement : A writ of Habeas Corpus seeking for release of an animal from illegal custody is maintainable.

Reason : Animal has right to life.

(A) Statement as well as Reason are correct

(B) Statement is correct, but Reason is not correct

(C) Statement is not correct. Hence Reason is of no significance

(D) Both the Statement and Reason are not correct

கூற்று : சட்டவிரோத பாதுகாப்பிலிருந்து ஒரு விலங்கை விடுவிப்பதற்கான ஒரு ஆட்கொணர்வு நீதிப்பேராணை நிலைநிற்கத்தக்கது?

காரணம் : விலங்கிற்கு வாழ்வதற்கான உரிமை இருக்கிறது.

(A) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரியானவை

(B) கூற்று சரியானது ஆனால் காரணம் சரியானதல்ல

(C) கூற்று சரியானதல்ல ஆகவே காரணம் முக்கியத்துவம் பெறாது

(D) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரியானதல்ல

5. Which of the following is/are correct?

I. The right to property is a constitutional right

II. The right to property is a human right.

III. The right to property is not a fundamental right.

(A) Statements II and III alone are correct

(B) Statement III alone is correct

(C) All the above statements are not correct

(D) All the above statements are correct

கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

I. சொத்துரிமை என்பது ஒரு அரசியலமைப்பு உரிமையாகும்

II. சொத்துரிமை என்பது ஒரு மனித உரிமையாகும்

III. சொத்துரிமை என்பது ஒரு அடிப்படை உரிமையல்ல

(A) கூற்றுக்கள் II மற்றும் III மட்டும் சரியானது

(B) கூற்று III மட்டும் சரியானது

(C) மேற்கண்ட அனைத்து கூற்றுகளும் சரியானதல்ல

(D) மேற்கண்ட அனைத்து கூற்றுகளும் சரியானவை

6. Generally, to claim adverse possession in the property belonged to a Hindu temple, the claimant must have been enjoying the property openly, continuously, uninterruptedly with hostile attitude for a period of

(A) 12 years (B) 30 years

(C) 60 years (D) None of the above

ஒரு இந்துக் கோவிலுக்கு பார்த்தியப்பட்ட சொத்தில் பொதுவாக எதிரிடை அனுபவ பாத்தியதை கோருவதற்கு, அவ்விதம் கோருபவர் எவ்வளவு காலம் அந்த சொத்தை வெளிப்படையாகவும், தொடர்ச்சியாகவும் இடையூறின்றி எதிரிடையாக அனுபவித்திருக்க வேண்டும்?

(A) 12 வருடங்கள் (B) 30 வருடங்கள்

(C) 60 வருடங்கள் (D) மேற்கண்ட எதுவுமில்லை

7. Statement I : The remedies given to allottees of flats/apartments are concurrent remedies under Real Estate (Regulation and Development) Act 2016 and Insolvency And Bankruptcy Code 2016.

Statement II : In case of conflict between the Real Estate (Regulation and Development) Act 2016 and Insolvency And Bankruptcy Code 2016, the former will prevail.

Statement III : In case of conflict between the Real Estate (Regulation and Development) Act 2016 and Insolvency And Bankruptcy Code 2016, the latter will prevail.

Which of the above statements is/are correct?

(A) Statement I alone is correct

(B) Statements I and II alone are correct

(C) Statements I and III alone are correct

(D) Statement II alone is true

கூற்று I - அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீட்டாளர்களுக்கு கொடுக்கப்பட்ட, நிலம் மற்றும் மனை (ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி) சட்டம் 2016ன் கீழான நிவாரணங்களும் மற்றும் நொடிப்பு மற்றும் திவால் சட்டம் 2016ன் கீழான நிவாரணங்களும் ஒருங்கியல் நிவாரணங்களாகும்.

கூற்று II - நிலம் மற்றும் மனை (ஒழுங்கு முறை மற்றும் வளர்ச்சி) சட்டம் 2016 மற்றும் நொடிப்பு மற்றும் திவால் சட்டம் 2016 ஆகியவற்றிற்கிடையே முரண்பாடு இருப்பின், நிலம் மற்றும் மனை (ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி) சட்டம் 2016 மேலோங்கி நிற்கும்.

கூற்று III - நிலம் மற்றும் மனை (ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி) சட்டம் 2016 மற்றும் நொடிப்பு மற்றும் திவால் சட்டம் 2016 ஆகியவற்றிற்கிடையே முரண்பாடு இருப்பின், நொடிப்பு மற்றும் திவால் சட்டம் 2016 மேலோங்கி நிற்கும்.

மேற்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) கூற்று I மட்டும் சரியானது

(B) கூற்றுக்கள் I மற்றும் II மட்டும் சரியானது

(C) கூற்றுக்கள் I மற்றும் III மட்டும் சரியானது

(D) கூற்று II மட்டும் சரியானது

8. The information as to the assests and liabilities and moveable and immoveable properties of a Government servant

I. can be denied on the ground that the information sought would fall under personal information.

II. can not be denied because Since the Government servant discharges a public duty, the information would not fall under personal information

III. can be denied on the ground that the disclosure of information would cause invasion of privacy

IV. cannot be denied where the "larger public interest" justifies the disclosure of such information

Which of the above are correct?

(A) I and III are correct
(B) I, III and IV are correct
(C) II and IV are correct
(D) I alone is correct

ஒரு அரசு ஊழியரின் சொத்து மற்றும் கடன் மற்றும் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பற்றிய தகவலை

I. கேட்கப்படும் தகவல் தனிநபர் தகவல் என்பதால் கொடுக்க இயலாது.

II. அரசு ஊழியர் பொது கடமையை ஆற்றுவதால் அந்த தகவல் தனி நபர் தகவலின்கீழ் வராது என்பதாலும் தகவலை கொடுக்க மறுக்க முடியாது.

III. தகவலை கொடுத்தால் அது தனிநபர் உரிமையை மீறுவதாகும் என்பதால் தகவலை கொடுக்க மறுக்கலாம்.

IV. பொதுவான நலன், தகவல் வெளிப்படுத்தலை நியாயப்படுத்தினால் தகவலை கொடுக்க மறுக்க முடியாது.

மேற்கண்டவைகளில் எது சரியானது.

(A) I மற்றும் III மட்டும் சரியானது
(B) I, III மற்றும் IV மட்டும் சரியானது
(C) II மற்றும் IV மட்டும் சரியானது
(D) I மட்டும் சரியானது

9. Rejection of an application for permission to sue as an indigent person

(A) does not bar a fresh application on the same cause of action if moved along with amended description of property

(B) does not bar a fresh application on the same cause of action with the leave of the court

(C) bars a fresh application on the same cause of action

(D) none of the above

வறியவராக வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கோரும் மனு நிராகரிக்கப்பட்டால்

(A) திருத்தப்பட்ட சொத்து விவரத்துடன் அதே வழக்கு மூலத்தின் அடிப்படையில் ஒரு புது மனுவை தாக்கல் செய்ய தடையில்லை

(B) நீதிமன்ற அனுமதியுடன் அதே வழக்கு மூலத்தின் அடிப்படையில் புதிதாக ஒரு மனுவை தாக்கல் செய்ய தடையில்லை

(C) அதே வழக்கு மூலத்தின் அடிப்படையில் புது மனுவை தாக்கல் செய்ய தடை இருக்கிறது

(D) மேற்கண்ட எதுவுமில்லை

10. Limitation for filing an application under order XX Rule 11(2) of Code of Civil Procedure, 1908 for payment by installments is

(A) No limitation
(B) 30 days
(C) 90 days
(D) 60 days

தொகையை தவணை முறைகளில் செலுத்த உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908 கட்டளை 20 விதி 11(2)ன் கீழ் ஒரு மனுவை தாக்கல் செய்வதற்கான காலவரம்பு

(A) காலவரம்பு இல்லை
(B) 30 நாட்கள்
(C) 90 நாட்கள்
(D) 60 நாட்கள்

11. The civil court

I. Can issue a warrant to arrest a person who resides outside the local limits of the court.

II. Can issue a warrant to arrest the judgment debtor who resides outside the local limits of the said court in execution of decree

III. Cannot issue a warrant to arrest a person who resides outside the local limits of the court.

IV. Cannot issue a warrant to arrest the judgment debtor who resides outside the local limits of the said court in execution of decree.

Which of the above statements are correct?

(A) statements I and II alone are correct (B) statements III and IV alone are correct

(C) statements I and IV alone are correct (D) statements II and III alone are correct

I. ஒரு உரிமையியல் நீதிமன்றம் அதன் ஆள்வரை அதிகார வரம்பிற்கு அப்பால் குடியிருக்கும் ஒரு நபரை கைது செய்வதற்கான பிடி ஆணையை பிறப்பிக்கலாம்.

II. ஒரு உரிமையியல் நீதிமன்றம் ஒரு தீர்ப்பாணையை நிறைவேற்றுகையில் அந்த நீதிமன்றத்தின் ஆள்வரை அதிகார வரம்பிற்கு அப்பால் வசிக்கும் ஒரு தீர்ப்புக்கடனாளியை கைது செய்வதற்கான ஒரு பிடி ஆணையை பிறப்பிக்கலாம்.

III. ஒரு உரிமையியல் நீதிமன்றம் அதன் ஆள்வரை அதிகார வரம்பிற்கு அப்பால் குடியிருக்கும் ஒரு நபரை கைது செய்வதற்கான பிடி ஆணையை பிறப்பிக்க இயலாது.

IV. ஒரு உரிமையியல் நீதிமன்றம் ஒரு தீர்ப்பாணையை நிறைவேற்றுகையில் அந்த நீதிமன்றத்தின் ஆள்வரை அதிகார வரம்பிற்கு அப்பால் வசிக்கும் ஒரு தீர்ப்புக் கடனாளியை கைது செய்வதற்கான ஒரு பிடி ஆணையை பிறப்பிக்க இயலாது.

மேற்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) கூற்றுக்கள் I மற்றும் II மட்டும் சரியானது (B) கூற்றுக்கள் III மற்றும் IV மட்டும் சரியானது

(C) கூற்றுக்கள் I மற்றும் IV மட்டும் சரியானது (D) கூற்றுக்கள் II மற்றும் III மட்டும் சரியானது

12. Where the plaint is rejected before numbering of suit, the remedy available to the plaintiff is

(A) Appeal under order XXXXI of Civil Procedure Code 1908

(B) Revision

(C) The plaintiff has no remedy

(D) Appeal under order XXXXIII of Civil Procedure Code 1908

ஒரு வழக்கு எண்ணிடப்படுவதற்கு முன்னர் அதன் பிராது நிராகரிக்கப்பட்டால், வாதி

(A) உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908 கட்டளை 41ன் கீழ் மேல்முறையீடு செய்யலாம்

(B) சீராய்வு மனுவை தாக்கல் செய்யலாம்

(C) வாதிக்கு நிவாரணம் எதுவுமில்லை

(D) உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908 கட்டளை 43ன் கீழ் மேல்முறையீடு செய்யலாம்

13. A person had sold more land than he owned to the defendant. The land sold also included the plaintiff's land. Based on the sale deed, the defendant attempted to usurp the property of the plaintiff. The plaintiff succeeded in obtaining a decree of permanent injunction against the defendant. After the death of the defendant, his legal heirs tried to encroach upon the land of the plaintiff. The plaintiff filed an execution application qua the legal heirs of the original defendant/judgment debtor.

Conclusion I : The decree can be executed against the legal heirs of original defendant.

Reason : Section 50 of Code of Civil Procedure 1908 is not confined to a particular kind of decree.

Conclusion II : The decree cannot be executed against the legal heirs of original defendant.

Reason : The cause of action of the plaintiff was of personal nature, and being an issue of personal nature it died with the judgment debtor and could not be sustained against the legal heirs of the judgment debtor. Actio Personalis Moritur Cum Persona.

Which of the above is correct?

(A) Conclusion I is correct, but its reason is not correct
(B) Conclusion II is correct, but its reason is not correct
(C) Conclusion I and its reason are correct
(D) Conclusion II and its reason are correct

ஒரு நபர் அவருக்கு பார்த்தியப்பட்ட சொத்தை விட அதிகமான சொத்தை பிரதிவாதிக்கு விற்றுவிட்டார். அவ்விதம் விற்ற சொத்து வாதியின் சொத்தையும் உள்ளடக்கியிருந்தது. பிரதிவாதி அவருடைய கிரைய ஆவணத்தின் அடிப்படையில் வாதியின் சொத்தையும் அபகரிக்க முற்பட்டார். ஆகவே, வாதி பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளையை பெற்றுவிட்டார். பிரதிவாதி இறந்த பின்னர் அவரது வாரிசுகள் வாதியின் சொத்தை ஆக்கிரமிக்க முயற்சித்தார்கள். பிரதிவாதி/ தீர்ப்பு கடனாளியின் வாரிசுதாரர்களுக்கு எதிராக வாதி ஒரு நிறைவேறுதல் மனுவை தாக்கல் செய்தார்.

முடிவு I – அசல் பிரதிவாதியின் வாரிசுகளுக்கு எதிராக அந்த தீர்ப்பாணையை நிறைவேற்றம் செய்யலாம்.

காரணம் – ஒரு குறிப்பிட்ட வகையான தீர்ப்பாணையை பற்றி மட்டும் உரிமையியல் நடைமுறை சட்டம் 1908ன் பிரிவு 50 ல் குறிப்பிடப்படவில்லை.

முடிவு II – அசல் பிரதிவாதியின் வாரிசுகளுக்கு எதிராக அந்த தீர்ப்பாணையை நிறைவேற்றம் செய்ய முடியாது.

காரணம் – வாதியின் வழக்கு மூலம் தனிப்பட்ட தன்மை கொண்டது, அது தனிநபர் சம்மந்தப்பட்டது, ஆகவே, அது தீர்ப்பு கடனாளியுடன் இறந்துவிடும். அது தீர்ப்பு கடனாளியின் வாரிசுகளுக்கு எதிராக நிலைநிற்காது. ஆளை பொறுத்த வழக்கு ஆளுடன் முடிவடைந்துவிடும்.

மேற்கண்டவைகளில் எது சரியானது?

(A) முடிவு I சரியானது, ஆனால் அதனுடைய காரணம் சரியல்ல.
(B) முடிவு II சரியானது, ஆனால் அதனுடைய காரணம் சரியல்ல.
(C) முடிவு I மற்றும் அதனுடைய காரணம் சரியானது.
(D) முடிவு II மற்றும் அதனுடைய காரணம் சரியானது.

14. A plaintiff filed a suit as an indigent person with the permission of Court. He withdrew the suit by filing necessary application with liberty to file a fresh suit. The suit was dismissed as withdrawn and liberty was given. Under these circumstances,

I. The court can take steps to recover the court fee.

II. The plaintiff has to pay the court fee only after disposal of the subsequent suit to be filed by him since he obtained liberty to file fresh suit.

III. The plaintiff need not pay the court fee since the suit was not dismissed either on merits or for default.

Which of the above statements is/are correct?

(A) Statements II and III alone are correct

(B) Statement I alone is correct

(C) Statement II alone is correct

(D) Statement III alone is correct

நீதிமன்ற அனுமதியுடன் வறியவர் என்ற முறையில் வாதி ஒரு வழக்கை தாக்கல் செய்தார். உரிய மனுவை தாக்கல் செய்து, புது வழக்கை தாக்கல் செய்வதற்கான உரிமையை பெற்று வாதி வழக்கை வாபஸ் பெற்றுவிட்டார். நீதிமன்றம் வாதி கேட்ட அனுமதியை கொடுத்துவிட்டு, வாதி வழக்கை வாபஸ் பெற்றுவிட்டார் என்ற அடிப்படையில் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது. இந்த சூழ்நிலைகளில்,

I. நீதிமன்ற கட்டணத்தை வசூல் செய்ய நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கலாம்.

II. வாதி புது வழக்கை செய்ய அனுமதி பெற்று இருப்பதால், புது வழக்கு முடிவுக்கு வந்த பின்னர் தான் வாதி நீதிமன்ற கட்டணத்தை செலுத்த வேண்டும்.

III. தகுதியின் அடிப்படையிலோ அல்லது தவறுகைக்காகவோ வழக்கு தள்ளுபடி செய்யப்படாததால் வாதி நீதிமன்ற கட்டணத்தை செலுத்த தேவையில்லை.

மேற்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) கூற்றுக்கள் II மற்றும் III மட்டும் சரியானது.

(B) கூற்று I மட்டும் சரியானது.

(C) கூற்று II மட்டும் சரியானது.

(D) கூற்று III மட்டும் சரியானது.

15. Statement I – Section 14 of the Limitation Act 1963 would apply to the application filed under section 34 of Arbitration and Conciliation Act.

Statement II – Section 14 of the Limitation Act 1963 would not apply to the application filed under section 34 of Arbitration and Conciliation Act, since the Arbitration and Conciliation Act is a self contained code.

Statement III – Section 14 of the Limitation Act 1963 would not apply to the application filed under section 34 of Arbitration and Conciliation Act, since the Limitation Act is general law where as the Arbitration and Conciliation Act is a special law.

Which of the above statements are correct?

(A) Statement I alone is correct

(B) Statement II alone is correct

(C) Statement II is correct but its reason is not correct

(D) Statement III alone is correct

கூற்று I – இசைவு மற்றும் சமரச சட்டத்தின் பிரிவு 34ன்கீழ் தாக்கல் செய்யப்படும் மனுவிற்கு காலவரையறை சட்டத்தின் பிரிவு 14 பொருந்தும்.

கூற்று II – இசைவு மற்றும் சமரச சட்டம் ஒரு சுய உள்ளடக்க சட்டம் என்பதால் அந்த சட்டத்தின் பிரிவு 34ன்கீழ் தாக்கல் செய்யப்படும் மனுவிற்கு காலவரையறை சட்டப்பிரிவு 14 பொருந்தாது.

கூற்று III – காலவரையறை சட்டம் பொதுவான சட்டம் என்பதாலும், இசைவு மற்றும் சமரச சட்டம் சிறப்பு சட்டம் என்பதாலும், இசைவு மற்றும் சமரச சட்டத்தின் பிரிவு 34ன்கீழ் தாக்கல் செய்யப்படும் மனுவிற்கு காலவரையறை சட்டத்தின் பிரிவு 14 பொருந்தாது.

மேற்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

(A) கூற்று I மட்டும் சரியானது.

(B) கூற்று II மட்டும் சரியானது.

(C) கூற்று II சரியானது ஆனால் அதனுடைய காரணம் சரியானதல்ல.

(D) கூற்று III மட்டும் சரியானது.

16. An agreement between the parties comprised a two-tier arbitration agreement by which the first tier was to be settled by arbitration in India and if either party disagrees with the result, that party will have the right to appeal to a second arbitration to be held by the International Chambers of Commerce ("ICC") in London. The arbitrator appointed by the Indian Council of Arbitration made a 'Nil Award'. Thereupon, the aggrieved party invoked the second part of the arbitration agreement, wherein the arbitrator, appointed by the ICC, delivered an award in London, dated 29.09.2019.

Under the above circumstances, which of the following are correct?

I. Since the arbitral awards passed in India and in London by arbitrators who had concurrent jurisdiction, were mutually destructive of each other and thus, neither could be enforced.

II. A two tier arbitration clause is non est in the eyes of law and would be invalid under Section 23 of the Indian Contract Act, 1872 and thus, the foreign award cannot be enforced in India.

III. A two-tier arbitration procedure as provided in the contract between the parties is permissible under the laws of India. But the award passed in London cannot be enforced in India under section 48 of Arbitration and Conciliation Act 1996.

IV. A two-tier arbitration procedure as provided in the contract between the parties is permissible under the laws of India. The award passed in London can be enforced in India under section 48 and 49 of Arbitration and Conciliation Act 1996.

(A) Statement I and II alone are correct (B) Statement III alone is correct
(C) Statement IV alone is correct (D) Statement II alone is correct

தரப்பினர்களுக்கிடையேயான ஒப்பந்தம் இரண்டடுக்கு இசைவு ஒப்பந்தத்தை கொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின்படி, முதல் அடுக்கு இந்தியாவில் உள்ள இசைவு தீர்ப்பாயத்தில் தீர்க்கப்பட வேண்டும் மற்றும் அதன் முடிவினை ஏதேனும் ஒரு தரப்பினர் ஏற்க மறுத்தால், அந்த தரப்பினர் லண்டனில் உள்ள பன்னாட்டு வர்த்தக மையத்தில் நடத்தப்படும் இரண்டாம் இசைவு தீர்ப்பாயத்திற்கு மேல்முறையீடு செய்யும் உரிமையை கொண்டிருப்பார். இந்திய இசைவு கவுன்சிலால் நியமிக்கப்பட்ட இசைவு தீர்ப்பாளர் இசைவு தீர்ப்பை பிறப்பிக்கவில்லை. அதன் பேரில் பாதிக்கப்பட்ட தரப்பினர் இசைவு ஒப்பந்தத்தின் இரண்டாம் பாகத்தினை பயன்படுத்திக் கொண்டார். அதன்படி ஐசிசியால் நியமனம் செய்யப்பட்ட இசைவு தீர்ப்பாளர் லண்டனில் 29–09– 2019ல் ஒரு இசைவு தீர்ப்பை பிறப்பித்தார். இந்த சூழ்நிலைகளில் கீழ்கண்டவைகளில் எது சரியானவை?

I. ஒருங்கியல் அதிகார வரம்பை கொண்ட இந்தியா மற்றும் லண்டனில் உள்ள இசைவு தீர்ப்பாளர்களால் பிறப்புவிக்கப்பட்ட தீர்ப்புகள் ஒன்றையொன்று அழிக்கும் வகையில் இருப்பதால், இரண்டு தீர்ப்புகளையும் நிறைவேற்றம் செய்ய இயலாது.

II. இரண்டடுக்கு இசைவுக்கான சரத்து என்பது சட்டத்தில் இல்லை மற்றும் அது இந்திய ஒப்பந்த சட்டம் 1872ன் பிரிவு 23ன்கீழ் செல்லாது. ஆகவே, வெளிநாட்டில் ஏற்படுத்திய தீர்ப்பை இந்தியாவில் நிறைவேற்றம் செய்ய இயலாது.

III. தரப்பினர்களுக்கிடையேயான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட இரண்டடுக்கு இசைவு முறை இந்திய சட்டங்களின்படி அனுமதிக்கத்தக்கது. ஆனால், லண்டனில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை இசைவு மற்றும் சமரச சட்டம் 1996ன் பிரிவு 48ன் கீழ் இந்தியாவில் நிறைவேற்றம் செய்ய இயலாது.

IV. தரப்பினர்களுக்கிடையேயான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட இரண்டடுக்கு இசைவு முறை இந்திய சட்டங்களின்படி அனுமதிக்கத்தக்கது. ஆனால், லண்டனில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை இசைவு மற்றும் சமரச சட்டம் 1996ன் பிரிவு 48 மற்றும் 49ன் கீழ் இந்தியாவில் நிறைவேற்றம் செய்ய முடியும்.

(A) கூற்று I மற்றும் II மட்டும் சரியானது (B) கூற்று III மட்டும் சரியானது
(C) கூற்று IV மட்டும் சரியானது (D) கூற்று II மட்டும் சரியானது

17. A received a judgment on 15th June 2019 in the Commercial Court in a dispute between A and B. A is not satisfied with the order of Commercial Court. So A wants to file an appeal to the Commercial Appellate Court of the concerned High Court. A shall file an appeal

(A) On or before 14th August 2019

(B) On or before 13th September 2019

(C) On or before 15th July 2019

(D) On or before 30th July 2019

வர்த்தக நீதிமன்றத்தில் A மற்றும் B க்கு இடையேயான வழக்கில் 15-06-2019ல் ஒரு தீர்ப்பை A பெறுகிறார். அந்த தீர்ப்பில் திருப்தி அடையாத A சம்மந்தப்பட்ட உயர்நீதிமன்றத்தின் வர்த்தக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய விரும்புகிறார். A ———— க்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும்.

(A) 14-08-2019 அன்று அல்லது அதற்கு முன்னர்

(B) 13-09-2019 அன்று அல்லது அதற்கு முன்னர்

(C) 15-07-2019 அன்று அல்லது அதற்கு முன்னர்

(D) 30-07-2019 அன்று அல்லது அதற்கு முன்னர்

18. Consideration for mortgage can be

(A) Present only

(B) Future only

(C) Past, Present and Future

(D) Present and Future

ஒரு அடமானத்திற்கான மறுபயன்

(A) நிகழ்காலத்திற்கு மட்டும் இருக்க முடியும்

(B) எதிர்காலத்திற்கு மட்டும் இருக்க முடியும்

(C) கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்காலத்திற்கு இருக்க முடியும்

(D) நிகழ்கால மற்றும் எதிர்காலத்திற்கு மட்டும் இருக்க முடியும்

19. Which among the following is not correct with respect to conditional gift?

(A) In a gift made for a specific charitable purpose, the donor can recall the gift on breach of such condition

(B) The relationship between donor and donee is fiduciary in nature. The donee is mere custodian till condition is complied with and till then gift does not take effect

(C) Conditional gift is a gift simpliciter which cannot be revoked

(D) When no specific condition for revocation is made in the deed, in the event of failure of the donee, the gift cannot be revoked

நிபந்தனை கொடை சம்மந்தமாக கீழ்கண்டவற்றில் எது சரியல்ல?

(A) ஒரு குறித்த தர்ம காரியத்திற்காக ஏற்படுத்தப்பட்ட கொடையில் கொடையாளர் அந்த கொடையின் நிபந்தனை மீறப்படும் பட்சத்தில் அந்த கொடையை திரும்ப பெறலாம்

(B) கொடையளித்தவர் மற்றும் கொடைபெற்றவருக்கு இடையேயான உறவு நம்பகமானது கொடையில் உள்ள நிபந்தனை கடைபிடிக்கும் வரை கொடையை பெற்றவர் வெறும் காப்பாளர் ஆவார் மற்றும் அதுவரை அந்த கொடை அமுலுக்கு வராது

(C) நிபந்தனை கொடை என்பது ஒரு சாதாரண கொடை ஆகும். அதை ரத்து செய்ய முடியாது

(D) அந்த ஆவணத்தில் ரத்து செய்வதற்கான நிபந்தனை குறிப்பிடப்படாத பொழுது கொடை பெற்றவரின் தவறுகைக்காக அந்த கொடையை ரத்து செய்ய முடியாது

20. What is "marshalling in favour of purchaser"?

Answer I : If the owner of two or more properties mortgages them to one person and then sells one or more of the properties to another person, the buyer is entitled to have the mortgage debt satisfied out of the properties not sold to him so far as the same will extend.

Answer II : Where a mortgagee has the means of satisfying his debts out of several properties, he shall exercise his right so as not to prejudice the purchaser of one of them as far as possible.

Which of the above answers is/are correct?

(A) Answer I alone is correct

(B) Answer II alone is correct

(C) Both the answers are correct

(D) Both the answers are not correct

கிரையம் பெற்றவருக்கு ஆதரவான அடமான வரிசையுரிமை என்றால் என்ன?

பதில் I : இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்களின் உரிமையாளர் அந்த சொத்துக்களை ஒரு நபருக்கு அடமானம் வைக்கிறார். அவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்களை மற்றொரு நபர்க்கு விற்பனை செய்கிறார். கிரையம் பெற்றவர் அவருக்கு கிரையம் கொடுக்கப்படாத சொத்துக்களில் இருந்து அது போதுமானதாக இருப்பின் அடமான கடன் தீர்ந்துவிட்டதாக கோர கிரையம் பெற்றவருக்கு உரிமையிருக்கிறது.

பதில் II : அடமானம் பெற்றவர் பல சொத்துக்களிலிருந்து அவருடைய அடமான கடனை வசூலிக்க அவருக்கு வழியிருந்தால் முடிந்தவரை கிரையம் பெற்றவருக்கு பாதகம் இல்லாத வகையில் அடமானம் பெற்றவர் அவருடைய உரிமையை பயன்படுத்த வேண்டும்

மேற்கண்ட பதில்களில் எது சரியானது?

(A) பதில் I- மட்டும் சரியானது

(B) பதில் II-மட்டும் சரியானது

(C) இரு பதில்களும் சரியானது

(D) இரு பதில்களும் சரியானது அல்ல

21. The defendant having executed a sale deed in favour of the plaintiff refused to come to Sub-Registrar's office to register the sale deed. The plaintiff filed a suit for specific performance for direction to register the sale deed and for delivery of possession.

I. The suit is maintainable before the Civil Court.

II. The plaintiff has complete remedy under Registration Act and the document has no efficacy in law as the same is not registered. Hence, the suit is not maintainable

III. The suit is not maintainable because the plaintiff has no right to seek specific performance once the sale deed has been executed.

Which of the above is/are correct?

(A) II alone is correct
(B) III alone is correct
(C) I alone is correct
(D) II and III are correct

வாதிக்கு பிரதிவாதி ஒரு கிரைய ஆவணத்தை எழுதிக் கொடுத்து விட்டு, அதை பதிவு செய்ய சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வர பிரதிவாதி மறுத்துவிட்டார். கிரைய ஆவணத்தை பதிவு செய்ய குறித்த வகை நிவாரணம் கோரியும் சொத்தை ஒப்படைக்க கோரியும் வாதி ஒரு வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்

I. உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலைநிற்கதக்கது

II. பதிவு சட்டத்தின் கீழ் வாதிக்கு முழுமையான தீர்வு இருக்கிறது ஆவணம் பதிவு செய்யப்படாததால், அந்த ஆவணத்திற்கு எந்த பலனும் இல்லை. ஆகவே, வழக்கு நிலைநிற்கதக்கது அல்ல

III. கிரைய ஆவணத்தை எழுதி கொடுத்து விட்டதால் குறித்த வகை நிவாரணம் கோர வாதிக்கு உரிமை இல்லை. ஆகவே வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல.

மேற்கண்டவைகளில் எது சரியானது?

(A) II மட்டும் சரியானது
(B) III மட்டும் சரியானது
(C) I மட்டும் சரியானது
(D) II மற்றும் III சரியானது

22. In the following cases, who cannot acquire easementary right?

(A) Easmentary right cannot be claimed by co-owner in respect of a land held by him in co-ownership with other

(B) No lessee can acquire an easement over the immovable property leased to him for the beneficial enjoyment of another property

(C) A trespasser cannot acquire the easement

(D) All the above

கீழ்கண்டவைகளில் யார் வசதியுரிமையை பெற முடியாது?

(A) ஒரு கூட்டுரிமையாளர் மற்றொரு கூட்டுரிமையாளருடன் கூட்டுரிமையாளர் என்ற அடிப்படையில் கொண்டிருக்கும் ஒரு சொத்து சம்மந்தமாக வசதியுரிமை கோர முடியாது

(B) குத்தகையை பெற்றவர் மற்றொரு சொத்தை வசதியாக அனுபவிப்பதற்கு அவருக்கு குத்தகைக்கு விடப்பட்ட அசையா சொத்தின் மீது வசதியுரிமை கோர இயலாது

(C) அத்துமீறி நுழைபவர் வசதியுரிமையை கோர இயலாது

(D) மேலே கண்ட அனைவரும்

23. A takes a loan from B with the promise to pay it back within six months. It is also stipulated that on the failure to pay within six months, A will be liable to pay double the amount borrowed. Under these circumstances, which one of the following is the correct statement?

(A) It is in the nature of penalty. Therefore, a reasonable rate of interest can be claimed

(B) It is in the nature of liquidated damage. Hence the stipulated amount can be claimed

(C) It is a valid agreement. Hence A is liable to pay double the amount borrowed

(D) None of the above

6 மாதங்களில் திரும்ப கொடுப்பதாக கூறி B யிடமிருந்து A ஒரு கடன் பெறுகிறார். அந்த கடனை 6 மாதங்களில் செலுத்த தவறும் பட்சத்தில் கடன் பெற்ற தொகையை விட இரு மடங்கு தொகையை கொடுக்க A கடமைபட்டவர் என்று ஒரு நிபந்தனையிடப்படுகிறது. இந்த சூழ்நிலைகளில் கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

(A) நிபந்தனை தண்டத்தொகை தன்மையை கொண்டதாக இருப்பதால் நியாயமான வட்டி விகிதத்தை மட்டுமே கோர முடியும்

(B) நிபந்தனை அறுதியிடப்பட்ட நஷ்டஈட்டு தன்மையை கொண்டதாக இருப்பதால் நிர்ணயிக்கப்பட்ட தொகையை கோரலாம்

(C) இது ஒரு செல்லுபடியாகும் ஒப்பந்தமாகும். ஆகவே கடன் பெற்ற தொகையை விட இருமடங்கு தொகையை கொடுக்க A கடமைப்பட்டவர் ஆவார்

(D) மேலே கண்ட எதுவுமில்லை

24. Which one of the following constitutes an offer?

(A) Display of goods with price tags in a self-service shop

(B) Advertisement announcing a reward of Rs. 5000 to any person who would find the missing dog of the advertiser

(C) When a person advertises that he has a stock of books to sell at a flat rate of Rs. 100 per book

(D) An auctioneer's announcement that specified goods will be sold by auction on a certain day

கீழ்கண்டவைகளில் எது ஒரு முனைவை ஏற்படுத்தும்?

(A) சுய சேவை கடையில் விலை அட்டைகளுடன் வைக்கப்பட்ட பொருட்கள்

(B) விளம்பரம் செய்தவரின் நாயை கண்டுபிடித்து கொடுக்கும் நபருக்கு ரூபாய். 5,000 த்தை வெகுமதியாக கொடுப்பதை அறிவிக்கும் விளம்பரம்

(C) ஒரு நபர் ஒரு புத்தகம் 100 ரூபாய் என்ற விகிதத்தில் விற்க, புத்தக இருப்பை வைத்திருப்பதாக ஒரு நபர் விளம்பரம் செய்யும் பொழுது

(D) ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிடப்பட்ட சரக்குகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்று ஏலம் விடுபவரின் அறிவிப்பு

25. Which is the correct sequence in formation of a contract?

(A) Offer, acceptance, consideration, agreement

(B) Offer, Consideration, acceptance, agreement

(C) Agreement, consideration, offer, acceptance

(D) Offer, acceptance, agreement, consideration

ஒரு ஒப்பந்ததை உருவாக்க, எது சரியான வரிசையில் இருக்கிறது?

(A) முனைவு, ஏற்பு, மறுபயன், உடன்பாடு

(B) முனைவு, மறுபயன், ஏற்பு, உடன்பாடு

(C) உடன்பாடு, மறுபயன், முனைவு, ஏற்பு

(D) முனைவு, ஏற்பு, உடன்பாடு, மறுபயன்

26. X, a theatre critic, was debarred from entering a theatre. He asked his friend to buy a ticket for him. On the night of the performance, he was refused admission. What is the remedy available to X?

(A) X must be allowed to enter as he is carrying a valid ticket

(B) X should not be allowed to enter as the ticket was not sold to him

(C) X should not be allowed to enter as there was no valid contract between the theatre and X

(D) X can sue the theatre for breach of contract

X என்ற ஒரு நாடக விமர்சகர் கொட்டகைக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டார். அவருக்காக ஒரு டிக்கெட்டை வாங்கி வரும்படி அவரது நண்பரிடம் அவர் கேட்டார். நாடகம் நடக்கும் அன்று இரவு அவர் கொட்டகைக்குள் நுழைய மறுக்கப்பட்டார். X என்பவருக்கு கிடைக்கக்கூடிய நிவாரணம் என்ன?

(A) செல்லக்கூடிய டிக்கெட்டை பெற்றிருப்பதால் கொட்டகைக்குள் நுழைய X அனுமதிக்கப்பட வேண்டும்

(B) X என்பவருக்கு டிக்கெட் விற்கப்படாததால் கொட்டகைக்குள் நுழைய அவர் அனுமதிக்கப்பட கூடாது

(C) கொட்டகைக்கும் X என்பவருக்கும் இடையே செல்லுபடியாகும் ஒப்பந்தம் இல்லாததால், கொட்டகைக்குள் நுழைய X அனுமதிக்கப்பட கூடாது

(D) ஒப்பந்தத்தை மீறியதற்காக X கொட்டகையின் மீது வழக்கு தாக்கல் செய்யலாம்

27. Which of the following changes was not incorporated by the 2018 Amendment to Specific Relief Act, 1963?

(A) Courts are debarred from granting injunction in infrastructure projects if such injunction will lead to delay in completion

(B) Timebound disposal of suits for specific performance

(C) Courts have been granted the power to engage experts to assist the court on technical issues

(D) A contract made by a trustee in excess of his powers or in breach of trust cannot be specifically enforced

கீழ்கண்டவைகளில் எந்த மாற்றங்கள், குறித்த வகை நிவாரணச் சட்டம் 1963 ல் 2018 ல் ஏற்பட்ட திருத்தத்தில் குறிப்பிடப்படவில்லை

(A) கட்டமைப்பு திட்டங்கள் முடிவடைவது தாமதமாகும் என்ற நிலையில் கட்டமைப்பு திட்டங்களில் உறுத்துக்கட்டளை வழங்க நீதிமன்றங்கள் தடை செய்யப்படுகிறது

(B) குறித்த வகை நிறைவேற்றத்திற்கான வழக்குகளை காலக்கெடுவுக்குள் முடிவு செய்வது

(C) தொழில் நுட்பம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளில் நீதிமன்றத்திற்கு உதவ நிபுணர்களை பயன்படுத்த நீதிமன்றங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது

(D) தனக்குள்ள அதிகாரத்திற்கு அதிகமாக அல்லது அறங்காவலை மீறி ஒரு அறங்காவலரால் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை குறிப்பாக செயல்படுத்த முடியாது

28. Which of the following statements are correct?

I. Even if the court holds that the plaintiff is not entitled to specific performance, the court can decide whether the plaintiff is entitled to damages for breach of contract by the defendant, though the damage is not claimed

II. When the court holds that the plaintiff is not entitled to specific performance, the court can decide only about whether the plaintiff is entitled to get back the advance amount from the defendant, though the advance amount is not claimed

III. Sale agreement holder can object under Order XXI Rule 58 of Code of Civil Procedure 1908 to attachment of property

(A) All the above statements are correct

(B) Statement II alone is correct

(C) Statements I and III alone are correct

(D) Statement I alone is correct

கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானவை?

I. குறித்தவகை நிறைவேற்றம் கோர வாதிக்கு உரிமையில்லை என்று நீதிமன்றம் முடிவு செய்தாலும், பிரதிவாதி ஒப்பந்தத்தை மீறியதற்காக, வாதி நஷ்டஈட்டை கோராவிட்டாலும், வாதிக்கு நஷ்டஈடு கிடைக்கக் கூடியதா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கலாம்.

II. குறித்தவகை நிறைவேற்றம் கோர வாதிக்கு உரிமையில்லை என்று நீதிமன்றம் முடிவு செய்தாலும், வாதி முன்பணத்தை கோராவிட்டாலும், வாதி பிரதிவாதியிடமிருந்து முன்பணத்தை திரும்பபெற வாதிக்கும் உரிமை இருக்கிறதா என்பதை மட்டும் தான் நீதிமன்றம் தீர்மானிக்கலாம்.

III. கிரைய ஒப்பந்தம் பெற்றவர், சொத்து ஜப்தி செய்யப்பட்டதை எதிர்த்து உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908ன் கட்டளை 21 விதி 58ன் கீழ் ஆட்சேபனை செய்யலாம்

(A) மேலே கண்ட அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

(B) கூற்று II மட்டும் சரியானது.

(C) கூற்றுக்கள் I மற்றும் III மட்டும் சரியானது.

(D) கூற்று I மட்டும் சரியானது.

29. By virtue of section 36 of Indian Partnership Act, 1932, an outgoing partner has

(A) A right to carry on a business competing with that of the firm

(B) No right to carry on a business competing with that of the firm

(C) A right to carry on a business competing with that of the firm only with the permission of all the partners even though under the contract of partnership there is no restriction imposed

(D) A right to carry on a business competing with that of the firm, only with the permission of the majority of the partners even though in a contract of partnership there is no restriction imposed

இந்திய கூட்டாண்மை பங்குதாரர் சட்டம் 1932ன் பிரிவு 36ன்படி, வெளியே செல்லும் ஒரு பங்குதாரருக்கு

(A) அதே பங்குதாரர் நிறுவனத்துடன் போட்டிபோட்டு தொழிலை செய்ய உரிமை இருக்கிறது.

(B) அதே பங்குதாரர் நிறுவனத்துடன் போட்டிபோட்டு தொழிலை செய்ய உரிமை இல்லை.

(C) கூட்டாண்மை ஒப்பந்தத்தில் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை என்றாலும், அனைத்து பங்குதாரர்களின் அனுமதியுடன் மட்டுமே அதே பங்குதாரர் நிறுவனத்துடன் போட்டிபோட்டு தொழில் செய்யும் உரிமை இருக்கிறது.

(D) கூட்டாண்மை ஒப்பந்தத்தில் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை என்றாலும், பெரும்பான்மையான பங்குதாரர்களின் அனுமதியுடன் மட்டுமே அதே பங்குதாரர் நிறுவனத்துடன் போட்டிபோட்டு தொழில் செய்யும் உரிமை இருக்கிறது.

30. Exceptions to the rule of caveat emptor

I. Fitness of product for the buyer's purpose

II. Goods purchased under Brand name

III. Goods sold by description

IV. Goods of merchantable quality

(A) II, III and IV

(B) III and IV

(C) I and IV

(D) All the above

வாங்குபவரே விழித்திரு என்ற விதிக்குரிய விதிவிலக்குகள் –

I. வாங்குபவரின் நோக்கத்திற்கான தயாரிப்பின் பொருத்தம் (தகுதி)

II. வணிகப் பெயரின் கீழ் வாங்கப்படும் சரக்குகள்

III. தெளிவாக தெரிவித்து விற்கப்படும் பொருட்கள்

IV. வணிகத் தரமான பொருட்கள்

(A) II, III மற்றும் IV

(B) III மற்றும் IV

(C) I மற்றும் IV

(D) மேலே கண்ட அனைத்தும்

31. "Not negotiable" crossing implies that :

(A) The collecting bank should satisfy itself as to the title of the holder before collecting the cheque; or

(B) The cheque cannot be negotiated; or

(C) The cheque cannot be collected as the protection under section 131 of the Negotiable Instruments Act, 1881 is not available in such cases; or

(D) The transferee shall not have and shall not be capable of giving a better title to the cheque than that of the transferor.

"மாற்றமுடியாதது" குறுக்குக் கோடுகள் என்பது

(A) வசூலிக்கும் வங்கி காசோலையை வசூலிப்பதற்கு முன்னர் ஆவணத்தின் உரிமையாளர் குறித்து திருப்தி அடைய வேண்டும் என்பதை குறிக்கிறது அல்லது

(B) காசோலையை மாற்ற முடியாது அல்லது

(C) அத்தகைய நேர்வில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1881ன் பிரிவு 131ன்படியான பாதுகாப்பு கிடைக்காததால் காசோலையை வசூலிக்க முடியாது அல்லது

(D) மாற்றம் செய்பவரை விட மாற்றம் பெற்றவர் காசோலையின் மீது அதிக உரிமையை பெற்றிருக்கவோ, கொடுக்கவோ முடியாது.

32. Which of the following is correct regarding right to inherit property of a missing person?

I. The right to inherit property of a missing person would arise on the date on which he is presumed to have dead.

II. The property will return to the missing person if he returns back, in case his property has become vested in his heir.

III. The property of an ancestor is given to all heirs except to the missing one. His share is reserved. Later he is declared dead. His share will go to his heirs.

(A) I

(B) II

(C) I and III

(D) I and II

காணாமல் போன ஒரு நபரின் சொத்தை வாரிசு முறையில் அடைவதற்கான உரிமை சம்மந்தமாக கீழ்கண்டவைகளில் எது சரியானது?

I. காணாமல் போன நபர் இறந்ததாக அனுமானம் செய்யப்படும் நாளன்று, காணாமல் போனவரின் சொத்தை வாரிசு உரிமையில் பெறுவதற்கான உரிமை எழும்.

II. அவருடைய சொத்து அவருடைய வாரிசுதாரர்களுக்கு சேர்ந்திருப்பின், காணாமல் போன நபர் திரும்ப வந்தவுடன் அவரிடமே சொத்து திரும்ப வந்துவிடும்.

III. மூதையாரின் சொத்து, காணாமல் போன நபரை தவிர மற்ற அனைத்து வாரிசுதாரர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. காணாமல் போனவரின் சொத்து ஒதுக்கி வைக்கப்படுகிறது. பின்னர் அவர் இறந்ததாக விளம்புகைப்படுத்தப்பட்டால், அவரது பங்கு அவரது வாரிசுகளுக்கு சேரும்.

(A) I

(B) II

(C) I மற்றும் III

(D) I மற்றும் II

33. A Muslim girl married during minority, is entitled to dissolution of marriage under The Dissolution of Muslim Marriage Act, 1939 if she proves

(A) She was given in marriage by her father or other guardian

(B) The marriage took place before she attained the age of 18 years

(C) Her consent was not taken for marriage

(D) All of the above

இளவராக இருக்கும்போது திருமணமான ஒரு இஸ்லாமிய பெண், முஸ்லிம் திருமண முறிவு சட்டம் 1939ன் கீழ் திருமண முறிவு பெறுவதற்கு

(A) அவர் அவருடைய தந்தை அல்லது காப்பாளரால் அவர் திருமணம் செய்து கொடுக்கப்பட்டதாக நிரூபிக்கப்பட வேண்டும்.

(B) அவர் 18 வயதை அடைவதற்கு முன்பே அவருக்கு திருமணம் நடந்ததாக நிரூபிக்கப்பட வேண்டும்

(C) திருமணத்திற்கு அவருடைய சம்மதம் பெறப்படவில்லை என்று நிரூபிக்கப்பட வேண்டும்.

(D) மேலே கண்ட அனைத்தும்.

34. Abraham, an Indian Christian has two children namely John and Mary. John died leaving his wife pregnant. Abraham died after the demise of John. Now, the child of John is born. Who is entitled to property of Abraham?

(A) The child and mary have equal share

(B) Mary has full share

(C) The child has 1/3 share

(D) Mary has 1/3 share

ஆபிரகாம் என்ற ஒரு இந்திய கிருஸ்தவருக்கு ஜான் மற்றும் மேரி ஆகிய இரண்டு குழந்தைகள் இருக்கிறது. கர்ப்பமாக இருக்கும் தன் மனைவியை விட்டுவிட்டு ஜான் என்பவர் இறந்துவிடுகிறார். ஜான் இறந்த பின்னர் ஆபிரகாம் என்பவர் இறந்துவிடுகிறார். இப்பொழுது ஜான் என்பவருக்கு ஒரு குழந்தை பிறக்கிறது. ஆபிரகாம் என்பவரின் சொத்துக்கு யார் உரிமையுடையவர்?

(A) குழந்தையும், மேரி என்பவரும் சமமான பங்கை பெறுவார்கள்.

(B) மேரி முழு பங்கையும் பெறுவார்.

(C) குழந்தை1/3 பங்கை பெறும்.

(D) மேரி 1/3 பங்கை பெறுவார்.

35. When a Trust files a suit, it has to obtain leave under section 92 of Code of Civil Procedure in

(A) High Court having original jurisdiction

(B) Subordinate Court or District Court having original jurisdiction

(C) (A) and (B)

(D) None of the above

ஒரு பொறுப்புரிமை அமைப்பு ஒரு வழக்கை தாக்கல் செய்யும் பொழுது எந்த நீதிமன்றத்தில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 92ன் கீழ் அனுமதியை பெற வேண்டும்

(A) அசல் அதிகார வரம்பை கொண்ட உயர்நீதிமன்றம்

(B) அசல் அதிகார வரம்பை கொண்ட சார்பு அல்லது மாவட்ட நீதிமன்றம்.

(C) (A) மற்றும் (B)

(D) மேலே கண்ட எதுவுமில்லை

36. Which of the following statement is/are correct?

I. Suit for management of temple is not maintainable

II. A suit for declaration that suit temple is a private temple is not maintainable

III. A worshiper can file a suit recovery of Waqf property

IV. A suit for declaration that the plaintiff is joint hereditary trustee, is not maintainable

(A) All the above statements are correct

(B) All the above statements are not correct

(C) Statements I, II and IV alone are correct

(D) Statements I and IV alone are correct

கீழ்க்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

I. ஒரு கோவிலை நிர்வகிப்பதற்கான வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல.

II. ஒரு கோவில் தனியார் கோவில் என்று விளம்புகை செய்ய கோரும் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல.

III. வக்ப் சொத்தை வக்பிடம் ஒப்படைக்க கோரி வழிபடுபவர் ஒரு வழக்கை தாக்கல் செய்யலாம்.

IV. வாதி கூட்டு பரம்பரை அறங்காவலர் என்று விளம்புகை செய்ய கோரி தாக்கல் செய்யும் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல.

(A) மேலே கண்ட கூற்றுக்கள் அனைத்தும் சரியானவை.

(B) மேலே கண்ட கூற்றுக்கள் அனைத்தும் சரியானவை அல்ல.

(C) கூற்றுக்கள் I, II மற்றும் IV மட்டும் சரியானது.

(D) கூற்றுக்கள் I மற்றும் IV மட்டும் சரியானது.

37. Which of the following statements is correct?

I. Family Court can exercise jurisdiction in respect of marriage solemnized under Foreign marriage Act 1969.

II. District Court can alone exercise jurisdiction in respect of marriage solemnized under Foreign Marriage Act 1969.

(A) Both the above statements are correct

(B) Both the above statements are not correct

(C) Statement I alone is correct

(D) Statement II alone is correct

கீழ்க்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

I. அயல்நாட்டு திருமண சட்டம் 1969ன் கீழ் நடந்த திருமணங்கள் மீதும் குடும்பநல நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

II. அயல்நாட்டு திருமண சட்டம் 1969ன் கீழ் நடந்த திருமணங்கள் மீது மாவட்ட நீதிமன்றத்திற்கு மட்டுமே அதிகாரம் இருக்கிறது.

(A) மேற்கூறிய இரண்டு கூற்றுக்களும் சரியானது

(B) மேற்கூறிய இரண்டு கூற்றுக்களும் சரியானது அல்ல

(C) கூற்று I மட்டும் சரியானது

(D) கூற்று II மட்டும் சரியானது

38. Joseph has painted a work of art and wishes to protect it under copyright law. What does he need to do for protecting his art work?

(A) The painting is already protected by copyright law once he has painted it and registration is not compulsory. However, registration will give better protection against infringement.

(B) For claiming copyright, he has to necessarily register and also put a copyright notice below the painting to claim copyright in it.

(C) Only by registering the painting with the copyright office in India, he can claim copyright in it and protect it.

(D) He has to publish his painting, if he wants to claim copyright in it.

ஜோசப் என்பவர் ஒரு கலை படைப்பை வரைந்திருக்கிறார். அதை அவர் பதிப்புரிமை சட்டத்தின் கீழ் பாதுகாக்க விரும்புகிறார். அவர் கலைவேலைப்பாட்டை பாதுகாக்க என்ன செய்ய வேண்டும்?

(A) ஒரு கலைபடைப்பை செய்து முடித்தவுடன், அது பதிப்புரிமை சட்டத்தால் பாதுகாக்கப்படுகிறது. அதை பதிவு செய்வது கட்டாயம் இல்லை. இருப்பினும் அதை பதிவு செய்தால், அவருடைய பதிப்புரிமை மீறப்படுவதை பாதுகாக்கும்

(B) பதிப்புரிமை பெறுவதற்கு அவர் கலைப்படைப்பை பதிவு செய்து அவருடைய படைப்புக்கு கீழ் பதிப்புரிமை அறிவிப்பை செய்ய வேண்டும்

(C) இந்தியாவில் உள்ள பதிப்புரிமை அலுவலகத்தில், அந்த கலைப் படைப்பை பதிவு செய்தால் மட்டுமே அவர் பதிப்புரிமை மற்றும் அதன் பாதுகாப்பை பெற முடியும்

(D) பதிப்புரிமை பெற விரும்பினால் எனில் அவர் தனது கலை படைப்பை வெளியிட வேண்டும்

39. Which of the following reasons shall be necessarily stated in the notice issued under section 106 of Transfer of Property Act?

(A) Non payment of rent

(B) Requirement of building for own purpose

(C) Damages caused to the building

(D) Reasons need not be assigned

சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 106 ன் கீழ் அனுப்பப்படும் அறிவிப்பில் கீழ்கண்ட காரணங்களில் எதை கட்டாயமாக குறிப்பிட வேண்டும்?

(A) வாடகை கொடுக்காதது

(B) சொந்த நோக்கத்திற்காக கட்டிடம் தேவைப்படுவது

(C) கட்டிடத்திற்க்கு சேதம் விளைவித்தல்

(D) காரணங்கள் குறிப்பிட தேவையில்லை

40. Consider the following statements.

I. Judicial precedent is evidence of law in civil law culture.

II. Judicial precedent is source of law in common law culture.

III. Doctrinal writings are a source of law in civil law culture.

IV. Common law culture views law as a set of rules of conduct and civil law culture views it as a means of resolving disputes in courts.

(A) Only IV is incorrect

(B) I and III are incorrect

(C) I and IV are incorrect

(D) I, III and IV are incorrect

கீழ்கண்ட கூற்றுக்களை கருத்தில் கொள்க.

I. உரிமையியல் சட்ட கலாச்சாரத்தில் முன்தீர்ப்பு என்பது சட்டப்படியான சாட்சியம் ஆகும்

II. பொது சட்ட கலாச்சாரத்தில் முன்தீர்ப்பு என்பது சட்டத்தின் மூலமாகும்.

III. உரிமையியல் சட்ட கலாச்சாரத்தில் எழுத்துக் கோட்பாடு சட்டத்தின் மூலமாகும்.

IV. பொது சட்ட கலாச்சாரம் சட்டத்தை நடத்தை விதிகளின் தொகுப்பாக பார்க்கிறது. உரிமையியல் சட்ட கலாச்சாரம் சட்டத்தை நீதிமன்றத்தில் பிரச்சனைகளை தீர்க்கும் ஒரு மார்க்கமாக பார்க்கிறது.

(A) கூற்று IV மட்டும் சரியல்ல

(B) கூற்று I மற்றும் III மட்டும் சரியல்ல

(C) கூற்று I மற்றும் IV மட்டும் சரியல்ல

(D) கூற்று I, III மற்றும் IV மட்டும் சரியல்ல

41. Which of the following is not a valid reason for an employer declaring 'Lay-off'?

(A) Shortage of coal, power or raw materials

(B) Accumulation of stocks

(C) Break-down of machinery

(D) Financial stringency

கீழ்கண்டவைகளில் முதலாளியால் தற்காலிக வேலை நீக்கம் செய்வதற்கு எது சரியான காரணம் இல்லை?

(A) நிலக்கரி, மின்சக்தி அல்லது மூலப்பொருட்கள் ஆகியவற்றின் பற்றாக்குறை

(B) இருப்பு குவிப்பு

(C) இயந்திரம் பழுதடைதல்

(D) நிதி நெருக்கடி

42. The constitutional validity of section ———— of Income Tax Act has been recently upheld?

(A) 234 F

(B) 194 A

(C) 42

(D) 74

வருமானவரி சட்டத்தின் கீழ்கண்ட எந்த பிரிவின் அரசியலமைப்பு சட்டத்தின் செல்லும் தன்மை சமீபத்தில் நிலைநிறுத்தப்பட்டது?

(A) 234 F

(B) 194 A

(C) 42

(D) 74

43. Which of the following statements is/are correct?

I. Relinquishment of share by a claimant in the family property does not disentitle her from claiming compensation under the Motor Vehicles Act.

II. Parents of a married son are not entitled to claim filial compensation under the Motor Vehicles Act.

III. A claim under Section 163A of the Motor Vehicles Act is not maintainable against the owner and insurance company of the vehicle which was being driven by the deceased himself.

IV. Widow's right to claim compensation for death of husband under the Motor Vehicles Act. will not abate on remarriage.

(A) Statements I, II and IV alone are correct

(B) Statements I, II and III alone are correct

(C) Statements I and IV alone are correct

(D) All the above statements are correct

கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

I. மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் நஷ்டஈடு கோரும் நபர் குடும்ப சொத்தில் உள்ள தனக்குரிய உரிமையை விடுதலை செய்துவிட்டாலும் கூட மேற்கூறிய சட்டத்தின்கீழ் நஷ்டஈடு கோர முடியும்

II. திருமணமான மகனின் பெற்றோர்களுக்கு மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் துணை நஷ்ஈட்டை பெறுவதற்கு உரிமையில்லை

III. இறந்தவரே வாகனத்தை ஓட்டிச்சென்றிருந்தால் வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்திற்கு எதிராக மோட்டார் வாகன சட்டப்பிரிவு 163Aன் கீழ் நஷ்டஈடு கோரி தாக்கல் செய்யப்படும் மனு நிலைநிற்கத்தக்கது இல்லை

IV. இறந்தவரின் மனைவி மீண்டும் திருமணம் செய்து கொண்டால், அவரின் முதல் கணவரின் இறப்பிற்கு மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் நஷ்டஈடு கேட்கும் உரிமை அற்றுப்போகாது

(A) கூற்றுக்கள் I, II மற்றும் IV மட்டும் சரியானது

(B) கூற்றுக்கள் I, II மற்றும் III மட்டும் சரியானது

(C) கூற்றுக்கள் I மற்றும் IV மட்டும் சரியானது

(D) மேற்கண்ட கூற்றுக்கள் அனைத்தும் சரியானவை

44. A film critic in his review of a film comments adversely on the cinematic values and quality of the film. The director of the film sues the film critic for defamation. Which of the following is correct?

1. The film critic can raise the defence of justification.
2. The critic is not liable because it was a fair and bonafide comment in public interest.
3. It was an expression of opinion and not assertion of facts.
4. The film critic can raise defence that it is a fair criticism of a film meant for public entertainment.

Codes :

(A) 1 and 3
(B) 1 and 2
(C) 2, 3 and 4
(D) 1 and 4

ஒரு திரைப்பட விமர்சகர் ஒரு திரைப்படத்தின் மதிப்பு மற்றும் அதன் தரத்தைப் பற்றி அந்த திரைப்படத்திற்கு எதிராக திரைப்பட விமர்சனத்தில் கருத்துக்களை தெரிவித்திருக்கிறார். அந்த திரைப்படத்தின் இயக்குநர் அந்த விமர்சகர் மீது அவதூறுக்காக வழக்கு தாக்கல் செய்கிறார். கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானவை?

1. விமர்சகர் நியாயப்படுத்தல் என்ற எதிர்வாதத்தை எழுப்ப முடியும்
2. பொதுநலன் கருதி நேர்மையான மற்றும் நல்லெண்ணத்தின்பால் எழுதப்பட்ட கருத்து என்பதால் விமர்சகர் பொறுப்பாகமாட்டார்
3. விமர்சனம் என்பது கருத்தை தெரிவித்தல் மட்டுமே, அது சங்கதிகளின் வலியுறுத்தல் இல்லை
4. பொதுமக்களின் பொழுதுபோக்கிற்குரிய நேர்மையான திறனாய்வு தான் அந்த விமர்சனம் ஆகும் என்று விமர்சகர் எதிர்வாதம் செய்யலாம்.

குறியீடு :

(A) 1 மற்றும் 3
(B) 1 மற்றும் 2
(C) 2, 3 மற்றும் 4
(D) 1 மற்றும் 4

45. B, an eight year old boy sees a seventy year old woman, Mrs Z looking for a chair to sit down in the garden during the family function, as she has arthritis and is tired. To play a prank on her and to show off to his friends, B pulls the chair away as Mrs. Z was about to sit. Mrs Z falls down and is severely injured. She sues B.

(A) Mrs Z will not succeed, as B is a minor and minors cannot be sued in torts

(B) Mrs Z will not succeed, as B had no intention or motive to harm Mrs. Z and did as a joke

(C) Mrs Z will succeed, as B could comprehend the likely harm which might occur and minors can be sued in tort

(D) Mrs Z can only sue B's parents

ஒரு குடும்ப விழாவின்போது தோட்டத்தில் கீழ்வாதம் உள்ள 70 வயதையுடைய Z என்ற பெண்மணி உட்காருவதற்கு ஒரு நாற்காலியை தேடுவதைப் பார்த்த B என்ற 8 வயது சிறுவன் குறும்புத்தனமாக விளையாடவும், அதை தன் நண்பர்களுக்கு காட்டவும் Z உட்கார முற்பட்டபோது, B அந்த நாற்காலியை இழுத்துவிட்டார். ஆகவே, Z கீழே விழுந்து அவருக்கு காயம் ஏற்பட்டது. Z என்பவர் B யின் மீது வழக்கு தாக்கல் செய்தார்.

(A) Z வெற்றி பெறமாட்டார். ஏனெனில், B ஒரு இளவர், தீங்கியல் சட்டத்தின்படி இளவர் மீது வழக்கை தாக்கல் செய்ய முடியாது

(B) Z வெற்றி பெறமாட்டார். ஏனெனில், Z க்கு தீங்கு விளைவிக்க வேண்டுமென்ற எண்ணமோ, நோக்கமோ Bக்கு இல்லை. B விளையாட்டாக தான் செய்தார்

(C) Z வெற்றி பெறுவார். ஏனெனில், தீங்கு ஏற்படும் என்று B யால் புரிந்து கொள்ள முடியும், தீங்கியல் சட்டத்தில் இளவர்கள் மீது வழக்கை தாக்கல் செய்யலாம்

(D) Z என்பவர் Bயின் பெற்றோர்கள் மீது மட்டுமே வழக்கை தாக்கல் செய்ய முடியும்

46. The law of contract is different from the law of tort in which way?

(A) Contract law is actionable in both the civil and criminal courts

(B) Contract law generally concerns a relationship between two parties only

(C) Contracts are always written unlike torts law

(D) Tort is made up predominantly of statute law unlike contract law

எந்த வகையில் ஒப்பந்தச் சட்டம் தீங்கியல் சட்டத்திலிருந்து வேறுபட்டது?

(A) ஒப்பந்த சட்டம், உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களில் செயல்படக்கூடியது

(B) ஒப்பந்த சட்டம் பொதுவாக இரண்டு தரப்பினர்களுக்கிடையேயான உறவுமுறை சம்மந்தப்பட்டது

(C) தீங்கியல் சட்டத்தை போலில்லாமல், ஒப்பந்தங்கள் எப்பொழுதும் எழுதப்பட்டவை

(D) ஒப்பந்த சட்டத்தை போலில்லாமல், தீங்கு முக்கியமாக சட்டத்தால் ஏற்பட்டது

47. Which of the following accurately describes the 'but for' test?

(A) But for the claimant's fault, the damage would not have occurred

(B) But for the defendant's negligence, the damage would not have occurred

(C) But for the defendant's negligence, the damage would have occurred

(D) But for the claimant's fault, the damage would have occurred

கீழ்கண்டவைகளில் எது சரியாக **but for test** யை குறிக்கிறது?

(A) கோருரிமையாளரின் தவறினால் அல்லாமல் சேதம் ஏற்பட்டிருக்காது

(B) பிரதிவாதியின் கவனக்குறைவினால் அல்லாமல் சேதம் ஏற்பட்டிருக்காது

(C) பிரதிவாதியின் கவனக்குறைவு இல்லாமல் சேதம் ஏற்பட்டிருக்கும்

(D) கோருரிமையாளரின் தவறினால் அல்லாமல் சேதம் ஏற்பட்டிருக்கும்

48. Which of the following best describes the main function of 'duty of care' in negligence?

(A) It ensures that the correct defendant is sued

(B) It ensures that the claimant is always within the time limit for bringing an action

(C) It ensures that the tort of negligence does not extend too widely

(D) It ensures that the wrongdoer has actually been careless

கீழ்கண்டவைகளில் எது, கவனக்குறைவில் "பாதுகாக்கும் கடமை" யின் முக்கிய செயல்பாடு பற்றிக் கூறுகிறது?

(A) சரியான பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது என்பதை அது உறுதிப்படுத்துகிறது

(B) கோருரிமையாளர் எப்பொழுதும் உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது

(C) கவனக்குறைவு தீங்கு பரவலாக விரிவடையாது என்பதை உறுதிப்படுத்துகிறது

(D) தவறிழைப்பவர் உண்மையில் அஜாக்கிரதையாக இருந்தார் என்பதை உறுதிப்படுத்துகிறது

49. Which of the following statements is/are correct?

I. Arrest before judgment does not find a place under the provisions of Sec. 94, C.P.C. relating to supplemental proceedings.

II. "While there is no rose which has no thorn but if what you hold is all thorn and no rose, better throw it away" relates to irretrievable break-down of marriage theory of divorce

III. Remedy of foreclosure is available in mortgage by conditional sale.

IV. The procedure of Amendment to the Constitution is borrowed from the Constitution of South Africa.

(A) All the Statements are correct

(B) Statements I, III and IV alone are correct

(C) Statements I, II and III alone are correct

(D) Statements I and II alone are correct

கீழ்க்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

I. துணை நடவடிக்கைகள் சம்மந்தமாக உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 94ல் தீர்ப்புக்கு முன் கைது செய்வதைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை

II. "முள் இல்லாமல் ரோஜா இல்லை, ஆனால் நீ வைத்திருப்பது முள்ளை மட்டுமே ரோஜாவை அல்ல, ஆகவே அதை எறிந்து விடுவது நல்லது" என்பது மீளமுடியாத திருமண விவாகரத்து கோட்பாட்டுக்கு தொடர்புடையது ஆகும்

III. மீட்பு அடைப்புக்கான தீர்வு விற்பனை அடமானத்தில் கிடைக்கக்கூடியது.

IV. இந்திய அரசியலமைப்பு சட்டத்தை திருத்துவதற்கான நடைமுறையானது தென்னாப்பிரிக்கா அரசியலமைப்பு சட்டத்திலிருந்து பெறப்பட்டது

(A) மேற்கண்ட கூற்றுக்கள் அனைத்தும் சரியானது

(B) கூற்றுக்கள் I, III மற்றும் IV மட்டும் சரியானது

(C) கூற்றுக்கள் I, II மற்றும் III மட்டும் சரியானது

(D) கூற்றுக்கள் I மற்றும் II மட்டும் சரியானது

50. When does a person belonging to non-reserved class become eligible to the benefits of reservation either under Article 15(4) or 16(4) of the Constitution?

(A) by adoption
(B) by marriage
(C) by voluntary act of conversion
(D) none of the above

ஒதுக்கப்படாத வர்க்கத்தை சேர்ந்த ஒரு நபர் அரசியலமைப்புச் சட்டம் சரத்து 15(4) அல்லது 16(4)ன் கீழ் இட ஒதுக்கீட்டின் பலனுக்கு எப்பொழுது தகுதியுடையவர் ஆவார்?

(A) தத்தெடுப்பதன் மூலம்
(B) திருமணத்தின் மூலம்
(C) தன்னிச்சையான மாற்றம் மூலம்
(D) மேற்கண்ட எதுவுமில்லை

51. Which one of the following is not correct?

(A) Tax may be imposed by way of ordinance
(B) Preventive detention may be authorized by way of ordinance
(C) An ordinance promulgated by the President has its operation for a period of 6 months
(D) Ordinance may be promulgated by the President for any matter for which Parliament has power to make laws

கீழ்கண்டவற்றில் எது சரியானவை இல்லை?

(A) அவசர சட்டம் மூலம் வரிவிதிக்கப்படலாம்
(B) அவசர சட்டம் மூலம் தடுப்புக் காவலுக்கு அதிகாரம் அளிக்கலாம்
(C) குடியரசு தலைவரால் பிரகடனப்படுத்தப்படும் அவசர சட்டம் 6 மாத காலத்திற்கு மட்டும் அமுலில் இருக்கும்
(D) பாராளுமன்றம் சட்டத்தை இயற்ற அதிகாரம் கொண்டிருக்கும் எந்தவொரு விஷயத்திற்காகவும் குடியரசு தலைவரால் அவசர சட்டம் பிரகடனப்படுத்தப்படலாம்

52. Secularism as a basic structure of the Constitution has been recognised in ______________.

(A) Kesavananda Bharathi v. State of Kerala

(B) Minerva Mills v. Union of India

(C) A. K. Gopalan v. State of Madras

(D) S. R. Bommai v. Union of India

கீழ்கண்ட எந்த தீர்முடிவில் மதச்சார்பின்மை அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பாக அங்கீகரிக்கப்பட்டது?

(A) கேசவாநந்த பாரதி - எதிர் - கேரளா அரசு

(B) மினர்வா மில்ஸ் - எதிர் - நடுவன் அரசு

(C) ஏ.கே. கோபாலன் - எதிர் - சென்னை அரசு

(D) எஸ். ஆர். பொம்மை - எதிர் -நடுவன் அரசு

53. Which of the following has not been covered expressly while defining the term 'Law' under Article 13 of the Constitution of India?

(A) Custom

(B) Ordinance

(C) Precedents

(D) Rules

இந்திய அரசியலமைப்புச் சட்டம் சரத்து 13ன் கீழ் கீழ்கண்டவற்றில் எது சட்டம் என்ற வரையறைக்குள் வெளிப்படையாக வராது?

(A) வழக்கம்

(B) அவசர சட்டம்

(C) முன் தீர்ப்பு (மேற்கோள்)

(D) விதிகள்

54. Which of the following statements is/are correct?

I. A convict is entitled to an oral hearing, though not in person, from the President on his petition invoking the powers under Article 72 of Constitution of India.

II. The tribunals constituted either under Article 323A or 323B of the Constitution of India possess the competence to test the constitutional validity of statutory provisions and rules.

III. The Supreme Court can, in exercise of its jurisdiction under Article 142 read with Article 129 of the Constitution, while punishing a contemner for committing contempt of court, also impose a punishment of suspending his licence to practice, where the contemner happens to be an advocate.

(A) All the above statements are correct

(B) All the above statements are not correct

(C) Statement II alone is correct

(D) Statements II and III alone are correct

கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

கூற்று I - ஒரு தண்டிக்கப்பட்ட குற்றவாளிக்கு, அவரின் மனுவில் மீது இந்திய அரசியலமைப்பு சட்டம் சரத்து 72ன் கீழான அதிகாரத்தை குடியரசு தலைவர் பயன்படுத்தும் போது நேர்முகமாக இல்லாவிட்டாலும் கூட வாய்மொழி கேட்புக்கான உரிமை இருக்கிறது.

கூற்று II - இந்திய அரசியலமைப்பு சட்டம் சரத்துக்கள் 323 (அ) அல்லது 323 (ஆ) வின் கீழ் ஏற்படுத்தப்பட்ட தீர்பாயங்களுக்கு ஏதேனும் ஒரு சட்டத்தின் வகைமுறைகள் அல்லது விதிகளின், அரசியலமைப்பு செல்லும் தன்மை குறித்து விசாரிக்க அதிகாரம் இருக்கிறது.

கூற்று III - நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்காக நீதிமன்ற அவமதிப்பாளரை தண்டிக்கும்போது அவர் ஒரு வழக்கறிஞராக இருக்கும்பட்சத்தில், உச்சநீதிமன்றம் அரசியலமைப்பு சட்டம் சரத்து 142 உ/இ சரத்து 129ன் கீழான அதிகாரத்தை பயன்படுத்தி அவரை தொழில் செய்வதற்கான உரிமத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் தண்டனையை விதிக்கலாம்.

(A) மேற்கண்ட அனைத்து கூற்றுகளும் சரியானவை

(B) மேற்கண்ட அனைத்து கூற்றுகளும் சரியானதல்ல

(C) கூற்று - II மட்டும் சரியானது

(D) கூற்றுக்கள் - II மற்றும் III மட்டும் சரியானவை

55. Statement : A person having given an undertaking before High Court to vacate the premises is precluded from preferring an appeal to the Supreme Court against the order of eviction by High Court based on undertaking.

Reason I – As the Law does not permit a person to aprobate and reprobate, he is precluded from preferring an appeal

Reason II – Once a person adopted the doctrine of election, he cannot prefer an appeal against his election to vacate the premises.

(A) Statement and Reason I is correct, but reason II is not correct

(B) Statement and Reason II is correct, but reason I is not correct

(C) Statement and both of the Reasons are not correct

(D) Statement and both of the Reasons are correct

கூற்று : சொத்திலிருந்து காலி செய்து கொள்வதாக உயர் நீதிமன்றத்தில் ஒரு நபர் உறுதி அளித்துவிட்டு, அத்தகைய உறுதியின் பேரில் அவரை காலி செய்வதற்கு உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக அந்த நபர் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய இயலாது.

காரணம் I - ஏற்றுக்கொள்ள மற்றும் கைவிட ஒரு நபரை சட்டம் அனுமதிப்பதில்லை. ஆகவே, அவர் மேல்முறையீடு செய்ய இயலாது.

காரணம் II - ஒரு நபர் தேர்வுநிலை கோட்பாட்டை ஏற்றுக்கொண்டுவிட்டால், சொத்திலிருந்து காலி செய்வதற்கான அவருடைய தேர்வுக்கு எதிராக அவர் மேல்முறையீடு செய்ய இயலாது.

(A) கூற்று மற்றும் காரணம் I சரியானது, ஆனால் காரணம் II சரியானது அல்ல

(B) கூற்று மற்றும் காரணம் II சரியானது, ஆனால் காரணம் I சரியானது அல்ல

(C) கூற்று மற்றும் இரண்டு காரணங்களும் சரியானது அல்ல

(D) கூற்று மற்றும் இரண்டு காரணங்களும் சரியானது

56. Statement : A wife is entitled to seek the details of the income tax returns filed by her husband under Right to Information Act

Reason : The filing of the Income Tax Returns by an individual with the Income Tax Department is not a public activity.

(A) Statement is true but reason is not correct

(B) Both Statement and reason are not correct

(C) Both Statement and reason are correct

(D) Statement is not true but reason is correct

கூற்று : தன் கணவரால் தாக்கல் செய்யப்பட்ட வருமானவரி அறிக்கையை கேட்பதற்கு அவரது மனைவிக்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் உரிமை இருக்கிறது.

காரணம் : வருமானவரித் துறையில் ஒரு தனிநபரால் அவரது வருமானவரி அறிக்கையை தாக்கல் செய்வது ஒரு பொதுவான செயல்பாடு இல்லை.

(A) கூற்று சரியானது, ஆனால் காரணம் சரியல்ல

(B) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரியல்ல

(C) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரியானது

(D) கூற்று சரியானது அல்ல, ஆனால் காரணம் சரியானது

57. Which of the following statements is correct?

Statement I : Section 46 of CPC does not come into play in the context of Order XXXVIII Rule 5 of Code of Civil Procedure 1908.

Statement II : A transferee court can also issue precept under section 46.

Statement III : A precept under section 46 can be issued even after the decree has been transferred.

Statement IV : An order of precept under section 46 is appealable

(A) All the above statements are incorrect

(B) Statements I and III alone are correct

(C) Statements II and IV alone are correct

(D) Statement III and IV alone are correct

கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

கூற்று I - உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908 கட்டளை 38 விதி 5ன் கீழான சந்தர்ப்பம் மற்றும் சூழ்நிலைகளில் மேற்கூறிய சட்டப்பிரிவு 46 செயல்பாட்டுக்கு வராது.

கூற்று II - தீர்பாணையை மாற்றம் பெற்ற நீதிமன்றம் பிரிவு 46ன் கீழ் ஒரு கட்டளையை பிறப்பிக்கலாம்.

கூற்று III - தீர்ப்பாணையை மாற்றம் செய்யப்பட்ட பின்னரும் கூட, பிரிவு 46ன் கீழான ஒரு கட்டளையை தீர்ப்பாணையை பிறப்பித்த நீதிமன்றம் பிறப்பிக்கலாம்.

கூற்று IV - பிரிவு 46ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளைக்கு எதிராக மேல்முறையீடு செய்யலாம்.

(A) மேற்கண்ட அனைத்து கூற்றுகளும் சரியல்ல

(B) கூற்றுக்கள் I மற்றும் III மட்டும் சரியானது

(C) கூற்றுக்கள் II மற்றும் IV மட்டும் சரியானது

(D) கூற்றுக்கள் III மற்றும் IV மட்டும் சரியானது

58. In a suit which is posted for trial, both the plaintiff and the defendant appear before the court, but the plaintiff does not proceed with the trial and hence the suit is dismissed for default.

Which of the following courses is correct?

(A) The plaintiff can file an application under O IX R 9 CPC

(B) The plaintiff can file an application under O IX R 7 CPC

(C) The plaintiff can file an application under O IX R 13 CPC

(D) None of the above

விசாரணைக்காக வாய்தா போடப்பட்ட ஒரு வழக்கில், வாதி மற்றும் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கிறார்கள். வாதி வழக்கை நடத்தாததால், வழக்கானது தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்படுகிறது.

கீழ்கண்ட தீர்வுகளில் எது சரியானது?

(A) உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 9ன் கீழ் வாதி ஒரு மனுவை தாக்கல் செய்யலாம்

(B) உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7ன் கீழ் வாதி ஒரு மனுவை தாக்கல் செய்யலாம்

(C) உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13ன் கீழ் வாதி ஒரு மனுவை தாக்கல் செய்யலாம்

(D) மேற்கண்ட எதுவும் இல்லை

59. Statement I : To attach the salary of Government employee, the disbursing officer or the judgment debtor should be within the local limits of the executing court.

Statement II : To attach the salary of private employee, the disbursing officer and the judgment debtor should be within the local limits of the executing court.

Statement III: To attach the salary of private employee, the disbursing officer or the judgment debtor should be within the local limits of the executing court.

Statement IV: To attach the salary of private employee, the disbursing officer of the judgment debtor should be within the local limits of the executing court.

Which of the above statements are correct?

(A) Statements I and IV alone are correct

(B) Statements II and IV alone are correct

(C) Statements III and IV alone are correct

(D) Statements I and II alone are correct

கூற்று I - ஒரு அரசு ஊழியரின் சம்பளத்தை ஜப்தி செய்ய வேண்டுமெனில், சம்பளம் வழங்கும் அதிகாரி அல்லது தீர்ப்பு கடனாளி, தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றத்தின் ஆள்வரை அதிகார எல்லைக்குள் இருக்க வேண்டும்.

கூற்று II - ஒரு அரசு ஊழியரின் சம்பளத்தை ஜப்தி செய்ய வேண்டுமெனில், சம்பளம் வழங்கும் அதிகாரி மற்றும் தீர்ப்புகடனாளி தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றத்தின் ஆள்வரை அதிரா எல்லைக்குள் இருக்க வேண்டும்.

கூற்று III - ஒரு தனியார் ஊழியரின் சம்பளத்தை ஜப்தி செய்ய வேண்டுமெனில், சம்பளம் வழங்கும் அதிகாரி அல்லது தீர்ப்பு கடனாளி தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றத்தின் ஆள்வரை அதிகார எல்லைக்குள் இருக்க வேண்டும்.

கூற்று IV - ஒரு தனியார் ஊழியரின் சம்பளத்தை ஜப்தி செய்ய வேண்டுமெனில், தீர்ப்புக்கடனாளியின் சம்பளம் வழங்கும் அதிகாரி தீர்ப்பாணையை நிறைவேற்றும் நீதிமன்றத்தின் ஆள்வரை அதிகார எல்லைக்குள் இருக்க வேண்டும்.

மேற்கண்ட கூற்றுக்களில் எது சரியானது.

(A) கூற்றுக்கள் I மற்றும் IV மட்டும் சரியானது

(B) கூற்றுக்கள் II மற்றும் IV மட்டும் சரியானது

(C) கூற்றுக்கள் III மற்றும் IV மட்டும் சரியானது

(D) கூற்றுக்கள் I மற்றும் II மட்டும் சரியானது

60. A person purchased a property in court auction on 23.12.2019 in execution proceedings. He shall deposit the balance amount of 75 percent within 15 days namely on or before 7.1.2020. But he failed to deposit the amount within 15 days.

Under the above circumstances, which of the following is correct?

I. By invoking the powers under Section 5 of the Limitation Act, the court can permit the auction purchaser to deposit the amount beyond 15 days provided the auction purchaser assigned sufficient reason

II. As there is no provision in Order 21 of Code of Civil Procedure to extend the time for deposit, the court can invoke its inherent powers under section 151 of Code of Civil Procedure and permit to deposit beyond 15 days.

III. The court has powers to extend time for deposit not exceeding 30 days as per the amended provision of section 148 of Code of Civil Procedure.

(A) All the above statements are correct

(B) Statement III alone is correct

(C) All the above statements are not correct

(D) Statements II and III alone are correct

ஒரு நபர் தீர்ப்பாணை நடவடிக்கைகளில், நீதிமன்ற ஏலத்தில் ஒரு சொத்தை 23-12-2019ல் கிரையம் பெற்றார். அவர் பாக்கி தொகையான 75%ஐ 15 நாட்களுக்குள் அதாவது 07-01-2020க்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும். ஆனால் அவர் 15 நாட்களுக்குள் தொகையை வைப்பீடு செய்ய தவறிவிட்டார். இந்த சூழ்நிலைகளில் கீழ்கண்டவைகளில் எது சரியானது?

I. காலவரையறை சட்டம் 1963ன் பிரிவு 5ன்கீழான அதிகாரத்தை பயன்படுத்தி, சரியான காரணத்தை காட்டுவதன் பேரில் 15 நாட்களுக்கு அப்பாலும், தொகையை வைப்பீடு செய்ய ஏலம் எடுத்தவரை நீதிமன்றம் அனுமதிக்காலம்.

II. தொகையை வைப்பீடு செய்வதற்கான காலவரையறையை நீட்டிப்பதற்கான வகைமுறை உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908ன் கட்டளை 21ல் இல்லாததால், நீதிமன்றம் உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908 பிரிவு 151ன் கீழான தன் உள்ளார்ந்த அதிகாரத்தை பயன்படுத்தி 15 நாட்களுக்கு அப்பாலும் தொகையை வைப்பீடு செய்ய அனுமதிக்கலாம்.

III. உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் திருத்தப்பட்ட பிரிவு 148ன் படி, வைப்பீடு செய்வதற்கான காலவரம்பை 30 நாட்களுக்கு மேற்படாமல் காலவரம்பை நீடிப்பு செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

(A) மேற்கண்ட அனைத்து கூற்றுக்களும் சரியானது.

(B) கூற்று மட்டும் III சரியானது.

(C) மேற்கண்ட அனைத்து கூற்றுக்களும் சரியல்ல.

(D) கூற்றுக்கள் II மற்றும் III மட்டும் சரியானது.

61. A property of a minor who is eo nomine party, was sold by his guardian without permission of court. When he challenges the sale deed on attaining his majority, he shall pay court fee under section ———— of the Tamil Nadu Court Fees and Suit Valuation Act 1955.

(A) 25(d)

(B) 40

(C) 25(b)

(D) 50

ஒரு இளவரின் காப்பாளர் இளவரின் சொத்தை இளவரை தரப்பினராக காட்டி நீதிமன்ற அனுமதியில்லாமல் விற்றுவிட்டார். இளவர் உரிமை வயதை எய்தியவுடன் அந்த கிரைய பத்திரத்தை கேள்வி கேட்கும்போது தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பு சட்டத்தின் கீழ்கண்ட எந்த பிரிவுகளின் கீழ் அவர் நீதிமன்ற கட்டணத்தை செலுத்த வேண்டும்.

(A) 25 (d)

(B) 40

(C) 25 (b)

(D) 50

62. Statement I – Article 137 of the Limitation Act 1963 would apply to applications filed under section 7 of Insolvency and Bankruptcy Code.

Statement II – Article 137 of the Limitation Act 1963 would apply to proceedings for cancellation of probate or letters of administration.

Statement III – Limitation Act 1963 is applicable to suits, appeals and applications filed only in courts and not before statutory authorities.

Which of the above statements are correct?

(A) Statements I and II alone are correct

(B) Statements II and III alone are correct

(C) All the above statements are correct

(D) All the above statements are not correct

கூற்று I – நொடிப்பு நிலை மற்றும் திவால் சட்டத்தின் பிரிவு 7ன் கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்களுக்கு, காலவரையறை சட்டத்தின் சரத்து 137 பொருந்தும்.

கூற்று II – உயில் மெய்ப்பிதழ் மற்றும் நிர்வாக பத்திரத்தை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு காலவரையறை சட்டத்தின் சரத்து 137 பொருந்தும்.

கூற்று III – நீதிமன்றங்களில் மட்டும் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் மேல்முறையீடுகள் மற்றும் விண்ணப்பங்களுக்கு காலவரையறை சட்டம் பொருந்தும். அது சட்டப்படியான அலுவலர்களுக்கு பொருந்தாது.

மேற்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) கூற்றுக்கள் I மற்றும் II மட்டும் சரியானது.

(B) கூற்றுக்கள் II மற்றும் III மட்டும் சரியானது.

(C) மேற்கண்ட கூற்றுக்கள் அனைத்தும் சரியானது.

(D) மேற்கண்ட கூற்றுக்கள் அனைத்தும் சரியல்ல.

63. Which of the following is Not Correct?

I. The power of the Arbitral Tribunal to impose cost is subject to party autonomy.

II. The arbitrator should be given an opportunity of being heard before his fees is reduced under Sec. 29A of Arbitration and Conciliation Act.

III. An application for appointment of an arbitrator is required to be disposed of within 60 days.

IV. In fast track arbitrations, the award shall be made within a period of six months from the date the arbitral tribunal enters upon the reference.

(A) I, II
(B) I, III
(C) II, IV
(D) III, IV

கீழ்கண்டவைகளில் எது சரியானவைகள் அல்ல?

I. செலவு தொகையை விதிக்க இசைவு தீர்பாயத்திற்குரிய அதிகாரம் தரப்பினரின் தன்னாட்சிக்கு உட்பட்டதாகும்.

II. இசைவு மற்றும் சமரச சட்டத்தின் பிரிவு 29Aன்கீழ் இசைவு தீர்ப்பாளரின் கட்டணத்தை குறைப்பதற்கு முன்னர் இசைவு தீர்பாளருக்கு அவரை கேட்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

III. இசைவு தீர்ப்பாளரை நியமிக்க கோரும் விண்ணப்பத்தை 60 நாட்களுக்குள் முடிக்க வேண்டும்.

IV. விரைவு இசைவு தீர்ப்பாயங்களில், இசைவு தீர்ப்பாயத்திற்கு மேற்கோள் வந்த தேதியிலிருந்து 6 மாத காலத்திற்குள் இசைவு தீர்ப்பை பிறப்பிக்க வேண்டும்.

(A) I, II
(B) I, III
(C) II, IV
(D) III, IV

64. Which Article of the Constitution of India authorizes the government to enter into an arbitration agreement?

(A) Article 235
(B) Article 299
(C) Article 51
(D) Both (A) and (C)

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் எந்த சரத்து இசைவு ஒப்பந்தம் செய்து கொள்ள அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது?

(A) 235
(B) 299
(C) 51
(D) (A) மற்றும் (C)

65. The petitioner and the respondent entered into a building contract containing an arbitration clause. Dispute arose between the parties. Consequnet to the non-cooperation of the respondent for appointment of arbitraror, the petitioner filed an application under section 11 of Arbitration and Conciliation Act for appointment of arbitrator. The High Court rejected the application on the ground that the claim is barred by limitation. Under the above circumstances, which of the following is correct?

(A) The High Court can entertain the plea of limitation while deciding the application filed u/s 11 of the above Act

(B) The High Court can not entertain the plea of limitation while deciding the application filed u/s 11 of the above Act

(C) The High Court can entertain the plea of limitation only at the time of deciding the application filed u/s 34 of the above Act

(D) The question would not arise in arbitration proceedings in view of the Arbitration and Conciliation Act is a special Act.

மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் இசைவு தீர்ப்புக்கான சரத்தை உள்ளடக்கிய ஒரு கட்டிட ஒப்பந்தத்தை செய்து கொண்டார்கள். தரப்பினர்களுக்கிடையே பிரச்சனை ஏற்பட்டது. இசைவு தீர்ப்பாளரை நியமிக்க எதிர் மனுதாரர் ஒத்துழைப்பை கொடுக்காததால், இசைவு தீர்ப்பாளரை நியமிக்க கோரி மனுதாரர் இசைவு மற்றும் சமரச சட்டப்பிரிவு 11ன் கீழ் மனுதாரர் ஒரு மனுவை தாக்கல் செய்தார். மனுதாரரின் கோரிக்கை காலவரம்பால் பாதிக்கப்பட்டது என்று கூறி அம்மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்துவிட்டது

(A) மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 11ன் கீழான மனுவை தீர்மானிக்கும்போது காலவரையறை பற்றிய வாதத்தை உயர்நீதிமன்றம் அனுமதிக்கலாம்

(B) மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 11ன் கீழான மனுவை தீர்மானிக்கும்போது காலவரையறை பற்றிய வாதத்தை உயர்நீதிமன்றம் அனுமதிக்க இயலாது

(C) மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 34ன் கீழான மனுவை தீர்மானிக்கும் பொழுது மட்டுமே காலவரையறை பற்றிய வாதத்தை உயர்நீதிமன்றம் அனுமதிக்கலாம்

(D) இசைவு மற்றும் சமரச சட்டம் ஒரு சிறப்பு சட்டம் என்பதால் இசைவு தீர்ப்புக்கான நடவடிக்கைகளில் மேற்கூறிய கேள்வியே எழாது

66. The concept of *Lis Pendense* bars Transfer of properties

(A) which are exclusively pending before the civil courts

(B) which are exclusively pending before the criminal courts

(C) which are pending before the civil or criminal courts

(D) none of the above

நிகழ்வழக்கு கோட்பாடு

(A) உரிமையியல் நீதிமன்றத்தில் மட்டும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்தை உரிமை மற்றும் செய்வதை தடை செய்கிறது

(B) குற்றவியல் நீதிமன்றத்தில் மட்டும் வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்தை உரிமை மாற்றம் செய்வதை தடை செய்கிறது

(C) உரிமையியல் அல்லது குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்தை உரிமை மாற்றம் செய்வதை தடைசெய்கிறது

(D) மேற்கண்ட எதுவுமில்லை

67. A brought a suit against B as legal representative of C and obtained a decree, subsequently D who was another legal representative of C filed a suit for declaration that the decree passed in the suit filed by A is not binding on the property of C. During pendency of D's suit, the property was sold in execution of the decree in the first suit filed by A.

Choose the correct option from among the following:

(A) Section 52 of Transfer of property Act has application in this case

(B) Sale by court is a protected sale

(C) Suit by one legal representative binds all legal representatives

(D) None of the above

C-யின் சட்டப்பூர்வமான பிரதிநிதியாக B-யை காட்டி B-யின் மீது A ஒரு வழக்கை காட்டி ஒரு தீர்ப்பாணையை பெறுகிறார். பின்னர் C-யின் மற்றொரு சட்டப்பூர்வ பிரதிநிதியாக B என்பவர் A யால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பெறப்பட்ட தீர்ப்பாணை C யின் சொத்தை கட்டுப்படுத்தாது என்று விளம்புகை செய்யக்கோரி ஒரு வழக்கை தாக்கல் செய்தார். D ஆல் தாக்கல் செய்யப்பட்ட அந்த வழக்கு நிலுவையில் இருந்த பொழுது, சொத்தானது A-யால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பாணை நிறைவேற்றத்தில் சொத்து விற்கப்பட்டது?

கீழ்கண்டவற்றில் சரியானவற்றை தேர்வு செய்க?

(A) சொத்துரிமை மாற்றச் சட்டப்பிரிவு 52 இவ்வழக்கில் பொருந்தும்

(B) நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட விற்பனை ஒரு பாதுகாக்கப்பட்ட விற்பனையாகும்

(C) ஒரு சட்டப்பூர்வ பிரதிநிதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, அனைத்து சட்டப்பூர்வ பிரதிநிதிகளையும் கட்டுப்படுத்தும்

(D) மேற்கண்ட எதுவுமில்லை

68. Which of the following statements is/are correct?

I. Whenever the rate of rent is altered, a fresh tenancy come into existence and the old tenancy stands surrendered by implication.

II. When a landlord accepts enhanced rent during the period of the tenancy, the earlier tenancy comes to an end and a new tenancy begins.

III. In case of joint tenants there is no unity of title and possession, while in the case of tenants in common, there is a unity of possession, but there no unity of title

(A) Statement III alone is correct

(B) Statements I and II alone are correct

(C) All the above statements are not correct

(D) All the above statements are correct

கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

I. வாடகை தொகையில் மாற்றம் ஏற்படும் பொழுதெல்லாம் ஒரு புது வாடகை ஒப்பந்தம் அமுலுக்கு வரும் மற்றும் பழைய வாடகை ஒப்பந்தம் உட்கிடையாக ஒப்படைக்கப்பட்டதாக இருக்கும்

II. வாடகை ஒப்பந்த காலத்தில் அதிகரிக்கப்பட்ட வாடகையை கட்டிட உரிமையாளர் ஏற்றுக்கொண்டால் பழைய வாடகை ஒப்பந்தம் முடிவுக்கு வந்து புது வாடகை ஒப்பந்தம் ஆரம்பமாகும்

III. கூட்டு வாடகைதாரர்களில் உரிமை மற்றும் உடைமை ஒற்றுமை இல்லை. பொதுவான வாடகைதாரர்கள் என்பது உடைமை ஒற்றுமை இருக்கும். ஆனால் உரிமை ஒற்றுமை இருக்காது

(A) கூற்று III மட்டும் சரியானது

(B) கூற்றுக்கள் I மற்றும் II மட்டும் சரியானது

(C) மேற்கண்ட கூற்றுக்கள் அனைத்தும் சரியானவை அல்ல

(D) மேற்கண்ட கூற்றுக்கள் அனைத்தும் சரியானவை

69. In a suit filed by the plaintiff for injunction in respect of a cause of action arising out of a lease deed containing an arbitration clause, the defendant filed an application under section 8 of the Arbitration and Conciliation Act 1996 to refer the matter to arbitrator, before filing the written statement. The lease deed is insufficiently stamped.

I. The court may refer the matter to arbitrator leaving the question of deficiency of stamp duty to the arbitrator's decision

II. The court shall impound the document containing the arbitration clause to take steps to levy the stamp duty

III. The court has no other option except to refer the matter to arbitrator, since section 8 the Arbitration and Conciliation Act 1996 mandates the court to refer the matter to the arbitrator.

Which of the course is correct?

(A) I alone is correct
(B) II alone is correct
(C) III alone is correct
(D) I and III are correct

இசைவு தீர்ப்புக்கான சரத்தை கொண்ட ஒரு குத்தகை ஒப்பந்தத்தின் பேரில் எழுந்த வழக்கு மூலத்தின் அடிப்படையில் உறுத்துக்கட்டளை கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில், எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரே, பிரதிவாதி வழக்கின் பிரச்சனையை இசைவு தீர்ப்பாளருக்கு அனுப்பும்படி இசைவு மற்றும் சமரச சட்டம் பிரிவு 8 ன் கீழ் ஒரு மனுவை தாக்கல் செய்தார். குத்தகை ஒப்பந்தம் போதுமான முத்திரை தாள்களில் எழுதப்படவில்லை

I. குறைந்த முத்திரை தீர்வை பற்றிய கேள்வியை இசைவு தீர்ப்பாளரின் முடிவுக்கு விட்டுவிட்டு வழக்கின் பிரச்சனையை நீதிமன்றம் இசைவு தீர்ப்பாளருக்கு அனுப்பலாம்

II. முத்திரை தீர்வையை வசூலிக்க நடவடிக்கை எடுப்பதற்காக, இசைவு தீர்ப்புக்கான சரத்தை கொண்டிருக்கும் அந்த ஆவணத்தை நீதிமன்றம் முடக்கி வைக்க வேண்டும்

III. இசைவு மற்றும் சமரச சட்டத்தின் பிரிவு 8 பிரச்சனையை இசைவு தீர்ப்பாளருக்கு அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்துவதால், பிரச்சனையை இசைவு தீர்ப்பாளருக்கு அனுப்புவதை தவிர நீதிமன்றத்திற்கு வேறு வழியில்லை.

கீழ்கண்டவைகளில் எது சரியானவை?

(A) I மட்டும் சரியானது
(B) II மட்டும் சரியானது
(C) III மட்டும் சரியானது
(D) I மற்றும் III சரியானது

70. The plaintiff has filed a suit for recovery of Rs. 10,000/- with interest due from the defendant under a document described as 'simple mortgage deed' dated 10.2.1994. The document is insufficiently stamped and unregistered. The plaintiff is not praying to enforce the terms of the document regarding the mortgage of a house property and he is simply praying the Court to order recovery of money due under the document. The document creates personal liability on defendant as well as charge in the property. When the plaintiff sought to mark the document without paying stamp duty with penalty, the court refused to mark the document.

I. The document can be received in evidence for a limited purpose of enabling the plaintiff to recover the amount on personal liability of the defendant

II. The document cannot be received in evidence for want of registration

III. The document cannot be received in evidence for it is insufficiently stamped

IV. The document can be received in evidence and its evidentiary value can be decided at the time of final disposal of the case

Which of the above is/are more appropriate answer?

(A) IV alone is correct
(B) III alone is correct
(C) I alone is correct
(D) II and III are correct

10–02–1994 தேதியிட்ட சாதாரண அடமானம் என்று குறிப்பிடப்பட்ட ஒரு ஆவணத்தின் அடிப்படையில் பிரதிவாதியிடமிருந்து ரூபாய். 10,000 த்தை வட்டியுடன் வசூல் செய்து தர கேட்டு வாதி ஒரு வழக்கை தாக்கல் செய்திருக்கிறார். அந்த ஆவணம் போதுமான முத்திரை தாள்களில் எழுதப்படவில்லை மற்றும் பதிவு செய்யப்படவில்லை. அடமான வீடு சம்மந்தமாக ஆவணத்தில் உள்ள சரத்துகளை வலியுறுத்தி வாதி பரிகாரம் கோரவில்லை. அந்த ஆவணத்தின் படி வர வேண்டிய பணத்தை வசூல் செய்துதர வாதி கோருகிறார். அந்த ஆவணம் பிரதிவாதியின் மீது தனிப்பட்ட பொறுப்பையும் சொத்தின் மீது பொறுப்பினையையும் ஏற்படுத்துகிறது. போதுமான முத்திரை தீர்வையை செலுத்தாமல் வாதி அந்த ஆவணத்தை குறியீடு செய்ய கோரும் போது, நீதிமன்றம் அந்த ஆவணத்தை குறியீடு செய்ய மறுத்துவிட்டது.

I. பிரதிவாதியின் தனிப்பட்ட பொறுப்பின் அடிப்படையில் தொகையை வசூலிப்பதற்கு வாதிக்கு வழி ஏற்படுத்தும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கான சாட்சியத்திற்கு மட்டும் அந்த ஆவணத்தை குறியீடு செய்யலாம்

II. பதிவு செய்யப்படாததால் அந்த சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள முடியாது

III. போதுமான முத்திரை தாள்களில் எழுதப்படாததால் அந்த ஆவணத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாது

IV. அந்த ஆவணத்தை குறியீடு செய்து கொள்ளலாம் மற்றும் வழக்கை இறுதியாக தீர்மானிக்கும் பொழுது அந்த ஆவணத்தின் சாட்சிய அந்தஸ்து குறித்து முடிவு செய்யலாம்

மேற்கூறியவற்றில் எது மிகச் சரியான விடை?

(A) IV மட்டும் சரியானது
(B) III மட்டும் சரியானது
(C) I மட்டும் சரியானது
(D) II மற்றும் III மட்டும் சரியானது

71. Defendant wrote to the plaintiff, Parthi, with an offer to sell his house to him for Rs. 80,00,000. He promised that he would keep this offer open to him until Friday. But, on the Thursday, the defendant accepted an offer from a third party and sold his house to them. According to plaintiff, he was going to accept this offer but had not said anything to defendant because he understood that he had time until Friday. Defendant communicated that the offer had been withdrawn through a friend to the plaintiff. After hearing this, Plaintiff went to find the defendant, explaining his acceptance of the offer. The plaintiff brought an action for specific performance and breach of contract against the defendant.

(A) The statement made by defendant in the letter amounts to a valid contract and he has committed a breach by selling the house before Friday

(B) The statement made by defendant was nothing more than a promise; there was no binding contract formed

(C) The communication by a friend or other party that an offer had been withdrawn is invalid and could not be treated as if it came from the person themselves

(D) None of the above

பிரதிவாதி அவருடைய வீட்டை வாதிக்கு ரூ.80 லட்சத்திற்கு விற்க, முனைவுடன் ஒரு கடிதம் எழுதினார். வெள்ளிக்கிழமை வரை அந்த முனைவு அமுலில் இருக்கும் என்று பிரதிவாதி கூறினார். ஆனால் , வியாழக்கிழமையே ஒரு மூன்றாவது நபருக்கு சொத்தை கிரையம் கொடுத்துவிட்டார். வாதியின் கூற்றுப்படி பிரதிவாதியின் முனைவை தான் ஏற்க இருந்ததாகவும், வெள்ளிக்கிழமை வரை அவகாசம் இருப்பதால் அதைப் பற்றி தான் பிரதிவாதியிடம் தெரிவிக்கவில்லை. பிரதிவாதி முனைவை திரும்ப பெற்றுக்கொண்டதாக அவரது நண்பர் மூலம் வாதிக்கு தெரியப்படுத்தினார். இதை கேள்விப்பட்ட வாதி பிரதிவாதியிடம் சென்று பிரதிவாதியின் முனைவை தான் ஏற்றுக்கொண்டதை விளக்கினார். வாதி பிராதிவாதி மீது ஒப்பந்தத்தை மீறியதற்கு குறித்தவகை நிவாரணம் கோரி வழக்கு தாக்கல் செய்தார். கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) பிரதிவாதி கடிதத்தில் கூறியுள்ள கூற்று ஒரு செல்லுப்படியாகும் ஒப்பந்தமாகும். வெள்ளிக்கிழமைக்கு முன்பே அவர் சொத்தை விற்று ஒப்பந்தத்தை மீறிவிட்டார்

(B) பிரதிவாதியின் கூற்று உறுதியைத் தவிர வேறொன்றும் இல்லை. அவர்களுக்கு இடையே கட்டுப்படுத்தும் ஒப்பந்தம் ஏற்படவில்லை

(C) ஒரு நண்பர் அல்லது வேறு நபரால் செய்யப்படும் முனைவை திரும்ப பெற்றுக் கொண்டதான தகவல் செல்லாது. அது பிரதிவாதியால் செய்யப்பட்டதாக கருத முடியாது

(D) மேற்கண்ட எதுவுமில்லை

72. A offers by advertisement a reward of Rs. 100 to anyone who returns his lost bag. B finds the bag, brings to A, without having heard of the offer of reward. Is B entitled to the reward?

(A) Yes, because B has accepted the offer by performance

(B) Yes, because B is having knowledge of offer

(C) No, because B is not having the knowledge of the offer

(D) No, because A had revoked the offer before acceptance

தொலைந்து போன தன்னுடைய பையை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு ரூபாய். 100 யை வெகுமதியாக கொடுப்பதாக ஒரு விளம்பரம் மூலம் A முனைவு செய்கிறார். வெகுமதி பற்றிய முனைவைப் பற்றி கேள்விப்படாமல் B என்பவர் பையை கண்டுபிடித்து A யிடம் கொடுக்கிறார். வெகுமதியை பெற B க்கு உரிமை இருக்கிறதா?

(A) ஆம், ஏனெனில் B நிறைவேற்றத்தின் மூலம் முனைவை ஏற்றுக்கொண்டார்

(B) ஆம், ஏனெனில் முனைவைப் பற்றி B அறிந்திருந்தார்

(C) இல்லை, ஏனெனில் முனைவைப் பற்றி B அறிந்திருக்கவில்லை

(D) இல்லை, ஏனெனில் முனைவு ஏற்கப்படுவதற்கு முன்னர் முனைவை A ரத்து செய்துவிட்டார்

73. A minor X hired a horse on the condition that he will not use it for jumping. He lent the horse to his friend who used it for jumping thereby injuring the horse. The owner sued the minor for the loss. State the liability of the minor

(A) X is not liable as a contract with a minor is void ab initio

(B) X is not liable under the contract but X is liable for the tortuous act of lending the horse to another without the permission of the owner

(C) X is not liable as the act was committed by his friend

(D) None of the above

X என்ற ஒரு இளவர் குதிக்க வைக்க பயன்படுத்த மாட்டேன் என்ற நிபந்தனையின் பேரில் ஒரு குதிரையை வாடகைக்கு எடுத்தார். அவர் அந்த குதிரையை அவரது நண்பருக்கு இரவல் கொடுத்தார். அவரது நண்பர் அதை குதிப்பதற்கு பயன்படுத்தினார் அதனால் குதிரைக்கு காயம் ஏற்பட்டது. குதிரையின் உரிமையாளர் இழப்பீடு கேட்டு இளவர் மீது வழக்கு தாக்கல் செய்தார். இளவரின் பொறுப்பு பற்றி கூறுக.

(A) இளவருடனான ஒப்பந்தம் செல்லாது. ஆகவே X பொறுப்பாக மாட்டார்

(B) ஒப்பந்தத்தின்படி X பொறுப்பாகமாட்டார், ஆனால் உரிமையாளரின் அனுமதியின்றி குதிரையை மற்றொரு நபருக்கு இரவல் கொடுத்த வகையில் தீங்கிழைத்தமைக்காக X பொறுப்பாவார்

(C) X ன் நண்பரால் அந்த செயல் செய்யப்பட்டதால், X பொறுப்பாக மாட்டார்

(D) மேலே கண்ட எதுவுமில்லை

74. 'X' agreed to supply 1000 tons of iron at Rs. 100 per ton to 'Y' to be delivered on or before 31-1-2002. 'X' also entered into a contract with 'A' for purchase of 1000 tons of iron at Rs. 80 per ton informing 'A' clearly that the iron is needed before 31-1-2002 for supply to 'Y'. 'A' failed to supply to 'X' who in turn defaulted in his contract with 'Y'. In action by 'X' against 'A',

(A) 'X' can recover damages for the profit at the rate of Rs. 20 per ton i.e., the loss of profit

(B) 'X' can recover damages for the loss or profit he would have earned by timely supply to 'Y' and also the damages which 'X' might have to pay to 'Y' on account of breach of contract

(C) 'X' can recover damages which 'X' might have to pay to 'Y' on account of breach of contract

(D) 'X' can recover damages in the form of penalty

X என்பவர் ஒரு டன் 100 ரூபாய் என்ற விலையில் 1000 டன் இரும்பை 31.01.2002 அன்று அல்லது அதற்கு முன்பு Y என்பவருக்கு விநியோகம் செய்ய ஒப்புக்கொண்டார். X என்பவர் , ஒரு டன் 80 ரூபாய் என்ற விலையில் 1000 டன் இரும்பை வாங்க A என்பவருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். இரும்பை Y என்பவருக்கு 31.01.2002 க்குள் விநியோகம் செய்ய இரும்பு தேவைப்படுவதாக X என்பவர் A என்பவருக்கு தெளிவாக தெரிவித்தார். X என்பவருக்கு விநியோகம் செய்ய A தவறிவிட்டார். ஆகவே, X ம் Y உடனான ஒப்பந்தத்தில் தவறிவிட்டார். X ஆல் A க்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையில்,

(A) ஒரு டன்னுக்கு ரூபாய் 20 என்ற விகிதத்தில் லாப இழப்புக்காக X என்பவர் நஷ்ட ஈட்டை வசூலிக்க முடியும்

(B) Y க்கு உரிய காலத்தில் விநியோகம் செய்திருந்தால் X சம்பாதித்திருக்ககூடிய லாபத்தை அல்லது இழப்புக்கான நஷ்டஈட்டையும் X என்பவர் வசூலிக்க முடியும் மற்றும் Y உடனான ஒப்பந்தத்தை மீறியதற்கு Y க்கு X கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டையும் X வசூலிக்க முடியும்

(C) ஒப்பந்தத்தை மீறியதற்காக Y க்கு X செலுத்த வேண்டிய நஷ்டஈட்டை X வசூலிக்க முடியும்

(D) தண்டத்தொகை என்ற வடிவில் நஷ்டஈட்டை X வசூலிக்க முடியும்

75. Which of the following statements are correct?

I. Undivided share cannot be subject matter of agreement to sell.

II. An Agreement for sale signed by the vendor alone is not valid.

III. An agreement for sale requires attestation.

(A) All the above statements are correct

(B) All the above statements are not correct

(C) Statements I and III alone are correct

(D) Statements II and III alone are correct

கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானவை?

I. பிரிக்கப்படாத பங்கு கிரைய ஒப்பந்தத்தில் உட்பட்டிருக்க முடியாது

II. கிரையம் கொடுப்பவரால் மட்டும் கையொப்பமிடப்பட்ட ஒரு கிரைய ஒப்பந்தம் செல்லாது

III. ஒரு கிரைய ஒப்பந்தம் சான்றொப்பம் செய்யப்பட வேண்டும்

(A) மேலே கண்ட அனைத்து கூற்றுக்களும் சரியானவை

(B) மேலே கண்ட அனைத்து கூற்றுக்களும் சரியல்ல

(C) கூற்றுக்கள் I மற்றும் III மட்டும் சரியானவை

(D) கூற்றுக்கள் II மற்றும் III மட்டும் சரியானவை

76. A and B entered into an agreement, which described them as partners. The agreement provides that 'in lieu of his share of profits', B was to receive Rs. 500 per month and was not responsible for any losses or liability of firm. Later a dispute arose between the two. B contended that he was not a partner. Which of the following is correct?

(A) B is a partner

(B) B is not a partner

(C) B is a salaried partner

(D) B is a limited liability partner

A யும் Bயும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் அவர்களை கூட்டாண்மை பங்குதாரர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. லாபத்தில் பங்கு கொடுப்பதற்கு பதிலாக, B மாதந்தோறும் ரூ. 500/– பெறுவது என்றும், பங்குதாரர் நிறுவனத்தில் ஏற்படும் இழப்பு மற்றும் பொறுப்புக்கு B பொறுப்பல்ல என்றும் ஒப்பந்தம் கூறுகிறது. பின்னர் இருவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது தான் பங்குதாரர் இல்லை என்று B வாதிட்டார்.

கீழ்கண்டவைகளில் எது சரியானது?

(A) B ஒரு பங்குதாரர் ஆவார்

(B) B ஒரு பங்குதாரர் இல்லை.

(C) B ஒரு சம்பளம் வாங்கும் பங்குதாரர்

(D) B ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய பங்குதாரர்.

77. Which of the following suits can be maintained by one partner against the other partner during the subsistence of partnership without praying for dissolution?

(A) Suit in respect of any transaction which forms an item of the partnership account

(B) Suit for money lent by him to a firm of which he is a member

(C) Suit for contributions in respect of moneys borrowed by him under an express agreement with them for the purposes of partnership

(D) All of the above

பங்குதாரர் நிறுவனம் நிலுவையில் உள்ளபோது அதை கலைக்க கோராமல், கீழ்கண்ட வழக்குகளில் எந்த வழக்கை ஒரு பங்குதாரர் தாக்கல் செய்ய முடியும்?

(A) கூட்டாண்மை நிறுவன கணக்கை உருவாக்கும் எந்த ஒரு காரியம் சம்பந்தமான வழக்கு.

(B) தான் உறுப்பினராக உள்ள ஒரு பங்குதாரர் நிறுவனத்திற்கு தான் கொடுத்த கடனை வசூல் செய்து தரக்கோரும் வழக்கு.

(C) பங்குதாரர்களுடன் செய்து கொண்ட ஒரு வெளிப்படையான ஒப்பந்தத்தின் கீழ், பங்குதாரர் நிறுவனத்திற்காக அவர் கடன் வாங்கிய பணத்திற்கு பங்களிப்புக்கான வழக்கு.

(D) மேலே கண்ட அனைத்தும்

78. In a sale by description and sample, it is sufficient if

(A) The bulk corresponds to the sample only and does not answers the description

(B) The bulk answers the description only and does not correspond to the sample

(C) The bulk corresponds to the sample and answers the description

(D) The bulk corresponds to the sample or answers the description

விளக்கம் மற்றும் மாதிரி மூலம் செய்யப்படும் விற்பனையில்

(A) சரக்கின் பெரும்பகுதி விளக்கத்திற்கு பதில் அளிக்காமல் மாதிரியை மட்டும் ஒத்திருந்திருந்தால் போதுமானது.

(B) பெரும்பகுதி மாதிரியை ஒத்திருக்காவிட்டாலும், விளக்கத்திற்கு பதில் அளித்தாலே போதுமானதாகும்.

(C) பெரும்பகுதி மாதிரியை ஒத்திருந்து விளக்கத்திற்கு பதில் அளிக்கும் வகையில் இருப்பது அவசியமாகும்,

(D) பெரும்பகுதி மாதிரியை ஒத்திருக்க வேண்டும் அல்லது விளக்கத்திற்கு பதில் அளித்தல் அவசியம்.

79. Where a delivery of wrong quantity of goods has been accepted by the buyer, the buyer is

(A) liable to pay for the goods at contract rate

(B) liable to pay for the goods at market rate

(C) not liable to pay for the goods at all

(D) liable to pay for the goods at contract rate or market rate, whichever is lower

தவறான அளவுள்ள சரக்குகளின் ஒப்படைப்பை வாங்குபவர் ஏற்றுக்கொண்டால்,

(A) அவர் சரக்குகளுக்கு ஒப்பந்தப்படியான தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார்.

(B) அவர் சரக்குகளுக்கு சந்தை மதிப்பின் அடிப்படையில் தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார்.

(C) அவர் தொகை எதுவும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல.

(D) அவர் சரக்குகளுக்கு ஒப்பந்தப்படியான தொகை அல்லது சந்தை மதிப்பு ஆகியவற்றில் எது குறைவோ அந்த தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார்

80. Why is a restrictive endorsement made on an negotiable instrument?

(A) To confer on endorsee the right to receive payment of the instrument;

(B) To confer the same right of action on endorsee against any other party to the instrument that his endorser had;

(C) To confer the power on endorsee, but only in accordance with the express terms of the authority, to transfer the instrument and the rights thereon to another;

(D) All of the above

ஒருமாற்றுமுறை ஆவணத்தில் ஏன் கட்டுப்படுத்தப்பட்ட மேற்குறிப்பு செய்யப்படுகிறது.

(A) அந்த ஆவணத்திற்கான பணத்தை பெறும் உரிமையை மேற்குறிப்பு செய்யப்பட்டவருக்கு கொடுப்பதற்கு மேற்குறிப்பு செய்யப்படுகிறது.

(B) அந்த மாற்றுமுறை ஆவணத்திற்கு எதிராக மேற்குறிப்பு செய்தவர் கொண்டிருக்கும் நடவடிக்கை எடுப்பதற்கான அதே உரிமையை மேற்குறிப்பு செய்யப்பட்டவருக்கு கொடுப்பதற்கு கட்டுப்படுத்தப்பட்ட மேற்குறிப்பு செய்யப்படுகிறது.

(C) வெளிப்படையாக கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படி, அந்த ஆவணத்தையும், அதன் மீதான உரிமையையும் மற்றொருவருக்கு மாற்றுவதற்காக அதிகாரத்தை, மேற்குறிப்பு செய்யப்பட்டவருக்கு வழங்குவதற்கு கட்டுப்படுத்தப்பட்ட மேற்குறிப்பு செய்யப்படுகிறது.

(D) மேலே கண்ட அனைத்தும்.

81. A Waqf can be the beneficiary of Waqf under

(A) Hanafi Law (B) Shia Law

(C) Hadith (D) Ijma

எந்த சட்டத்தின் கீழ் ஒரு வக்பின் பயனாளியாக ஒரு வக்பு இருக்க முடியும்?

(A) ஹனாபி சட்டம் (B) சியா சட்டம்

(C) ஹாதித் (D) இஜ்மா

82. In which of the following cases, the Supreme Court held that 'a live-in-relationship is neither a crime nor a sin' and suggested that the Government should frame laws for protection of women in such relationships and children born out of these?

(A) Indra Sarma v. V.K.V. Sarma

(B) Tulsi v. Durgahaitya

(C) Gokul Chand v. Parvin Kumari

(D) Chetana Dass v. Kamal Kumar

கீழ்கண்ட வழக்குகளில் எதில் சேர்ந்து வாழ்வது குற்றமோ அல்லது பாவமோ இல்லை என்று உச்சநீதிமன்றம் கூறியது மற்றும் அரசு அத்தகைய உறவில் வாழும் பெண்கள் மற்றும் அதில் பிறக்கும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு வழங்க சட்டத்தை இயற்ற வேண்டுமென்று உச்சநீதிமன்றம் பரிந்துரை செய்தது.

(A) இந்திரா சர்மா – எதிர் – வி.கே.வி. சர்மா

(B) துள்சி – எதிர் – துர்கா கைட்யா

(C) கோகுல்சந்த் – எதிர் – பர்வின் குமாரி

(D) சேட்னா தாஸ் – எதிர் – கமல் குமார்

83. In ______________ the Supreme Court observed that if proceedings are directed to be conducted through videoconferencing, "the spirit of the Family Courts Act 1984 Act will be in peril and further the cause of justice would be defeated".

(A) Krishna Veni Nagam v. Harish Nagam

(B) K. Srinivas Rao v. D. A. Deepa

(C) Santhini v. Vijaya Venkatesh

(D) Jagraj v. Bir Pal Kaur

கீழ்கண்டவைகளில் எந்த வழக்கில் காணொலி காட்சி மூலம் வழக்கு நடவடிக்கைகளை நடத்த உத்தரவிட்டால் குடும்ப நல நீதிமன்ற சட்டம், 1984ன் உத்வேகம் ஆபத்தில் முடியும் என்றும், நீதி தோற்கடிக்கப்படும் என்றும், உச்சநீதிமன்றம் கூறியது.

(A) கிருஷ்ணவேணி நாகம் – எதிர் – ஹரிஸ் நாகம்

(B) கே.ஸ்ரீனிவாச ராவ் – எதிர் – டி.ஏ. தீபா

(C) சாந்தினி – எதிர் – விஜயா வெங்கடேஸ்

(D) ஜக்ராஜ் – எதிர் – பிர் பால் கவுர்

84. A mohomedan, agrees to live in his father-in-law's house and to pay his wife Rs. 2,00,000, if he does not do so and deserts his wife. It is also stipulated that if he fails to pay the above amount according to this agreement, the wife shall have the right to seek dissolution of marriage. The wife accordingly files a suit for dissolution of marriage. In the above background, which of the following statements is/are correct?

I. An anti-nuptial agreement by which the husband agrees to live with his father-in-law is not valid.

II. The stipulation for dissolution of marriage in the contingency of default by the husband is enforceable.

III. Muslim law allows the husband to delegate to the wife the power to divorce in stipulated contingencies

(A) All the above statements are correct

(B) All the above statements are not correct

(C) Statements II and III alone are correct

(D) Statement I alone is correct

ஒரு இஸ்லாமிய நபர் தன்னுடைய மாமனார் வீட்டில் குடியிருப்பதாகவும், அவ்விதம் குடியிருக்காமல் தன் மனைவியை கைவிட்டுவிட்டால் தன் மனைவிக்கு ரூபாய் 2 லட்சத்தை கொடுப்பதாகவும் ஒப்புக்கொள்கிறார். அந்த ஒப்பந்தத்தின்படி அவர் மேற்கூறிய தொகையை கொடுக்காவிட்டால் திருமணமுறிவு பெறுவதற்கு அவரது மனைவிக்கு உரிமை இருக்கிறது என்று அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி அவரது மனைவி திருமணத்தை முறிப்பதற்காக ஒரு வழக்கை தாக்கல் செய்கிறார். மேலே கண்ட பின்னனியில் கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

I. மாமனார் வீட்டில் வாழ்வதாக ஒப்புக்கொண்டு கணவர் விவாகத்திற்கு முன்பு செய்து கொண்ட ஒப்பந்தம் செல்லாது.

II. கணவரின் தவறுக்கான, திருமண முறிவுக்கான நிபந்தனை செயல்படுத்தபடக்கூடியது.

III. இஸ்லாமிய சட்டம், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், விவாகரத்து பெறுவதற்கான அதிகாரத்தை மனைவிக்கு வழங்க கணவரை அனுமதிக்கிறது.

(A) மேலே கண்ட கூற்றுக்கள் அனைத்தும் சரியானவை.

(B) மேலே கண்ட கூற்றுக்கள் அனைத்தும் சரியானவை அல்ல.

(C) கூற்றுக்கள் II மற்றும் III மட்டும் சரியானது.

(D) கூற்று I மட்டும் சரியானது.

85. Palanivel is son of Balaraman and Lakshmi. Palanivel was born on 15.5.1981. Balaraman sold the share of Palanivel for himself and on behalf of Minor Palanivel on 11.2.1986. Balaraman died on 2.12.1987. Palanivel died on 18.7.1988. The mother of Palanivel namely Lakshmi, who is legal heir of palanivel, filed a suit to set aside the sale deed dated 11.2.1986. The limitation for filing the suit would end on

(A) 1.12.1990

(B) 14.5.2002

(C) 10.2.1989

(D) 17.7.1991

பலராமன் மற்றும் லட்சுமி ஆகியோர்களின் மகன் பழனிவேல் என்பவர் ஆவார். பழனிவேல் 15–05–1981ல் பிறந்தார். பலராமன் பழனிவேல் என்பவரின் பாகத்தை தனக்காவும் மற்றும் மைனர் பழனிவேல் என்பவருக்காகவும், 11–02–1986ல் விற்றுவிட்டார். பலராமன் 02–12–1987ல் இறந்துவிட்டார். பழனிவேல் 18–07–1988ல் இறந்துவிட்டார். பழனிவேலுவின் தாயாரான லட்சுமியம்மாள் பழனிவேலின் வாரிசு என்ற முறையில் மேற்கூறிய 11–02–1986 தேதியிட்ட கிரையப் பத்திரத்தை ரத்து செய்ய வழக்கை தாக்கல் செய்திருக்கிறார். அவ்வழக்கை தாக்கல் செய்வதற்கான காலவரையறை ————— ல் முடியும்

(A) 1.12.1990

(B) 14.5.2002

(C) 10.2.1989

(D) 17.7.1991

86. Which of the following statements are correct?

I. A Trust or a Society can be appointed as hereditary trustee of a Hindu temple.

II. A prescriptive title as hereditary trustees of the temple can be acquired.

(A) Both the above statements are correct

(B) Both the above statements are not correct

(C) Statement I alone is correct

(D) Statement II alone is correct

கீழ்க்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

I. ஒரு பொறுப்புரிமை அமைப்பு அல்லது சங்கத்தை ஒரு இந்து கோவிலில் பரம்பரை அறங்காவலராக நியமிக்க முடியும்.

II. கோவிலின் பரம்பரை அறங்காவலர் என்ற பதவியை நீடானுபோகம் மூலம் உரிமையை பெற முடியும்.

(A) மேற்கூறிய இரண்டு கூற்றுக்களும் சரியானது.

(B) மேற்கூறிய இரண்டு கூற்றுக்களும் சரியானது அல்ல.

(C) கூற்று I மட்டும் சரியானது

(D) கூற்று II மட்டும் சரியானது

87. Under Sec. 33 of the Trademark Act, where the proprietor of an earlier trade mark has acquiesced for a continuous period of ———— in the use of a registered trade mark, being aware of that use, he shall no longer be entitled to claim any relief on the basis of that earlier trade mark.

Which of the following is correct to fill in the blank?

(A) 5 years

(B) 3 years

(C) 2 years

(D) 1 year

வணிக குறியீடு சட்டம் பிரிவு 33ன் கீழ் முந்தைய வணிக குறியீட்டின் உரிமையாளர், அவருடைய பதிவு செய்யப்பட்ட வணிக குறியீட்டின் உபயோகத்தை, மற்றொரு நபர் கொண்டிருப்பதை, தொடர்ந்து ———— வருடங்கள் தெரிந்தே ஏற்றுக்கொண்டால், அந்த முந்தைய வணிக குறியீட்டின் அடிப்படையில் பரிகாரத்தை பெற அவருக்கு உரிமையில்லை?

காலியிடத்தை நிரப்ப கீழ்கண்டவற்றில் எது சரியானது?

(A) 5 வருடங்கள்

(B) 3 வருடங்கள்

(C) 2 வருடங்கள்

(D) 1 வருடம்

88. In which of the following cases, a patent cannot be granted?

I. an invention relating to atomic energy

II. a method of agriculture or horticulture

III. a substance obtained by a mere admixture resulting only in the aggregation of the properties of the components thereof or a process for producing such substance

IV. a formulation of an abstract theory

(A) I and II

(B) III and IV

(C) I and IV

(D) All the above

கீழ்கண்டவைகளில் எதற்கு காப்புரிமையை கொடுக்க முடியாது?

I. அணுசக்தி சம்மந்தமான ஒரு கண்டுபிடிப்பு

II. விவசாயம் அல்லது தோட்டக்கலை முறை

III. பொருட்களின் பல பாகங்களை திரட்டி கலப்பதன் மூலம் கிடைக்கக்கூடிய ஒரு பொருள் அல்லது அத்தகைய ஒரு பொருளை உருவாக்குவதற்கான ஒரு செயல்முறை

IV. ஒரு சுருக்கக் கோட்பாட்டின் உருவாக்கம்

(A) I மற்றும் II

(B) III மற்றும் IV

(C) I மற்றும் IV

(D) மேலே கண்ட அனைத்தும்

89. "Actio Personalis Moritur Cum Persona" means

(A) Personal liabilities do not die with the person

(B) Welfare of the state supercedes personal welfare

(C) A person is responsible for his own actions

(D) A personal right of action dies with the person

"Actio Personalis Moritur Cum Persona" என்பது

(A) தனிப்பட்ட பொறுப்புகள் அந்த நபருடன் இறக்காது

(B) நாட்டின் நலம் தனிநபர் நலனுக்கு முன் நிற்கும்

(C) ஒரு நபர் அவரது சொந்த செயல்களுக்கு பொறுப்பாவார்

(D) ஒரு நபருக்குரிய நடவடிக்கை எடுப்பதற்கான உரிமை அந்த நபருடன் முடிவடைந்துவிடும்

90. "Bona vacantia" means:

(A) Empty goods

(B) Vacant land

(C) Order of Eviction

(D) Good vacation

"Bona vacantia" என்பது

(A) காலியான சரக்குகள்

(B) காலி நிலம்

(C) காலி செய்வதற்கான உத்தரவு

(D) நல்ல விடுமுறை

91. As against the order passed by the Co-operative Tribunal in C.M.A in surcharge proceedings,

(A) A Revision alone under Article 227 of the Constitution of India is maintainable

(B) A Writ alone under Article 226 of the Constitution of India is maintainable

(C) A Writ under Article 226 as well as revision under Article 227 of the Constitution of India is maintainable

(D) Second appeal in C.M.A alone is maintainable

கூடுதல் கட்டண நடவடிக்கைகளில், உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டில் கூட்டுறவு தீர்ப்பாயம் பிறப்புவித்த உத்திரவுக்கு எதிராக

(A) அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 227ன் கீழ் தாக்கல் செய்யப்படும் சீராய்வு மனு மட்டும் நிலைநிற்கத்தக்கது

(B) அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 226ன் கீழ் தாக்கல் செய்யப்படும் நீதிப்பேராணை மனு மட்டும் நிலைநிற்கத்தக்கது

(C) அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 226ன் கீழ் தாக்கல் செய்யப்படும் நீதிப்பேராணை மனு மற்றும் சரத்து 227ன் கீழ் தாக்கல் செய்யப்படும் சீராய்வு மனு ஆகிய இரண்டும் நிலைநிற்கத்தக்கது

(D) உரிமையியல் பல்வகை மேல்முறையீட்டில் இரண்டாம் மேல்முறையீடு மட்டுமே நிலைநிற்கத்தக்கது

92. TMG is owner of a bus. It was insured with NIC. TMG entrusted the vehicle with STC under a lease agreement for hire. When the STC was plying the vehicle with its driver, the vehicle was involved in accident. The claimants have filed a claim petition.

(A) TMG and NIC are jointly and severally liable

(B) TMG, NIC and STC are jointly and severally liable

(C) NIC and STC are jointly and severally liable

(D) STC alone is liable

TMG என்பவர் ஒரு பேருந்தின் உரிமையாளர். அந்த பேருந்து NIC என்ற நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. TMG அந்த வாகனத்தை ஒரு வாடகை ஒப்பந்தம் மூலம் STC யிடம் வாடகைக்கு ஒப்படைத்திருக்கிறார். STC அதன் ஓட்டுநர் உதவியுடன் வாகனத்தை இயக்கும் போது வாகனம் விபத்தில் சிக்கியது. நஷ்டஈடு கோரி மனுதாரர்கள் ஒரு மனுவை தாக்கல் செய்திருக்கிறார்கள்.

(A) TMG மற்றும் NIC ஆகியோர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் பொறுப்பாவார்கள்

(B) TMG, NIC மற்றும் STC ஆகியோர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் பொறுப்பாவார்கள்

(C) NIC மற்றும் STC ஆகியோர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் பொறுப்பாவார்கள்

(D) STC மட்டும் பொறுப்பாகும்

93. Statement : A wooden chair while being used by a guest caused injury to him due to defective manufacture. The guest is entitled to claim damages from the maker.

Reason (R) : Manufacturer owes a duty of care to the ultimate user.

Which of the following is correct?

(A) Both statement and reason are correct

(B) Both Statement and reason are correct, but Reason is not the correct explanation of statement.

(C) Statement is correct, but reason is not correct

(D) Statement is not correct, but reason is correct

கூற்று : ஒரு மர நாற்காலியை வீட்டிற்கு வந்த விருந்தாளி பயன்படுத்தும்போது அந்த நாற்காலியை செய்யும்போது, அதில் ஏற்பட்ட குறைபாட்டின் காரணமாக, அவருக்கு காயம் ஏற்பட்டது. அந்த நாற்காலியை உற்பத்தி செய்தவரிடமிருந்து நஷ்டஈட்டை கோர விருந்தாளிக்கு உரிமை இருக்கிறது.

காரணம் : உபயோகிப்பாளரின் பாதுகாப்பு கடமையை உற்பத்தியாளர் கொண்டிருக்கிறார்.

கீழ்கண்டவைகளில் எது சரியானது?

(A) கூற்று மற்றும் காரணம் சரியானது

(B) கூற்று மற்றும் காரணம் சரியானது, ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கம் இல்லை

(C) கூற்று சரியானது, காரணம் சரியானது இல்லை

(D) கூற்று தவறானது, காரணம் சரியானது

94. "Impotentia Excusat Legem" means

(A) Impotence is an not a ground for divorce

(B) Impotence is a ground for divorce

(C) Impossibility does not excuse the law

(D) Impossibility excuses the law

"Impotentia Excusat Legem" என்பது

(A) ஆண்மை குறைவு என்பது விவகாரத்திற்கான ஒரு காரணம் இல்லை

(B) ஆண்மை குறைவு என்பது விவாகரத்திற்கான ஒரு காரணம் ஆகும்

(C) சாத்தியமற்றதை சட்டம் தவிர்க்காது

(D) சாத்தியமற்றதை சட்டம் தவிர்க்கும்

95. What is meant by the term '*actionable per se*'?

(A) Actionable only in the civil courts

(B) A tort of strict liability

(C) Actionable without proof of damage

(D) Actionable at the instance of the injured party only

*Actionable per se* என்பது

(A) உரிமையியல் நீதிமன்றங்களில் மட்டுமே நடவடிக்கை எடுக்கத்தகுந்தது

(B) ஒரு கடும் பொறுப்புத் தீங்கு

(C) சேதத்தை நிரூபிக்காமல் நடவடிக்கை எடுக்கத்தகுந்தது

(D) ஊறுவிளைவிக்கப்பட்ட தரப்பினரின் கோரிக்கையின் பேரில் மட்டுமே நடவடிக்கை எடுக்கத் தகுந்தது

96. Which of the following statements is not true of Bailey v Ministry of Defence?

(A) The claimant sustained brain damage following a cardiac arrest

(B) The claimant was unsuccessful due to her inability to establish causation

(C) Cumulative factors combined to cause her damage

(D) The defendant had not been negligent in relation to her post-operative care

கீழ்கண்ட கூற்றுக்களில் எது பெய்லி -எதிர்- பாதுகாப்பு அமைச்சகம் என்ற வழக்கில் உண்மையானது இல்லை?

(A) கோருரிமையாளருக்கு மாரடைப்பின் காரணமாக மூளையில் சேதம் ஏற்பட்டது

(B) காரணத்தை நிரூபிக்க இயலாததால் கோருமையாளரால் வெற்றி பெற முடியவில்லை

(C) ஒட்டுமொத்த காரணிகளும் இணைந்து அவருக்கு சேதம் விளைவித்தது

(D) பிரதிவாதி அறுவை சிகிச்சைக்கு பின்பு கவனக்குறைவாக இருக்கவில்லை

97. Which of the following statements is correct?

I. The dispute as to right of worship is one of a civil nature within the meaning of Section 9 of the Code of Civil Procedure 1908

II. The right to remain in the community or to exercise the rights and privileges of the members of the community is a civil one.

(A) Statement I alone is correct

(B) Statement II alone is correct

(C) Both the above statements are not correct

(D) Both the above statements are correct

கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

I. வழிபடும் உரிமை சம்மந்தபட்ட பிரச்சனை உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908ன் பிரிவு 9 ன் கீழ் ஒரு உரிமையியல் பிரச்சனையாகும்

II. ஒரு சமூகத்தில் இருப்பதற்கான உரிமை, அந்த சமூகத்தின் உறுப்பினர்களுக்குரிய சலுகைகள் மற்றும் உரிமைகளை பயன்படுத்துவதற்கான உரிமை ஒரு உரிமையியல் பிரச்சனையாகும்

(A) கூற்று I மட்டும் சரியானது

(B) கூற்று II மட்டும் சரியானது

(C) மேற்கூறிய கூற்றுக்கள் இரண்டும் சரியானதல்ல

(D) மேற்கூறிய கூற்றுக்கள் இரண்டும் சரியானது

98. Court dismissed the appeal on merits under Order XXXXI Rule 17 of Code of Civil Procedure 1908, for non-appearance of the appellant. What is the remedy available to the appellant?

(A) He can file an application under Order XXXXI Rule 19 of Code of Civil Procedure 1908

(B) He has to prefer a second appeal only

(C) He can prefer second appeal only in case of existence of substantial question of law

(D) None of the above

மேல்முறையீட்டாளரின் வருகையின்மைக்காக அவரின் மேல்முறையீட்டை தகுதியின் அடிப்படையில் நீதிமன்றம் உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908ன் கட்டளை 41 விதி 17ன் கீழ் தள்ளுபடி செய்தது. மேல்முறையீட்டாளருக்கு கிடைக்கக்கூடிய தீர்வு என்ன?

(A) உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908ன் கட்டளை 41 விதி 19ன் கீழ் அவர் ஒரு மனுவை தாக்கல் செய்யலாம்

(B) அவர் இரண்டாம் மேல்முறையீட்டை மட்டுமே தாக்கல் செய்ய முடியும்

(C) சட்டம் சார்ந்த பிரதான வினா இருந்தால் மட்டுமே அவர் இரண்டாம் மேல்முறையீட்டை தாக்கல் செய்ய முடியும்

(D) மேற்கண்ட எதுவுமில்லை

99. Section 26 of the Indian Contract Act declares the agreement void on the ground of

(A) Absolute restraint only

(B) Partial restraint only

(C) Both absolute or partial restraint

(D) None of the above

இந்திய ஒப்பந்தச் சட்டம் பிரிவு 26 கீழ்கண்ட எந்த காரணங்களின் அடிப்படையில் ஒப்பந்தத்தை செல்லாது என்று கூறுகிறது?

(A) முழுமையான கட்டுப்பாடு மட்டும்

(B) பகுதியான கட்டுப்பாடு மட்டும்

(C) பகுதியான அல்லது முழுமையான கட்டுப்பாடு ஆகிய இரண்டும்

(D) மேற்கூறிய எதுவுமில்லை

100. Which of the following statements is/are correct?

I. If court has jurisdiction to try the suit when it comes for disposal, it then cannot refuse to try the suit by reason of the fact that it had no jurisdiction to entertain it at the date of institution of suit.

II. The burden of proof in this behalf shall lie on the party who asserts that the civil court's jurisdiction is ousted.

(A) Statements I and II are correct

(B) Statement I alone is correct

(C) Statement II alone is correct

(D) Statements I and II are not correct

கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

I. ஒரு வழக்கு இறுதி முடிவுக்கு வரும்போதுதான் அந்த நீதிமன்றம் அவ்வழக்கை விசாரிக்க அதிகாரம் பெற்றிருக்குமானால், அந்த வழக்கை தாக்கல் செய்யும் பொழுது அந்த வழக்கை விசாரிக்க அந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்ற காரணத்தினால் மட்டுமே அவ்வழக்கினை விசாரணை செய்ய நீதிமன்றம் மறுக்க முடியாது

II. உரிமையியல் நீதிமன்றத்திற்கு ஒரு வழக்கை விசாரிக்க அதிகார வரம்பு இல்லை என்று யார் கூறுகிறார்களோ அவர்கள் தான் அதை நிரூபிக்க வேண்டும்

(A) கூற்றுக்கள் I மற்றும் II சரியானது

(B) கூற்று I மட்டும் சரியானது

(C) கூற்று II மட்டும் சரியானது

(D) கூற்றுக்கள் I மற்றும் II சரியானவை இல்லை

---

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

6. You must write your Question Booklet number in the space provided in the OMR Answer Sheet with Blue or Black ink Ball point pen only.

7. The Question Booklet is provided in four series viz., [A], [B], [C] & [D]. The name of the series is printed on the Right corner of the Question Booklet. Mark and shade your Question Booklet series [A], [B], [C] or [D] in the OMR answer sheet by darkening the appropriate circle. Wrong marking/non-marking of the Booklet series will lead to invalidation of the OMR answer sheet.

8. Each question has four responses Ⓐ, Ⓑ, Ⓒ and Ⓓ. You have to select ONLY ONE correct answer in the OMR Answer Sheet. In case, you feel that there are more correct answers than one, mark only the answer which you consider as the most appropriate. In any case, choose ONLY ONE answer for each question. E.g., If for any question, response B is the correct answer, you have to shade as follows: Ⓐ ● Ⓒ Ⓓ. If you mark more than one answer, for one question, the answer will be treated as incorrect.

9. You should not remove or tear off any sheet from this Question Booklet. You are not allowed to take the Question Booklet and the OMR Answer Sheet out of the Examination Hall during the time of examination. You are permitted to take the Question Booklet only after completion of the Examination.

10. Failure to comply with any of the above instructions will render you liable for action or penalty as the High Court may decide at their discretion.

11. The facts and particulars given in the Question paper i.e. name of Court, place, name of parties etc. are fictional and may not be true in real and legal sense. Yet the candidates have to conclusively assume them to be true for the purpose of answering the paper, without interpreting them in any other manner.

12. Using Whitener / Blade / Sharp edged instrument / Eraser or any kind of tampering to change the answers on OMR answer sheet will lead to invalidation.

# DELAN2532

Q.Booklet Series : **A**

Q.Booklet No. 

Register No. 

**Time : Three Hours (02.00 p.m. to 05.00 p.m.)**
**(Afternoon Session)**

**Marks: 100**
**(0.25 negative mark for each incorrect answer)**

## (OBJECTIVE TYPE)

## PAPER – II

## 2020

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

## IMPORTANT INSTRUCTIONS

1. The Candidates will be supplied with Question Booklet 15 minutes before commencement of the examination.

2. This Question Booklet contains 100 objective type questions. Before answering, the candidates are requested to verify whether all the questions are in seriatim and ensure that there are no blank pages in the question booklet. In case, any defect is noticed, it shall be reported to the Invigilator immediately and before commencement of the Examination, so as to be replaced with a new (same series) Question Booklet. Thereafter, it will not be replaced.

3. The Question Paper is Bi-lingual, i.e., in English and Tamil. All questions carry equal marks i.e., $100 \times 1 = 100$ marks. **For each, incorrect answer, 0.25 marks will be deducted.**

4. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet, except in the space provided for rough work.

5. Personalized OMR Answer Sheets of the Candidates will be supplied by the invigilator for answering the Questions. If the OMR Answer Sheet is, in anyway defective, the same shall be brought to the notice of the Invigilator immediately before shading, so as to supply a spare OMR answer sheet.

[Turn over

SPACE FOR ROUGH WORK

1. A person covers a certain distance by car at a speed of 30 Kmph and comes back at a speed of 40 Kmph. The average speed during the travel is

(A) 34.3 Kmph (B) 37.5 Kmph

(C) 35 Kmph (D) 32.8 Kmph

ஒரு மணிக்கு 30 கி.மீ வேகத்தில் ஒரு நபர் காரில் ஒரு குறிப்பிட்ட தூரத்தை அடைகிறார். ஒரு மணிக்கு 40 கி.மீ வேகத்தில் அவர் திரும்புகிறார். பயணத்தில் அவரின் சராசரி வேகம்

(A) ஒரு மணிக்கு 34.3 கி.மீ (B) ஒரு மணிக்கு 37.5 கி.மீ

(C) ஒரு மணிக்கு 35 கி.மீ (D) ஒரு மணிக்கு 32.8 கி.மீ

2. Which one of the following is commonly used in Narco-analysis?

(A) Atropine sulfate

(B) Scopolamine hydro bromide

(C) Opium compounds

(D) Phenobarbital

கீழ்கண்டவற்றில் எது Narco Analysis (உண்மையை கண்டறியும்) சோதனையில் பயன்படுத்தப்படுகிறது?

(A) அட்ரோபின் சல்பேட்

(B) ஸ்கோபோலமைன் ஹைட்ரோ புரோமைட்

(C) அபின் கலவைகள்

(D) பினோபார்பிடல்

3. Which is the best forensic sample for DNA analysis?

(A) Blood in EDTA

(B) Hair

(C) Vitreous humor

(D) Femur bone

மரபணு சோதனை பகுப்பாய்வுக்கு தேவைப்படும் சிறந்த தடையவியல் மாதிரி எது?

(A) இடிடிஏவில் உள்ள ரத்தம்

(B) முடி

(C) விட்ரியஸ் கூமர்

(D) தொடை எலும்பு

4. What is the status of a Child Marriage that had been performed in violation of any order passed by the Magistrate prohibiting the performance of that Child Marriage?

(A) Is considered to have never been performed and is no marriage at all in the eyes of law

(B) The marriage is voidable at the instance of the minor

(C) The marriage can be repudiated after the minor attains majority

(D) The marriage is valid unless and until declared by court of law

குழந்தை திருமணம் செய்வதை தடை செய்து ஒரு நடுவர் பிறப்புவித்த உத்தரவை மீறி நடத்தப்பட்ட குழந்தை திருமணத்தின் தகுதி என்ன?

(A) அந்த திருமணம் நடைபெறவில்லை என்று கருதப்பட வேண்டும் மற்றும் அது சட்டத்தின் பார்வையில் ஒரு திருமணமே இல்லை

(B) இளவரின் விருப்பத்தின் பேரில் அந்த திருமணம் தவிர்தகு திருமணம் ஆகும்

(C) இளவர் உரிமை வயதை அடைந்தவுடன் அவரது திருமணத்தை ரத்து செய்யலாம் அல்லது நிராகரிக்கலாம்

(D) நீதிமன்றத்தால் அந்த திருமணம் செல்லாது என்று விளம்புகைப்படுத்தப்படாவிடில் அந்த திருமணம் செல்லும்

5. Can a person attend and participate in a Child Marriage as a social function when invited as a guest?

(A) Yes can attend and participate in a Child Marriage as long as he is not an abettor or organizer

(B) No, attending a child marriage is an offence. If he attends, he will be liable to be punished

(C) Yes, can attend and participate in a Child Marriage as long as he is not the concerned family member

(D) No, he cannot attend as there is a moral obligation though there is no legal obligation preventing a person from merely attending a child marriage

ஒரு நபர் தன்னை சமூக விழா விருந்தாளியாக அழைக்கப்படும்போது அந்த நபர் அதில் கலந்து கொண்டு குழந்தை திருமணத்திலும் பங்கேற்கலாமா?

(A) ஆம். அந்த நபர் குற்ற உடந்தையாளராகவோ அல்லது ஏற்பாட்டாளராகவோ இல்லாதவரை அவர் கலந்து கொண்டு குழந்தை திருமணத்தில் பங்கேற்கலாம்

(B) இல்லை. குழந்தை திருமணத்தில் பங்கு கொள்வது ஒரு குற்றமாகும். அந்த நபர் கலந்து கொண்டால் அவர் தண்டிக்கப்படத்தக்கவர்

(C) ஆம். அந்த நபர் சம்மந்தப்பட்ட குடும்ப உறுப்பினராக இல்லாதவரை அவர் கலந்து கொண்டு குழந்தை திருமணத்திலும் பங்கேற்கலாம்

(D) இல்லை. குழந்தை திருமணத்தில் கலந்து கொள்வதை தடை செய்ய சட்டப்படியான கடமை இல்லாவிட்டாலும் கூட தார்மீக கடமை இருப்பதால் அவர் கலந்து கொள்ள கூடாது

6. Sexual Harassment at Workplace (Prevention, Prohibition and Redressal) Act, 2013 applies to which of the following?

(A) Only Women

(B) Only Men

(C) Men and women and transgender

(D) Women and Transgender who identifies as a woman

வேலை செய்யும் இடத்தில் பாலியல் தொந்தரவு செய்வதை தடை செய்யும் மற்றும் நிவாரணச் சட்டம் 2013 கீழ்கண்டவற்றில் யாருக்கு பொருந்தும்?

(A) பெண்களுக்கு மட்டும்

(B) ஆண்களுக்கு மட்டும்

(C) பெண்கள், ஆண்கள் மற்றும் திருநங்கை

(D) பெண்கள் மற்றும் பெண்ணாக தன்னை அடையாளத்தைக் காட்டும் திருநங்கை

7. Whether a complaint under Protection of Women from Domestic Violence Act is maintainable against a female relative of the husband?

(A) "Female" has not been used in the proviso to Section 2(q). Hence complaint is not maintainable

(B) In the Act, restrictive meaning has been given to the expression "relative" to make it specific to males only

(C) Female is also included in the Act

(D) Female relative of the husband are not considered to be relative of the husband as per the Act

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழான ஒரு புகார் மனு கணவரின் உறவினரான ஒரு பெண்ணுக்கு எதிராக நிலைநிற்கத்தக்கதா?

(A) மேற்கூறிய சட்டம் பிரிவு 2(q)ன் நிபந்தனைப் பிரிவில், கணவரின் உறவினரான பெண் என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்படாததால் அவருக்கு எதிரான புகார் நிலைநிற்கத்தக்கது அல்ல

(B) அந்த சட்டத்தில் "உறவினர்" என்ற சொல் ஆண்களை மட்டும் குறிக்கிறது என்ற வகையில் கட்டுப்படுத்தப்பட்ட விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது

(C) அந்த சட்டத்தில் பெண்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்

(D) கணவரின் உறவினரான அந்த பெண் கணவரின் உறவினராக அந்த சட்டத்தின்படி கருதப்பட முடியாது

8. Match the following under the provisions of Information Technology Act :

| | | | |
|---|---|---|---|
| (a) | Child pornography | 1. | Section 79 |
| (b) | Cyber Terrorism | 2. | Section 67 B |
| (c) | Identity theft | 3. | Section 66 C |
| (d) | Liability of Intermediaries | 4. | Section 66 F |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 1 | 4 | 2 | 3 |

தகவல் மற்றும் தொழில்நுட்ப சட்டத்தின்கீழ் கீழ்கண்டவற்றை பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | குழந்தைகளை ஆபாசமாக காட்டுதல் | 1. | பிரிவு 79 |
| (b) | சைபர் தீவிரவாதம் | 2. | பிரிவு 67 B |
| (c) | அடையாள திருட்டு | 3. | பிரிவு 66 C |
| (d) | இடைத்தரகர்களின் பொறுப்பு | 4. | பிரிவு 66 F |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 1 | 4 | 2 | 3 |

9. Upon consideration of evidence of witness, examination of witnesses and the circumstantial evidence, the Court provisionally presumed that the accused was present at the crime scene. However, after the results of the forensic tests came back, they were negative and thus, brought the presumption of the Court under threat. Can the accused give rebuttal evidence using the forensic results?

(A) No, cannot as circumstantial evidence carries more weight than forensic evidence

(B) Yes, can as forensic evidence carries more weight than circumstantial evidence

(C) Yes, can as the presumption can be rebutted by providing convincing evidence of the opposing view

(D) No, as any presumption of the Court will be binding upon the parties.

சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சூழ்நிலை சாட்சியத்தை கருத்தில் கொண்டு நீதிமன்றம் முதலில் குற்றம் சாட்டப்பட்டவர் சம்பவ இடத்தில் இருந்தார் என்று அனுமானித்தது. எனினும், தடயவியல் சோதனையின் முடிவு அதற்கு எதிராக வந்து அது நீதிமன்றத்தின் அனுமானத்தை அச்சத்தில் ஆழ்த்தியது. தடயவியல் துறையின் முடிவைப் பயன்படுத்தி குற்றம் சாட்டப்பட்டவர் மறுத்தளிக்கும் சாட்சியத்தை கொடுக்க முடியுமா?

(A) முடியாது. ஏனெனில், சூழ்நிலை சாட்சியம் தடயவியல் சாட்சியத்தை விட அதிக வலுவைக் கொண்டிருக்கும்

(B) முடியும். ஏனெனில், தடயவியல் சாட்சியம் சூழ்நிலை சாட்சியத்தை விட அதிக வலு கொண்டுள்ளது

(C) முடியும், ஏனெனில், நம்பும்படியான சாட்சியத்தை அளித்து அனுமானத்தை பொய்யாக்க முடியும்

(D) முடியாது. ஏனெனில், நீதிமன்றத்தின் அனுமானம் தரப்பினர்களை கட்டுப்படுத்தக் கூடியது

10. A is accused of defaming B by publishing an imputation intended to harm the reputation of B. The fact of previous publication by A with respect to B, showing ill will on A's part towards B is relevant

(A) Because it proves the preparation for harming B's reputation

(B) As it is necessary to explain fact in issue

(C) As proving intention to harm B's reputation

(D) As it is the effect of relevant fact

B யின் மதிப்புக்கு ஊறு விளைவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு குற்றச்சாட்டை பிரசுரித்ததாக A குற்றஞ்சாட்டப்படுகிறார். B க்கு எதிராக இதே போன்ற ஒரு வெளியீட்டை A வெளியிட்டார். அது A ன் தீய எண்ணத்தை காட்டும் என்ற சங்கதி தொடர்புடையது

(A) ஏனெனில் Bயின் பெயருக்கு ஊறு விளைவிக்க ஏற்பாடு செய்ததை அந்த சங்கதி நிரூபிக்கும்

(B) ஏனெனில் அந்த சங்கதி பிரச்சனையில் உள்ள சங்கதியை விளக்குவதற்கு தேவையான சங்கதி ஆகும்

(C) ஏனெனில், Bயின் பெயருக்கு ஊறு விளைவிக்கும் எண்ணத்தை நிரூபிக்கும் சங்கதி ஆகும்

(D) ஏனெனில், அது தொடர்புடைய சங்கதியின் விளைவு ஆகும்

11. After commission of offence of house break and theft, the accused left his foot prints which show his invasion. From the scene of occurrence, the foot print of an accused was lifted. This is relevant under

(A) Section 6 of Indian Evidence Act

(B) Section 7 of Indian Evidence Act

(C) Section 8 of Indian Evidence Act

(D) Section 9 of Indian Evidence Act

வீட்டை உடைத்து திருடிய பின்னர், எதிரி அந்த வீட்டிற்குள் நுழைந்ததைக் காட்டும் வகையில் அவரது பாதச்சுவடுகளை விட்டுச்சென்றார். சம்பவ இடத்திலிருந்து எதிரியின் பாதச்சுவடு எடுக்கப்பட்டது. இது:

(A) இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 6 ன் கீழ் தொடர்புடையது

(B) இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 7 ன் கீழ் தொடர்புடையது

(C) இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 8 ன் கீழ் தொடர்புடையது

(D) இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 9 ன் கீழ் தொடர்புடையது

12. After making the statement before the police, the first informant succumbed to his injuries; the statement

(A) Can be treated as a dying declaration and is admissible under S.32(1) of the Indian Evidence Act

(B) Cannot be treated as a dying declaration and is not admissible under S.32(1) of the Indian Evidence Act

(C) Can be treated as a previous statement only

(D) None of the above

காவல்துறையினரிடம் வாக்குமூலம் கொடுத்தவுடன் அந்த முதல் தகவல் கொடுத்தவர் தனக்கேற்ப்பட்ட காயத்தால் இறந்துவிட்டார். அவரது வாக்குமூலம்

(A) இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 32(1) ன் கீழ் மரண வாக்குமூலமாக கருதப்பட்டு அது ஏற்றுக்கொள்ளத்தக்கது

(B) இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 32(1)ன் கீழ் மரண வாக்குமூலமாக கருதப்பட முடியாது மற்றும் அது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல

(C) முந்தய வாக்குமூலம் என்று மட்டுமே கருதப்படும்

(D) மேற்கண்ட எதுவுமில்லை

13. Funds belonging to Government of India are kept in

(A) Consolidated funds of India

(B) Public Account funds of India

(C) Contingency funds of India

(D) All the above

இந்திய அரசாங்கத்துக்கு சொந்தமான நிதி எங்கே வைக்கப்படுகிறது?

(A) இந்திய தொகுப்பு நிதி

(B) இந்திய பொது கணக்கு நிதி

(C) இந்திய எதிர்பாரா செலவு நிதி

(D) மேற்கண்ட அனைத்தும்

14. A day is added when one crosses

(A) The equator from South to North

(B) The equator from North to South

(C) 180 degree longitude from East to West

(D) 180 degree longitude from West to East

கீழ்கண்டவற்றில் எது ஒன்று கடந்து செல்லும்போது ஒரு நாள் சேர்க்கப்படுகிறது?

(A) பூமத்தியரேகை தெற்கிலிருந்து வடக்கிற்கு கடக்கும்போது

(B) பூமத்தியரேகை வடக்கிலிருந்து தெற்கிற்கு கடக்கும்போது

(C) 180 டிகிரி தீர்க்கரேகை கிழக்கிலிருந்து மேற்கிற்கு கடக்கும்போது

(D) 180 டிகிரி தீர்க்கரேகை மேற்கிலிருந்து கிழக்கிற்கு கடக்கும்போது

15. One kg Heroine, was recovered from the possession of the accused. According to the FSL report, the purity of Heroin was only 1.4%. i.e 14 grams per kg . While seeing if it would come under small quantity or not

(A) The actual content, by weight, of offending drug is only relevant for the purpose of determining whether it would constitute small quantity or commercial quantity

(B) Total weight of such "manufactured drug" or "preparation", including the neutral material and catalyst used is required to be considered while determining if it is small quantity or commercial quantity

(C) The weight of the drugs including its wrapper or container is to be considered for the purpose of determining whether it would constitute small quantity or commercial quantity

(D) The actual content of the offending drug and the neutral substance used are alone to be taken into consideration while determining whether it is small quantity or commercial quantity.

எதிரியிடமிருந்து 1 கிலோ ஹெராயின் கைப்பற்றப்பட்டது. தடயவியல் துறையின் அறிவிக்கையின்படி, ஹெராயினின் தூய்மைத் தன்மை 1.4% ஆகும். அதாவது ஒரு கிலோவிற்கு 14 கிராம் ஆகும். அவ்விதம் பார்க்கையில் அது சிறிய அளவில் வருமா அல்லது வராதா?

(A) சிறிய அளவில் அல்லது வணிக அளவில் வருமா என்பதை தீர்மானிப்பதற்கு அந்த பொருளில் உள்ள போதைப்பொருளின் உண்மையான எடையே தொடர்புடையது ஆகும்

(B) சிறிய அளவில் அல்லது வணிக அளவில் வருமா என்பதை தீர்மானிப்பதற்கு நடுநிலைப்பொருள் மற்றும் வினையூக்கி உள்ளடக்கிய உற்பத்தி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட மருந்தின் மொத்த எடையை கருத்தில் கொள்ள வேண்டும்

(C) சிறிய அளவில் அல்லது வணிக அளவில் வருமா என்பதை தீர்மானிப்பதற்கு மேலுறை அல்லது அதில் உள்ளடக்கிய பொருட்கள் உள்ளடங்கிய அந்த மருந்தின் மொத்த எடையை கருத்தில் கொள்ள வேண்டும்

(D) சிறிய அளவில் அல்லது வணிக அளவில் வருமா என்பதை தீர்மானிப்பதற்கு அந்த பொருளில் உள்ள போதைப்பொருளின் உண்மையான எடை மற்றும் நடுநிலை மற்றும் அதில் பயன்படுத்தப்பட்ட நடுநிலைப்பொருளின் உண்மையான எடை ஆகியவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்

16. As regards prosecution for theft of electricity under Section 135 of Electricity Act, which of the following statements is correct?

(A) Mensrea is a relevant factor

(B) Mensrea need not be proved

(C) Strict liability will be attracted

(D) Only for ordering damages, mensrea is necessary

மின்சார சட்டத்தின் பிரிவு 135 ன் கீழ் மின் திருட்டுக்கான குற்றச்சாட்டு சம்மந்தமாக கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

(A) குற்றமனம் என்பது ஒரு சம்மந்தப்பட்ட காரணியாகும்

(B) குற்றமனத்தை நிரூபிக்கத் தேவையில்லை

(C) கடும் பொறுப்பு வரும்

(D) சேதத்தை பார்க்க மட்டும் குற்றமனம் தேவையானதாகும்

17. Whether the Special Court for Electricity Act can take cognizance directly without an order of committal as contemplated under Section 193 of the Code of Criminal Procedure, 1973

(A) In view of the judgment in Shalini Steels Private Limited, the court cannot directly take cognizance

(B) In view of Section 151 of the Electricity Act, 2003, Special Court is empowered to take cognizance without there being an order of committal

(C) Special court can take cognizance only after committal by the magistrate

(D) None of the above

மின்சார சட்டத்திற்கான சிறப்பு நீதிமன்றம் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 ன் பிரிவு 193 ன் கீழ் ஒரு வழக்கை மேல் விசாரணைக்கு அனுப்பாமல் நேரடியாக அசல் அதிகாரம் கொண்ட நீதிமன்றம் என்ற முறையில் வழக்கை கோப்பிற்கு எடுக்க முடியுமா?

(A) சாலினி ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பின் படி நீதிமன்றம் நேரடியாக அசல் அதிகாரம் கொண்ட நீதிமன்றமாக நேரடியாக விசாரணைக்கு எடுக்க முடியாது

(B) மின் சட்டம் 2003 ன் பிரிவு 151-ன் படி, ஒரு சிறப்பு நீதிமன்றம், அதற்கு ஒரு வழக்கை மேல் விசாரணைக்கு அனுப்பப்படாமலேயே, அசல் அதிகாரம் கொண்ட நீதிமன்றமாக நேரடியாக விசாரணைக்கு எடுக்க அதிகாரம் இருக்கிறது

(C) நீதித்துறை நடுவர் மேல் விசாரணைக்கு அனுப்பினால் மட்டுமே சிறப்பு நீதிமன்றம் வழக்கை விசாரணைக்கு எடுக்க முடியும்

(D) மேற்கண்ட எதுவுமில்லை

18. Illustration 1 : The accused in an inebriated state was driving the vehicle without license caused accident due to rash and negligent driving at a high speed which resulted in death of six persons.

Illustration 2 : The accused took a woman in his vehicle by giving her lift and tried to molest her but she jumped of the moving vehicle and was run over by a truck and killed.

Illustration 3 : The wife poured kerosene on herself and threatened the husband that she would commit suicide. The husband in a drunken mood threw a live match stick on her and burnt her to death.

Which of the following is correct?

(A) Illustration 1 to 3 do not attract 304 IPC

(B) Illustration 1 and 3 attract offence under section 304 IPC

(C) Illustration 1 and 2 attract offence under section 304 IPC

(D) Illustration 2 and 3 attract offence under section 304 IPC

உதாரணம் 1 : எதிரி குடிவெறியில் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஒரு வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியதால், 6 நபர்களுக்கு மரணம் ஏற்பட்டது.

உதாரணம் 2 : எதிரி அவரது வாகனத்தில் ஒரு பெண்ணுக்கு இடம் கொடுத்து வாகனத்தில் ஏற்றிச் சென்றார். அந்த பெண்ணை அவர் தொந்தரவு செய்ய முற்பட்டபோது அந்த பெண் ஓடும் வாகனத்திலிருந்து வெளியே குதித்தார். அப்போது அவர் மீது ஒரு சரக்கு வாகனம் ஏறி அவர் கொல்லப்பட்டார்.

உதாரணம் 3 : ஒரு மனைவி அவர் மீது அவரே மண்ணெண்ணை ஊற்றிக்கொண்டு தற்கொலை செய்து கொள்ள போவதாக கணவரை பயமுறுத்தினார். அவரது கணவர் குடிமயக்கத்தில் தீக்குச்சியை எறிந்ததில் அவர் மனைவி தீப்பிடித்து இறந்துவிட்டார்.

கீழ்கண்டவற்றில் எது சரியானது?

(A) உதாரணம் 1 முதல் 3 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 304ன்கீழ் வராது.

(B) உதாரணம் 1 மற்றும் 3 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 304ன்கீழ் வரும்.

(C) உதாரணம் 1 மற்றும் 2 மட்டுமே இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு304ன்கீழ் வரும்.

(D) உதாரணம் 2 மற்றும் 3 மட்டுமே இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 304ன்கீழ் வரும்.

19. Under section 320 IPC, eight clauses are described as grievous hurt:-

(A) No other hurt outside the list given in section 320 IPC can be termed as grievous hurt.

(B) The eight clauses are only illustrative and not exhaustive

(C) Based on Medico legal opinion, the court can decide cases including the illustrations given in Section 320 IPC.

(D) None of the above.

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 320 ன் கீழ் எட்டு உட்பிரிவுகளில் கொடுங்காயங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) பிரிவு 320 ல் குறிப்பிடப்பட்ட பட்டியலில் அல்லாத காயம் கொடுங்காயமாக கருதப்படாது

(B) எட்டு உட்பிரிவுகளில் உள்ள விளக்கமானது மட்டுமே முழுமையானதல்ல

(C) இதச பிரிவு 320ல் கொடுக்கப்பட்ட உதாரணங்களையும் உள்ளடக்கி, மருத்துவம் சார்ந்த சட்ட கருத்தின் அடிப்படையில் நீதிமன்றம் வழக்குகளை தீர்மானிக்கலாம்

(D) மேற்கண்ட எதுவும் இல்லை

20. Which among the following would not come under section 324 IPC within the definition of weapon of offence?

(A) Hurt by tooth

(B) Poison

(C) Burning kerosene lamp, corrosive substances

(D) All the above

கீழ்க்கண்டவற்றில் எது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 324ன் கீழான குற்றத்திற்கான ஆயுதம் என்ற வரையறைக்குள் வராது?

(A) பற்கள் மூலம் ஏற்பட்ட காயம்

(B) விஷம்

(C) மண்ணெண்ணெய் விளக்கு மூலம் சுடுதல், அரிக்கும் பொருட்கள்

(D) மேலே கண்ட அனைத்தும்

21. A marries B, both A and B having married previously and their respective spouses C & D being alive, A and B have committed

(A) Single offence of bigamy by both A & B

(B) Two offences of bigamy by A & B from the point of view of C & D

(C) Both A and B are liable for bigamy under two counts

(D) Section 9 IPC r/w section 13 of General clauses Act empowers courts to punish A and B for two counts of Bigamy

A என்பவர் B யை திருமணம் செய்கிறார். A மற்றும் B ஏற்கனவே திருமணம் ஆனவர்கள். அவர்களின் வாழ்க்கை துணைகளான C மற்றும் D உயிருடன் இருக்கிறார்கள். A மற்றும் B எந்த குற்றத்தை புரிந்திருக்கிறார்கள்?

(A) Aயும், Bயும், இருமணம் என்ற ஒரே குற்றத்தை செய்திருக்கிறார்கள்

(B) C மற்றும் D யின் பார்வையில் Aயும், Bயும் இருமணம் என்ற இரண்டு குற்றங்களை செய்திருக்கிறார்கள்

(C) இருமணக் குற்றத்திற்காக Aயும், Bயும், இரண்டு எண்ணிக்கையில் தண்டிக்கப்படத்தக்கவர்கள்

(D) இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 9 உடன் இணைந்த பொது வகைமுறைகள் சட்டம் பிரிவு 13, A மற்றும் B யை இருமணக் குற்றத்திற்காக அவர்களை இரண்டு எண்ணிக்கையில் தண்டிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.

22. L was allegedly found carrying sand on a tractor trolley being dug and loaded from the bed of Cauvery river, within the sanctuary declared under the Wild Life (Protection) Act, 1972. The Forest Authorities intercepted the tractor trolley, arrested H and seized the tractor trolley in exercise of the powers conferred under the provisions of the Act. L claiming to be the owner of the tractor trolley moved an application for release of the same.

(A) The seized property becomes the property of the Government, the Magistrate cannot pass any order for release thereof or interim custody.

(B) Under Section 457 of the Code of Criminal Procedure the court can release when the property is produced before the magistrate.

(C) The officials under the Wild Life Protection Act are not police officials hence Section 451 or 457 CrPC will not apply.

(D) Magistrate can decide the petition for interim release under section 451 Crpc keeping in mind the statutory mandate of the Act

வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972ன் கீழ் சரணாலயம் என்று அறிவிக்கப்பட்ட பகுதிக்குள் உள்ள ஒரு ஆற்றுப்படுகையிலிருந்து தோண்டி L என்பவர் டிராக்டரில் மணலை கொண்டு சென்றதாக கண்டறியப்பட்டார். வனத்துறையினர் அந்த டிராக்டரை வழிமறித்து, மேற்கூறிய சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி அதன் ஓட்டுநரை கைது செய்து வாகனத்தையும் கைப்பற்றினார்கள். வாகனத்தின் உரிமையாளர் என்று கூறி வாகனத்தை விடுவிக்கும்படி L என்பவர் ஒரு மனு தாக்கல் செய்தார்.

(A) கைப்பற்றப்பட்ட சொத்து அரசாங்கத்தின் சொத்தாகிவிட்ட படியால் நீதித்துறை நடுவர் வாகனத்தை இடைக்கால பாதுகாப்புக்காக விடுவிக்கும் உத்தரவை பிறப்பிக்க முடியாது

(B) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 457 ன்கீழ் சொத்தை நீதித்துறை நடுவர் முன் ஆஜர்படுத்திய உடன் நீதிமன்றம் சொத்தை விடுவிக்கலாம்.

(C) வனபாதுகாப்பு சட்டத்தின் கீழான அதிகாரிகள் காவல் அதிகாரிகள் இல்லை, ஆகவே, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 451 அல்லது 457 பொருந்தாது.

(D) நீதித்துறை நடுவர் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 451 ன்கீழ் இடைக்கால பாதுகாப்புக்காக அந்த மனுவை தீர்மானிக்கலாம். ஆனால் வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் சட்டப்படியான வகைமுறைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

23. A Judge who recorded the statement of a girl of seven or eight years, certified that she did not understand the sanctity of an oath and accordingly he did not administer oath to her. He, however, did not certify that the child understood the duty of speaking the truth. Whether this omission rendered her evidence inadmissible. Which of the following statements is correct

(A) Such an omission affects the admissibility of the evidence.

(B) An omission to administer, an oath, affects the credibility of the witness but not his competency.

(C) The question of competency is dealt with in S.118, Evidence Act. The Oaths Act does not deal with competency

(D) Judge and Magistrate should always record their opinion that the child understands the duty of speaking the truth.

7 அல்லது 8 வயதையுடைய ஒரு பெண்ணின் வாக்குமூலத்தை பதிவு செய்த ஒரு நீதிபதி அந்த பெண் சத்தியபிரமாணத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளாததால் அவருக்கு பிரமாணம் செய்யவில்லை என்று சான்றளித்தார். உண்மை பேச வேண்டும் என்பதை குழந்தை புரிந்து கொண்டது என்று அவர் சான்றளிக்கவில்லை. அவ்வாறு சான்றளிக்காமல் விடுபட்டது குழந்தையின் சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளதகாதாக ஆகுமா? கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) அவ்விதம் விடுபட்டது சாட்சியத்தின் ஏற்கும் தன்மையை பாதிக்கும்.

(B) பிரமாணம் செய்யாமல் விடுபட்டது சாட்சியின் நம்பகத்தன்மையை பாதிக்குமே தவிர சாட்சியின் தகுதியை பாதிக்காது.

(C) சாட்சியின் தகுதியுடைமை குறித்து இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 118ல் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரமாணச்சட்டம் தகுதியைப் பற்றி குறிப்பிடவில்லை.

(D) நீதிபதியும், நீதித்துறை நடுவரும் குழந்தை உண்மையை பேச வேண்டிய கடமையை புரிந்து கொள்கிறார் எனத் தன் கருத்தை பதிவு செய்ய வேண்டும்.

24. Which among the following is not correct with respect to the grant of anticipatory bail :

(A) The protection granted to a person under Section 438 Criminal Procedure Code does not end normally at the time and stage when the accused is summoned by the court, or when charges are framed but can continue till the end of the trial

(B) It is not essential that an application for anticipatory bail should be moved only after an FIR is filed; it can be moved earlier, so long as there is a reasonable basis for apprehending arrest.

(C) While granting anticipatory bail the court may impose condition

(D) None of the above

முன்ஜாமின் கொடுப்பது சம்மந்தமாக கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது அல்ல?

(A) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 438ன்கீழ் ஒரு நபருக்கு கொடுக்கப்பட்ட பாதுகாப்பு, அந்த நபர் நீதிமன்றத்தால் அழைக்கப்படும் வரை அல்லது குற்றச்சாட்டுகள் வனையப்படுவதுடன் முடிவடைவதில்லை. அந்த பாதுகாப்பு வழக்கின் விசாரணை முடிவடையும் வரை தொடரும்

(B) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பின்னரே முன்ஜாமின் கேட்டு மனுவைத் தாக்கல் செய்ய வேண்டுமென்பது அத்தியாவசியம் இல்லை. தான் கைது செய்யப்படுவோம் என்ற அச்சுறுத்தல் இருக்கும்வரை வழக்கை பதிவு செய்வதற்கு முன்னரே தாக்கல் செய்யலாம்.

(C) முன்ஜாமின் கொடுக்கும்போது நீதிமன்றம் நிபந்தனையை விதிக்கலாம்.

(D) மேற்கண்ட எதுவுமில்லை.

25. The statement given to a police officer by an injured person was not signed. Subsequently the injured died.

(A) The statement cannot be used as dying declaration under section 32 of Indian Evidence Act since signature was not obtained.

(B) The statement cannot be used as a substantive piece of evidence and it is hit by 162 CrPC.

(C) The statement is still a dying declaration.

(D) The statement can be used only for corroboration of prosecution case.

ஒரு காவல் அலுவலரிடம் காயப்பட்ட நபரால் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் அவரால் கையொப்பமிடப்படவில்லை. பின்னர் காயம்பட்டவர் இறந்துவிட்டார்.

(A) கையெழுத்து பெறப்படாததால் இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 32ன்கீழ் அந்த வாக்குமூலத்தை மரண வாக்குமூலமாக பயன்படுத்த முடியாது.

(B) அந்த வாக்குமூலத்தை பிரதான சாட்சியமாக பயன்படுத்த முடியாது. ஏனெனில், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 162ன் கீழ் அது தடைசெய்யப்பட்டுள்ளது.

(C) அந்த வாக்குமூலம் ஒரு மரண வாக்குமூலம் ஆகும்.

(D) அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்த மட்டுமே அந்த வாக்குமூலத்தை பயன்படுத்த முடியும்.

26. An accused was convicted for offences under section 326 IPC with imprisonment of 2 years and to pay fine of Rs 2000 with default clause. During the pendency of appeal preferred by him, he died. On his death, the appeal

(A) will abate

(B) will not abate

(C) his legal heirs are bound to pay the fine

(D) fine cannot be recovered from his estate

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 326ன்கீழ் எதிரி தண்டிக்கப்பட்டு அவருக்கு இரண்டு வருடம் சிறைத்தண்டனையும் ரூபாய் 2000/- அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் கட்ட தவறினால் சிறைதண்டனை என்று குறிப்பிடப்பட்டது. அதை எதிர்த்து அவர் தாக்கல் செய்த மேல்முறையீடு நிலுவையில் இருந்தபோது அவர் இறந்துவிட்டார். ஆகவே,

(A) அந்த மேல்முறையீடு அற்றுப்போகும்.

(B) மேல்முறையீடு அற்றுப்போகாது.

(C) அவரது வாரீசுதாரர்கள் அபராதத்தை கட்ட கடமைப்பட்டவர்கள்.

(D) அவரது சொத்திலிருந்து அபராதத்தை வசூலிக்க முடியாது.

27. After conclusion of trial for a schedule offence under The Prevention of Money Laundering Act, against Mr. A, the Adjudicating Authority, made an order confiscating property. What will happen to the attached properties after conclusion of trial?

(A) The order of attachment of property is temporary in nature in order to secure the co-operation of the accused during trial. After conclusion of trial it shall be raised

(B) The Property will be released and equivalent amount of cash will be obtained

(C) The attachment of the property and net income, if any, shall cease to have effect

(D) All the rights and title in such property shall vest absolutely in the Central Government free from all encumbrances.

பணமோசடி தடுப்புச் சட்டம் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட ஒரு குற்றத்திற்கான விசாரணை முடிவடைந்த பின்னர் தீர்ப்பளிக்கும் அலுவலர் ‘அ’ வின் சொத்தை பறிமுதல் செய்ய உத்தரவிடுகிறார். வழக்கின் விசாரணை முடிவுக்கு பின்னர் ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களுக்கு என்ன நேரும்?

(A) வழக்கு விசாரணையின் போது எதிரியின் ஒத்துழைப்பை பெறுவதற்கு தற்காலிகமாக சொத்தை ஜப்தி செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. விசாரணை முடிவடைந்த பின்னர் ஜப்தியை நீக்கரவு செய்ய வேண்டும்

(B) சொத்தை விடுவிக்க வேண்டும் மற்றும் அதற்கு சமமான பணத்தை பெற வேண்டும்

(C) சொத்தின் ஜப்தி மற்றும் நிகர வருமானம் ஏதேனும் இருப்பின் அதுவும் இல்லா நிலையாகிவிடும்

(D) சொத்தின் மீதான அனைத்து உரிமைகளும் வில்லங்கமின்றி மத்திய அரசை சேரும்

28. Whether a person having in his possession or carrying Vel sticks or Vel Kambu of any size and shape, is liable to be prosecuted under the provisions of the Arms Act, 1959?

(A) Yes, he is liable to be prosecuted under the Arms Act

(B) No, the above act will not attract the provisions of the Arms Act

(C) Arms Act deals only with fire arms and Aruvaal but not Vel kambu

(D) Arms Act has been repealed

எத்தகைய வடிவம் மற்றும் அளவில் ஒரு நபர் வேல் குச்சிகள் அல்லது வேல் கம்பை வைத்திருந்தாலோ அல்லது கொண்டு சென்றாலோ, ஆயுதங்கள் சட்டம் 1959 ன் வகைமுறைகளின் கீழ் குற்றம் சாட்டப்படக்கூடியவரா?

(A) ஆம், ஆயுதங்கள் சட்டத்தின் கீழ் அவர் குற்றம் சாட்டப்படத்தக்கவர்

(B) இல்லை, ஆயுதங்கள் சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் மேற்கூறிய செயல் வராது

(C) ஆயுதங்கள் சட்டம் துப்பாக்கி மற்றும் அரிவாளைப் பற்றி கையாளுகிறதே தவிர வேல் கம்பை அல்ல

(D) ஆயுதங்கள் சட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்டது

29. Which among the following statements is not correct under Section 9 of THE RAILWAY PROPERTY (UNLAWFUL POSSESSION) ACT:

(A) The witness is not bound to speak the truth and there is protection to the witness to refuse incriminating questions. The statement recorded by the Inquiry Officer need not be signed and attested

(B) The witness can be compelled to be a witness against himself by making verbal statement or to produce documents

(C) A person summoned is bound to attend and state truth before the inquiry Officer and answer all questions put to him and he cannot refuse to speak truth on ground of being incriminating

(D) Every such inquiry as aforesaid shall be deemed to be a "judicial proceeding" within the meaning of sections 193 and 228 of the Indian Penal Code, 1860".

கீழ்கண்ட கூற்றுக்களில் எது ரயில்வே சொத்தை சட்டவிரோதமாக உடைமையில் வைத்திருக்கும் சட்டம் பிரிவு 9ன் கீழ் சரியானவை அல்ல?

(A) சாட்சி உண்மையை சொல்ல கடமைப்பட்டவர் இல்லை. அவரை குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கும் கேள்விகளை ஆட்சேபிக்க சாட்சிக்கு பாதுகாப்பு இருக்கிறது. விசாரணை அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் கையொப்பம் மற்றும் சான்றொப்பம் இட தேவையில்லை

(B) சாட்சியிடம் வாய்மொழி வாக்குமூலத்தை பெற்று அவரை அவருக்கு எதிராகவே சாட்சியாக இருக்கும்படியோ அல்லது ஆவணங்களை தாக்கல் செய்யும்படியோ கட்டாயப்படுத்த முடியும்

(C) அழைக்கப்பட்ட ஒரு சாட்சியும், விசாரணையில் கலந்து கொண்டு விசாரணை அலுவலரிடம் உண்மையை கூறவும் மற்றும் அவரிடம் கேட்கப்படும் அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளிக்கவும் கடமைப்பட்டவர் ஆவார். அவர் குற்றச்சாட்டுக்கு உள்ளாவார் என்ற காரணத்தின் அடிப்படையில் அவர் உண்மையைக்கூற மறுக்க முடியாது

(D) இந்திய தண்டனைச் சட்டம் 1860ன் பிரிவுகள் 193 மற்றும் 228 ன் பொருள்படி மேற்கூறிய அத்தகைய ஒவ்வொரு விசாரணையும் நீதிமுறை நடவடிக்கைகள் என்று கருதப்பட வேண்டும்

30. During pendency of the Divorce petition filed by the husband against the wife on the ground of cruelty, Wife filed an application under Section 25 of the Hindu Marriage Act, 1955 and Sections 20 and 26 of the Protection of Women from Domestic Violence Act, 2005 for a sum of Rs. 10,000 to her towards monthly maintenance. Whether she can seek interim maintenance by invoking the provisions of Section 24 of the Hindu Marriage Act r/w Sections 20 and 26 of the Protection of Women from Domestic Violence Act if she had already got an order for payment of maintenance in a separate proceeding under the D.V. Act

(A) Wife cannot ask for interim maintenance

(B) Wife had already received maintenance in the DV proceedings under Section 20 of the DV Act, due to a change in the circumstances if the said order required modification or alteration, she can approach the same Court seeking the relief by invoking Section 25(2) of the DV Act

(C) Wife can ask for interim relief since proceedings under Domestic Violence and proceedings under Section 125 CrPC are independent proceedings

(D) None of the above is correct

கொடுமையை காரணமாக காட்டி மனைவிக்கு எதிராக கணவர் தாக்கல் செய்திருக்கும் விவாகரத்து மனு நிலுவையில் உள்ள போது, மனைவி இந்துத் திருமணச் சட்டம் 1955 பிரிவு 25 மற்றும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005 பிரிவுகள் 20 மற்றும் 26 ன் கீழ் கணவரிடமிருந்து மாத பராமரிப்புத் தொகையாக ரூபாய் 10,000/-த்தை தனக்கு கொடுக்க வேண்டுமென்று ஒரு மனு தாக்கல் செய்துள்ளார். மனைவி ஏற்கனவே ஜீவனாம்சத்திற்கான ஒரு உத்தரவை குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் தனி நடவடிக்கையின் மூலம் பெற்றிருக்கும் போது இந்துத் திருமணச் சட்டம் பிரிவு 24 உ/இ குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவுகள் 20 மற்றும் 26 ன் கீழ் மனைவி இடைக்கால ஜீவனாம்சத்தைக் கோர முடியுமா?

(A) இடைக்கால ஜீவனாம்சத்தைக் கோர முடியாது

(B) மனைவி ஏற்கனவே குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் பிரிவு 20 ன் கீழ் ஜீவனாம்சத்தை பெற்றிருக்கிறார். சூழ்நிலை மாற்றத்தின் காரணமாக அந்த உத்தரவில் மாறுபாடு அல்லது திருத்தம் இருப்பின் அந்த உத்தரவை பிறப்பித்த அதே நீதிமன்றத்தை மனைவி மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 25(2)ன் கீழ் பரிகாரம் கேட்டு அணுகலாம்

(C) குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழான நடவடிக்கைகளும் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 125ன் கீழான நடவடிக்கைகளும் தனித்தனியான நடவடிக்கைகள் என்பதால் மனைவி இடைக்கால நிவாரணத்தை கோரலாம்.

(D) மேற்கண்ட எதுவும் சரியல்ல.

31. Which among the following statements is correct with respect to adoption of child under THE JUVENILE JUSTICE (CARE AND PROTECTION OF CHILDREN) ACT,

Statement 1 : Muslim may choose to adopt a Hindu child under THE JUVENILE JUSTICE (CARE AND PROTECTION OF CHILDREN) ACT.

Statement 2 : Any person having natural born children may validly adopt more children of the same sex even though such adoption is prohibited under Hindu Adoption and maintenance Act.

Statement 3 : Child living in India, who has not completed 18 years of age, may be adopted under THE JUVENILE JUSTICE (CARE AND PROTECTION OF CHILDREN) ACT.

(A) All the above statements are correct

(B) Statements 1 and 2 are correct

(C) Statements 2 and 3 are correct

(D) Statement 3 alone is correct

இளஞ்சிறார்கள் நலம் மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் குழந்தைகளை தத்தெடுப்பது சம்மந்தமாக கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

கூற்று 1 : இளஞ்சிறார்கள் நலம் மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஒரு இந்துவை ஒரு இஸ்லாமியர் தத்தெடுக்கலாம்

கூற்று 2 : இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்பு சட்டம் கீழ் தடையிருந்தாலும், குழந்தையை பெற்றிருக்கும் ஒரு நபர் அதே பாலினத்தைச் சேர்ந்த அதிக குழந்தைகளை தத்தெடுக்கலாம்

கூற்று 3 : 18 வயது பூர்த்தியடையாத இந்தியாவில் வசிக்கும் குழந்தையை இளஞ்சிறார் நலன் மற்றும் குழந்தைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தத்தெடுக்கலாம்

(A) மேற்கண்ட அனைத்து கூற்றுக்களும் சரியானது

(B) கூற்றுக்கள் 1 மற்றும் 2 மட்டும் சரியானது

(C) கூற்றுக்கள் 2 மற்றும் 3 மட்டும் சரியானது

(D) கூற்று 3 மட்டும் சரியானது

32. In which of the following cases can the judgment be taken as conclusive evidence?

(1) Probate on a Will is conclusive evidence of the title of the executors and the validity of the Will

(2) A has got a decree against B for a right of easement over a particular piece of land

(3) A judgment for possession of property that was never enforced as the property was acquired by the State

(4) S has got a decree of judicial separation from T and is now living separately

(A) 1 and 2
(B) 2 and 3
(C) 3 and 4
(D) 4 and 1

பின்வருவனவற்றில் எந்த நேர்வில் தீர்ப்புரையை, அறுதியிட்ட சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியும்?

(1) உயில் மெய்ப்பிதலானது உயிலை எழுதி கொடுத்தவரின் உரிமை மற்றும் உயிலின் செல்லும் தன்மையை காட்டுவதற்கு ஒரு அறுதியிட்ட சாட்சியமாகும்

(2) ஒரு குறிப்பிட்ட துண்டு நிலத்தின் மீது வசதியுரிமைக்கான ஒரு தீர்ப்பாணையை A என்பவர் B என்பவருக்கு எதிராக பெற்றிருக்கிறார்

(3) சொத்து அரசால் கையகப்படுத்தப்பட்டுவிட்டதால் உடைமைக்கான ஒரு தீர்ப்பு எப்போதும் நிறைவேற்றப்படவில்லை

(4) T யிடமிருந்து நீதிமுறையில் பிரிவதற்கு S என்பவர் ஒரு தீர்ப்பாணையை பெற்று தனியாக வாழ்ந்து வருகிறார்

(A) 1 மற்றும் 2
(B) 2 மற்றும் 3
(C) 3 மற்றும் 4
(D) 4 மற்றும் 1

33. Which statement is correct in relation to a child witness-

Statement 1 : A child of tender age can be allowed to testify if he has intellectual capacity to understand questions and give rational answers thereto,

Statement 2 : A child witness may be easy prey of tutoring and when it is established that he is under the influence of tutoring, it is not safe to solely rely on his evidence,

Statement 3 : The law recognizes the child as a competent witness but a child of a tender age of six years is not considered by the Court to be a witness whose sole testimony can be relied without other corroborative evidence

(A) All 3 statements are correct

(B) Statements 1 and 2 are correct

(C) Statements 2 and 3 are correct

(D) Only statement 1 is correct.

குழந்தை சாட்சி சம்மந்தமாக கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

கூற்று 1 : இளம் வயது குழந்தை கேள்விகளை புரிந்து கொள்ளும் அறிவுத்திறனையும் அந்த கேள்விகளுக்கு பகுத்தறிவுத் தன்மையுள்ள பதிலையும் கொடுக்கும் திறனை பெற்றிருந்தால் சாட்சியமளிக்க அவரை அனுமதிக்கலாம்.

கூற்று 2 : குழந்தை சாட்சி எளிதில் சொல்லிக் கொடுக்கப்படுவதற்கு இலக்காவார்கள். அந்த சாட்சி ஒரு கற்பிக்கப்பட்ட சாட்சி என்று நிரூபித்ததால் அவரது சாட்சியத்தை நம்புவது பாதுகாப்பானது அல்ல.

கூற்று 3 : குழந்தையை தகுதியான சாட்சியாக சட்டம் அங்கீகரிக்கிறது. 6 வயதுடைய குழந்தையை ஒரு சாட்சியாக நீதிமன்றம் கருதுவதில்லை. அவரின் தனிப்பட்ட சாட்சியத்தை உறுதிப்படுத்தும் சாட்சியம் இல்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடாது

(A) மேற்கூறிய அனைத்து கூற்றுக்களும் சரியானது

(B) கூற்றுக்கள் 1 மற்றும் 2 மட்டும் சரியானது

(C) கூற்றுகள் 2 மற்றும் 3 மட்டும் சரியானது

(D) கூற்று 1 மட்டும் சரியானது

34. In Computer, documents converted to ―――――― can be published to the web.

(A) Doc file
(B) http
(C) html
(D) machine language

கணினியில் ஒரு ஆவணம் எதுவாக மாற்றப்பட்டால் அதை இணையத்தில் வெளியிட முடியும்

(A) ஆவணக்கோப்பு
(B) ஹெச்.டி.டி.பி.
(C) ஹெச்.டி.எம்.எல்
(D) இயந்திரமொழி

35. Which keyboard short cut opens the GOTO dialog box?

(A) Ctrl + B
(B) Ctrl + Shift + B
(C) F5
(D) F2

ஒரு கணினியின் விசைப்பலகையில் எந்த பொத்தானை அழுத்தினால் GOTO dialog box என்ற திரை திறக்கும்?

(A) Ctrl + B
(B) Ctrl + Shift + B
(C) F5
(D) F2

36. Ethical hacking means

(A) The process that finds the weakness in computer or network
(B) The process that finds the weakness in computer
(C) The process that finds the weakness
(D) The process that finds the weakness in keyboard

Ethical hacking என்பது

(A) ஒரு கணினி அல்லது நெட்வொர்க்கில் உள்ள பலவீனத்தை கண்டறியும் ஒரு செய்முறை
(B) கணினியில் உள்ள பலவீனத்தை கண்டறியும் ஒரு செய்முறை
(C) பலவீனத்தை கண்டறியும் ஒரு செய்முறை
(D) விசைப்பலகையில் உள்ள பலவீனத்தை கண்டறியும் ஒரு செய்முறை

37. Queens Berry Rules is the name given to the rules in

(A) Foot ball

(B) Tennis

(C) Hockey

(D) Boxing

எந்த விளையாட்டு விதிகளில் Queens Berry Rules என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது?

(A) கால்பந்து

(B) டென்னிஸ்

(C) ஹாக்கி

(D) குத்துச்சண்டை

38. A person will have brown eyes, black eyes or blue eyes depending upon the particular pigment present in the

(A) Pupil

(B) Cornea

(C) Iris

(D) Choroid

கீழ்கண்டவற்றில் எதில் உள்ள நிறமியின் அடிப்படையில் ஒரு நபரின் கண்கள் பழுப்பு நிறத்திலோ அல்லது கருப்பு நிறத்திலோ அல்லது நீலநிறத்திலோ இருக்கிறது?

(A) கண்மணி

(B) விழி வெண்படலம்

(C) கருவிழி

(D) கோராய்ட்

39. Statement No. 1 : There need be physical connection between the goods and the person charged under NDPS Act.

Statement No. 2 : To hold a person guilty under the above Act, possession of the goods has to be conscious.

Which of the above statements is correct?

(A) Both Statements are correct

(B) Both Statements are not correct

(C) Statement No. 1 alone is correct

(D) Statement No. 2 alone is correct

கூற்று 1 : போதை மருந்து தடுப்புச் சட்டத்தின்கீழ் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கும், போதைப்பொருளுக்கும் இடையே உடல் ரீதியாக தொடர்பு இருக்க வேண்டும்.

கூற்று 2 : மேற்கூறிய சட்டத்தின்கீழ் ஒரு நபரை குற்றவாளி என்று முடிவு செய்ய அந்த நபர் பொருட்களை வைத்திருப்பது அவருக்கு தெரிந்திருக்க வேண்டும்.

மேற்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) மேற்கூறிய இரு கூற்றுக்களும் சரியானது

(B) மேற்கூறிய இரு கூற்றுக்களும் சரியல்ல

(C) கூற்று 1 மட்டும் சரியானது

(D) கூற்று 2 மட்டும் சரியானது

40. As per Section 3 of Food Safety & Standards Act 2006, if food article sold in the market contains any inferior or cheaper substances whether wholly or partly which is injurious to health then such products can be called as

(A) Sub-standard
(B) Unsafe
(C) Misbranded
(D) Partly sub-standard

உணவு பாதுகாப்பு மற்றும் தரம் சட்டம் 2006ன் பிரிவு 3ன் படி சந்தையில் விற்கப்படும் உணவுப் பொருளில் உடல் நலனுக்கு தீங்கை விளைவிக்க கூடிய வகையில் முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ மலிவான அல்லது தரம் குறைவான பொருட்கள் இருந்தால் அத்தகைய தயாரிப்பு எவ்வாறு அழைக்கப்படும்?

(A) தரம் குறைவானது
(B) பாதுகாப்பற்றது
(C) தவறான வியாபார குறியிடப்பட்டது
(D) பகுதியான தரம் குறைவானது

41. In the Public Interest Litigation, highlighting the menace of growing sales of adulterated and synthetic milk, the Hon'ble Supreme Court has issued directions. Identify which among the following directions have been issued:

(A) Educate school children and teach them easy methods for detection of common adulterants in food
(B) Union of India/State Governments to evolve mechanism for checking unethical practices of the Food Authorities
(C) Special measures should be undertaken by the State/ District Food Safety Authorities for sampling of milk and milk products, including spot testing through Mobile Food Testing Vans
(D) All the above

ஒரு பொதுநலன் வழக்கில், கலப்படமான மற்றும் செயற்கையான பால், பெருகிவரும் அச்சுறுத்தலை சுட்டிக்காட்டி உச்சநீதிமன்றம் சில உத்தரவுகளை பிறப்பித்திருக்கிறது. கீழ்கண்ட உத்தரவுகளில் எது எந்த உத்தரவு என்று கூறவும்?

(A) உணவில் உள்ள பொதுவான கலப்பட பொருட்களை கண்டுபிடிப்பதற்கான எளிதான வழிகளைப் பற்றி பள்ளி குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்
(B) உணவு அதிகாரிகளின் நெறிமுறையற்ற பழக்கவழக்கங்களை சரிசெய்வதற்கான ஒரு வழிமுறையை மத்திய மற்றும் மாநில அரசுகள் உருவாக்க வேண்டும்
(C) பால் மற்றும் பால் உற்பத்தி பொருட்களின் மாதிரி ஆகியவற்றை சோதனை செய்யவும், நடமாடும் உணவு சோதனை வாகனம் மூலம் சம்பவ இடத்திலேயே சோதனை செய்வதற்கான சிறப்பு வழிமுறைகளை மாநில அரசு மற்றும் மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும்
(D) மேற்கண்ட அனைத்தும்

42. Which of the following statements is correct?

(A) All trial courts should add Section 302 IPC to the charge of section 304 B IPC so that death sentences can be imposed in such heinous and barbaric crimes against woman

(B) Only after considering the evidence available on record courts can add. Section 302 IPC in addition to the charge under section 304 B IPC

(C) Only in case of death by poisoning, charge under section 302 IPC shall be added

(D) Only in case of bride burning, charge under section 302 IPC shall be added

கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 304 Bன் கீழான குற்றச்சாட்டுடன் பிரிவு 302ஐம் எல்லா விசாரணை நீதிமன்றங்களும் சேர்க்க வேண்டும். ஆகவேதான் பெண்களுக்கெதிரான கொடுமையான மற்றும் காட்டுமிராண்டிதனமான குற்றங்களில் மரண் தண்டனை விதிக்க முடியும்

(B) பதிவில் உள்ள சாட்சியங்களை கருத்திற்கொண்டு தான் நீதிமன்றம் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 304Bன் கீழான குற்றச்சாட்டுடன் பிரிவு 302ஐம் சேர்க்கலாம்

(C) விஷம் கொடுத்து மரணம் ஏற்படுத்திய வழக்கில் மட்டுமே, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302ன் கீழான குற்றச்சாட்டை சேர்க்க வேண்டும்

(D) மணமகளை எரித்து கொன்ற வழக்கில் மட்டுமே, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302ன் கீழான குற்றச்சாட்டை சேர்க்க வேண்டும்

43. Illustration 1 :- Accused offered the complainant a cold drink (Pepsi) allegedly containing an intoxicating substance. She felt inebriated after taking the cold drink. The accused started misbehaving with her.

Illustration 2 :- An Army personnel was travelling in the general compartment and accused sitting in front of him mixed intoxicating material into the water bottle due to which he became unconscious and accused run away with his suitcase.

Illustration 3 :- Accused administered poison to a watchman of a bank in order to remove cash from the safe of the bank by opening it with the help of a hammer. However the hammer would not be sufficient to open the safe.

(A) All the illustrations would attract offence under section 328 IPC

(B) Illustration 1 to 3 alone would attract offence under section 328 IPC.

(C) Illustration 1 and 2 alone would attract offence under section 328 IPC.

(D) Illustration 1 alone would attract offence under section 328 IPC.

உதாரணம் 1 :- போதையூட்டும் பொருள் கலந்த ஒரு குளிர்பானத்தை எதிரி புகார்தாரருக்கு கொடுத்தார். குளிர்பானத்தை அருந்தியபின் புகார்தாரர் போதை கொண்டார். எதிரி அவரிடம் தவறாக நடக்க ஆரம்பித்தார்.

உதாரணம் 2 :- ஒரு ராணுவ வீரர் பொது வகுப்பில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு முன்புறம் உட்கார்ந்திருந்த எதிரி ஒரு தண்ணீர் பாட்டிலில் போதைப் பொருளை கலந்துவிட்டதால் ராணுவ வீரர் சுயநினைவை இழந்தார். அவரின் பெட்டியுடன் எதிரி ஓடிவிட்டார்.

உதாரணம் 3 :- சுத்தியல் உதவியுடன் வங்கியைத் திறந்து வங்கியில் பாதுகாப்பு பெட்டகத்திலிருந்து பணத்தை எடுக்க வேண்டுமென்று வங்கியின் காவலாளிக்கு எதிரி விஷம் கொடுத்துவிடுகிறார். எனினும், பாதுகாப்பு பெட்டத்தை திறக்க சுத்தியல் போதுமானதாக இல்லை

(A) அனைத்து உதாரணங்களும் இதச பிரிவு 328 ன் கீழான குற்றத்திற்குள் வரும்

(B) உதாரணங்கள் 1 முதல் 3 மட்டும் இதச பிரிவு 328 ன் கீழான குற்றத்திற்குள் வரும்

(C) உதாரணங்கள் 1 மற்றும் 2 மட்டும் இதச பிரிவு 328 ன் கீழான குற்றத்திற்குள் வரும்

(D) உதாரணம் 1 மட்டும் இதச பிரிவு 328ன் கீழான குற்றத்திற்குள் வரும்

44. One S, a minor girl on the verge of 18 (less than 18) was infatuated with the accused living next door. On being questioned by her sister, S replied that she would marry the accused V. S's father was a high ranking officer. He sent S to his relative's house. But the next day, S rang the accused, and met him at a particular place. An agreement to marry was entered into and S and the accused then moved from place to place.

(A) The act of V falls short of an inducement to the minor to slip out of the keeping of her lawful guardian.

(B) He has only fulfilled the wish of S.

(C) V is guilty of kidnapping as he had taken the minor out of the custody of her lawful guardian

(D) None of the above.

18 வயதின் விளிம்பில் உள்ள, ஆனால் 18 வயதை விட குறைவாக, உள்ள இளவரான S என்பவர் அவருக்கு அடுத்த வீட்டில் குடியிருக்கும் எதிரியின் மீது வயதுக்குரிய, ஈர்ப்பு ஏற்பட்டது. S டம் அவரது சகோதரி இது குறித்து கேட்டபோது V என்ற எதிரியை திருமணம் செய்து கொள்ளப்போவதாக S என்பவர் தெரிவித்தார். S யின் தந்தை ஒரு உயர் பதவியில் உள்ள அதிகாரி. அவர் S யை தனது உறவினர் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார். மறுநாள் S என்பவர் எதிரிக்கு போன் செய்து ஒரு குறிப்பிட்ட வீட்டில் சந்தித்தார். இருவரும் திருமணம் செய்ய ஒப்பந்தம் செய்து கொண்டு, ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சென்று கொண்டிருந்தார்கள்.

(A) Vயின் செயல் இளவரை அவரது சட்டப்பூர்வமான பாதுகாவலரின் பாதுகாப்பிலிருந்து வெளியே வர தூண்டும் செயலாகாது

(B) எதிரி S யின் ஆசையை மட்டும் நிறைவேற்றி வைத்தார்

(C) V இளவரை அவரது சட்டப்பூர்வமான பாதுகாவலரின் பாதுகாப்பிலிருந்து கூட்டிச்சென்றதால் V கடத்தல் குற்றத்திற்கு உள்ளாவார்

(D) மேற்கண்ட எதுவும் இல்லை

45. Whether the Central Bureau of Investigation (CBI) is authorised to investigate an offence, which is punishable under the Wild Life (Protection) Act, 1972

(A) Offences punishable under Section 51 of the Wild Life Act can be investigated by the Delhi Special Police Establishment.

(B) Wild Life Act is complete code and, therefore, CBI would have no jurisdiction to investigate the offences under the said Act

(C) The CBI can investigate any offence under the Wild Life Protection only Act only on the directions of the High court and Supreme court

(D) None of the above is true

வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் 1972ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்தை மத்திய குற்ற புலானாய்வுதுறை விசாரிக்க முடியுமா?

(A) வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் பிரிவு 51ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களை டெல்லி சிறப்பு காவல் அமைப்பு விசாரிக்கலாம்.

(B) வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் ஒரு முழுமையான சட்டம். ஆகவே, அந்த சட்டத்தின் கீழான குற்றங்களை மத்திய குற்ற புலனாய்வுத்துறை விசாரிக்க முடியாது.

(C) வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின் கீழான எந்தவொரு குற்றத்தையும் உயர் நீதிமன்ற அல்லது உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு பின்னரே மத்திய குற்ற புலனாய்வு துறை விசாரிக்க முடியும்.

(D) மேற்கண்ட எதுவும் சரியல்ல.

46. In the judgment of the Special court under the POCSO Act, the name of the victim who was examined as PW 2 has been mentioned, which of the following statements is correct

(A) The courts shall ensure that the identity of the victim is not disclosed, in consonance with Section 228-A IPC.

(B) Section 228-A IPC. does not prohibit disclosing the name of the victim in the judgment.

(C) Print Media is exempted from the provision of section 228-A IPC.

(D) None of the above is correct

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டத்தின் கீழான சிறப்பு நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்புரையில் அ.சா 2ஆக விசாரிக்கப்பட்ட பாதிக்கப்பட்டவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 228A க்கிணங்க பாதிக்கப்பட்டவரின் அடையாளம் வெளிப்படுத்தப்படவில்லை என்பதை நீதிமன்றம் உறுதி செய்ய வேண்டும்.

(B) பாதிக்கப்பட்டவரின் பெயரை தீர்ப்புரையில் சொல்வதை பிரிவு 228A தடைசெய்யவில்லை.

(C) பிரிவு 228A யிலிருந்து அச்சு ஊடகம் விலக்களிக்கப்பட்டுள்ளது.

(D) மேற்கண்ட எதுவும் சரியல்ல.

47. Contents of a memory card or a pen drive in relation to a crime amounts to:

(A) Document and not a material object

(B) Material object and the accused is not entitled to a copy of the same

(C) Its an electronic evidence. Court may allow the inspection to the accused and his/her lawyer or expert for presenting effective defence during the trial

(D) None of the above is correct

ஒரு குற்றம் சம்மந்தப்பட்ட ஒரு மெமரிக்கார்டு அல்லது பென்டிரைவில் உள்ள உள்ளடக்கம் என்பது

(A) சான்று பொருள் அல்ல. அது ஒரு ஆவணம்

(B) அது ஒரு சான்று பொருள். அதன் நகலைப் பெற எதிரிக்கு உரிமையில்லை.

(C) அது ஒரு மின்னணு சான்று. வழக்கின் விசாரணையின் போது பயனுள்ள எதிர்வாதம் செய்ய நீதிமன்றம் எதிரி மற்றும் அவரது வழக்கறிஞரை அல்லது அவரது நிபுணரை அதை பார்வையிட அனுமதிக்கலாம்.

(D) மேற்கண்ட எதுவும் சரியல்ல.

48. Legal effect of withdrawal is

(A) discharge of accused irrespective of the stage at which the case is pending

(B) acquittal when made after the framing of charge and discharge if made before the framing of charge

(C) acquittal irrespective of whether the charge has been framed or not

(D) discharge when made after the framing of charge and acquittal if made before the framing of charge.

வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வதன் சட்ட விளைவு என்பது

(A) வழக்கு எந்த கட்டத்திலிருந்தாலும் எதிரியை விடுவிப்பதாகும்.

(B) குற்றச்சாட்டு வனையப்பட்ட பின்னர் வாபஸ் பெற்றால் எதிரியை விடுதலை செய்ய வேண்டும். குற்றச்சாட்டை வனைவதற்கு முன்னர் வாபஸ் பெற்றால் எதிரியை விடுவிக்க வேண்டும்.

(C) குற்றச்சாட்டை வனைந்தாலும், வனையாவிட்டாலும் எதிரியை விடுதலை செய்ய வேண்டும்.

(D) குற்றச்சாட்டு வனையப்பட்ட பின்னர் வாபஸ் பெற்றால் எதிரியை விடுவிக்க வேண்டும். குற்றச்சாட்டை வனைவதற்கு முன்னர் வாபஸ் பெற்றால் எதிரியை விடுதலை செய்ய வேண்டும்.

49. Which among the following statements is correct?

Statement 1 : Under section 167 CrPC, period of 90 days shall be calculated from the date of arrest of the accused.

Statement 2 : If the date of arrest is included, the 90th day shall be excluded.

Statement 3 : 90 days period is prescribed for an offence which is punishable with imprisonment which may be extended upto 10 years.

(A) Statements 1, 2 alone are correct

(B) Statements 1 to 3 are correct

(C) Statements 1 to 3 are incorrect

(D) Statement 3 alone is correct

கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 : குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 167 ன் கீழ் 90 நாட்களை எதிரியை கைது செய்த தேதியிலிருந்து கணக்கிட வேண்டும்.

கூற்று 2 : கைது செய்யப்பட்ட தேதியை கணக்கிட்டால் 90வது நாளை கணக்கிடாமல் விலக்க வேண்டும்.

கூற்று 3 : பத்து வருடங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறை தண்டனை அளிக்கத்தக்க குற்றத்திற்கு 90 நாட்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

(A) கூற்றுக்கள் 1 மற்றும் 2 மட்டும் சரியானது.

(B) கூற்றுக்கள் 1 முதல் 3 சரியானது.

(C) கூற்றுக்கள் 1 முதல் 3 சரியானது அல்ல.

(D) கூற்று 3 மட்டும் சரியானது.

50. A person spends $\frac{1}{3}$ part of his income for food, $\frac{1}{4}$ part on house rent and remaining Rs.630/- on other items. The house rent is

(A) 504

(B) 1512

(C) 378

(D) None of these

ஒரு நபர் அவருடைய வருவாயில் $\frac{1}{3}$ பங்கை உணவுக்காகவும், $\frac{1}{4}$ பங்கை வீட்டு வாடகைக்கும், ரூபாய் 630ஐ இதர வகைக்கும் செலவளிக்கிறார். அப்படியெனில், அவர் செலுத்தும் வீட்டு வாடகை ————————.

(A) 504

(B) 1512

(C) 378

(D) மேற்கண்ட எதுவுமில்லை.

51. Pre-natal sex determination of an unborn child is legally:

(A) Not allowed at all

(B) Allowed when the woman is expecting twin children

(C) Allowed when foetal abnormalities and genetic defects are suspected

(D) Allowed when the woman already has two girl children

கருவில் உள்ள குழந்தையின் பாலினத்தை நிர்ணயம் செய்வது சட்டப்பூர்வமாக

(A) அனுமதிக்கப்படவில்லை

(B) அந்த பெண் இரட்டைக் குழந்தையை எதிர்ப்பார்க்கும் போது அனுமதிக்கத்தக்கது

(C) கரு அசாதாரணத் தன்மை உடையதாகவும் மற்றும் மரபணு குறைபாடுடன் இருப்பதாகவும் சந்தேகிக்கும் போது அனுமதிக்கத்தக்கது

(D) அந்த பெண்ணுக்கு ஏற்கனவே இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் அனுமதிக்கத்தக்கது

52. Y was found guilty under the provisions of the Prevention of Money Laundering Act, 2002. He was imposed fine under section 63 of the Act on 1.1.2018. Within which date should he shall pay the aforesaid fine?

(A) 1.4.2018

(B) 30.12.2018

(C) 1.6.2018

(D) 30.6. 2018

Y என்பவர் பணமோசடி தடுப்புச் சட்டம் 2002 ன் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்யப்பட்டார். 01.01.2018 ல் அவருக்கு மேற்படி சட்டத்தின் பிரிவு 63 ன் கீழ் அபராதமும் விதிக்கப்பட்டது. அந்த அபராதத்தை எந்த தேதிக்குள் அவர் செலுத்த வேண்டும்?

(A) 1.4.2018

(B) 30.12.2018

(C) 1.6.2018

(D) 30.6.2018

53. The Unlawful Activities Prevention Act aims:

(A) To ensure the prevention of any activities or association which can be considered unlawful in nature in India and might pose a threat to the national welfare

(B) To ensure the availability of powers to the government for dealing with activities which are directed against the unity, integrity and sovereignty of India

(C) To prevent commission of a crime, to prevent support of any secessionist movement, direct or tacit, to deal with any claim made by any foreign power regarding any territory to what India claims as its territory

(D) All the above is correct

சட்டவிரோத தடுப்பு சட்டத்தின் நோக்கம்

(A) இந்தியாவில் சட்டவிரோதம் என்று கருதப்படுகிற மற்றும் தேசிய நலனுக்கு அச்சுறுத்தலை விடுவிக்கும் எந்த செயல்களையும் அல்லது அமைப்பையும் தடை செய்வதை உறுதிப்படுத்துவது

(B) இந்தியாவின் ஒருமை, ஒற்றுமை மற்றும் இறையாண்மைக்கு எதிராக முடுக்கிவிடப்பட்ட செயல்களை கையால்வதற்கு அரசுக்கு அதிகாரம் இருப்பதை உறுதிபடுத்துவது

(C) பிரிவினைவாத இயக்கத்திற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரவு தெரிவிக்க, குற்றம் செய்வதை அல்லது இந்தியா தனது பிரதேசம் என்று கோரும் எந்த இடத்திலாவது உரிமை கோரும் அயல்நாட்டினருக்கு ஆதரவு தெரிவிப்பதை தடை செய்வது

(D) மேலே கண்ட அனைத்தும் சரி

54. Which of the following persons are not liable to penalty in relation to a gaming house under the Gambling Act?

(A) Owner who uses the place as a gaming house

(B) Occupier who allows the place to be used as a gaming house

(C) Person who advances money for the purpose of gaming with persons frequenting gaming houses

(D) None of the above

சூதாட்டச் சட்டத்தின் கீழ் சூதாட்ட விடுதி சம்மந்தமாக கீழ்கண்ட நபர்களில் யார் அபராதத்திற்கு உள்ளாகமாட்டார்?

(A) அந்த இடத்தை சூதாட்ட விடுதியாக பயன்படுத்தும் அந்த இடத்தின் உரிமையாளர்

(B) சூதாட்ட விடுதியாக பயன்படுத்த அந்த இடத்தை அனுமதிக்கும் அந்த இடத்தின் உடமையை கொண்டிருப்பவர்

(C) சூதாட்ட விடுதிகளுக்கு அடிக்கடி செல்லும் நபர்களுடன் சூதாடுவதற்கு பணம் கொடுக்கும் நபர்

(D) மேற்கண்டவர்கள் யாரும் இல்லை

55. For the Medical Termination of Pregnancy (MTP) of an adult woman in sound health, among the following whose consent is mandatory?

(A) Only the woman concerned

(B) The woman and the father of the unborn child

(C) The woman, her parents in case of the living separately and the father of the unborn child

(D) The woman and her in-laws

நல்ல ஆரோக்கியமாக உள்ள உரிய வயதை எய்திய பெண்ணுக்கு மருத்துவ ரீதியாக கருச்சிதைவு செய்வதற்கு கீழ்கண்டவர்களில் யாருடைய சம்மதம் கட்டாயமானது?

(A) சம்மந்தப்பட்ட பெண்ணின் சம்மதம் மட்டுமே

(B) கருவில் உள்ள குழந்தையின் தாய் மற்றும் தந்தையின் சம்மதம்

(C) கருவில் உள்ள குழந்தையின் தாய் மற்றும் தந்தை பிரிந்து வாழ்ந்தால், அந்த தாய் மற்றும் அவரது பெற்றோர்களின் சம்மதம்

(D) அந்த பெண் மற்றும் அவருடைய மாமியார் சம்மதம்

56. X believing Y to be of 'loose' morals makes sexually suggestive gestures, though he has never touched her. Y belongs to a Scheduled Tribe and of soft nature. X is aware that Y belongs to Scheduled Tribe. Is his act punishable under the SC and ST (Prevention of Atrocities) Act?

(A) No, because X has not touched Y nor caused physical harm

(B) Yes X is liable to be punished

(C) No, because X bonafidely believes that Y is of loose morals

(D) No, because Y did not retaliate and silence amounts to acquiescence of X's act

Y என்பவர் ஒழுக்க குறைவு கொண்டவர் என்று X நம்பி, X என்பவர் Y ஐ தொடாவிட்டாலும் அவரை நோக்கி பாலியல் ரீதியான சைகை காட்டினார். பட்டியலிடப்பட்ட பழங்குடியினத்தை சேர்ந்த Y சாதுவானவர் என்று X க்கு தெரியும். X ன் செயல் வன்கொடுமை தடுப்புச் சட்டம் கீழ் தண்டிக்கத்தக்கதா?

(A) இல்லை. ஏனெனில் X என்பவர் Y யை தொடவோ அல்லது உடற்காயத்தை ஏற்படுத்தவோ இல்லை

(B) ஆம். X தண்டிக்கப்படத்தக்கவர்

(C) இல்லை. ஏனெனில் Y ஒழுக்க குறைவானவள் என்று X நம்பினார்

(D) இல்லை. ஏனெனில் Y எதிர்ப்பு தெரிவிக்காமல் அமைதியாக இருந்தது X ன் செயலை ஏற்றுக்கொண்டதாக கருதப்படும்

57. B (16 years old) was dating A (17 Years old) with the knowledge of their parents after being engaged to be married after finishing their studies. B missed her menstruation and her mother took her for check up. The doctor found her to be pregnant. The Doctor informed the police. Who is the offender?

(A) A

(B) B

(C) A and A's parents

(D) A, A's and B's parents

16 வயதுடைய B மற்றும் 17 வயதையுடைய A அவர்களது படிப்பு முடிந்தவுடன் அவர்களுக்கு திருமணம் நடத்த நிச்சயிக்கப்பட்டு, அவர்கள் தங்களின் பெற்றோர்களுக்கு தெரிந்தே வெளியே செல்கிறார்கள். தன்னுடைய மாதவிலக்கை தவறவிட்ட Bஐ அவரது தாயார் சோதனை செய்ய மருத்துவரிடம் அழைத்து சென்ற போது B கர்ப்பமாக இருந்தது தெரிய வந்தது. மருத்துவர் காவல்துறைக்கு இதை தெரிவித்தார். இதில் யார் குற்றவாளி?

(A) A

(B) B

(C) Aயும், Aயின் பெற்றோர்கள்

(D) A, A மற்றும் Bயின் பெற்றோர்கள்.

58. A child was raped by her father. The father's picture was published in the newspaper. Has the newspaper violated the law?

(A) No, publishing the picture of the offender is not an offence

(B) Publishing the father's picture after complying with the procedure contemplated in Identification of Prisoners Act is permissible

(C) Yes, the news paper has violated the law

(D) Only the IO who gave the picture of the accused to the newspaper is liable to be punished

ஒரு குழந்தை அவரது தந்தையால் கற்பழிக்கப்பட்டார். செய்தித்தாளில் தந்தையின் புகைப்படம் பிரசுலிக்கப்பட்டது. செய்தித்தாள் சட்டத்தை மீறியிருக்கிறதா?

(A) இல்லை. குற்றவாளியின் படத்தை வெளியிடுவது குற்றமில்லை

(B) சிறைக்கைதிகளை அடையாளம் காட்டும் சட்டத்தின் கீழான நடைமுறைகளை பின்பற்றி தந்தையின் படத்தை வெளியிடுவது அனுமதிக்கத்தக்கது

(C) ஆம். செய்தித்தாள் சட்டத்தை மீறியிருக்கிறது

(D) குற்றம் சாட்டப்பட்டவரின் படத்தை செய்தித்தாளுக்கு கொடுத்த புலன்விசாரணை அதிகாரியே தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்

59. Rule of double criminality in relation to Extradition law means

(A) No one should be prosecuted twice for the same offence

(B) No one should be punished twice for the same offence

(C) Crime for which extradition is claimed should be a crime in both the countries

(D) No one should be prosecuted and punished twice

குற்றவாளிகளை ஒப்படைத்தல் சட்டம் சம்மந்தமாக இரண்டு தடவை குற்றம் சாட்டுதல் விதி என்பது

(A) ஒரே குற்றத்திற்காக ஒருவர் இரண்டு முறை குற்றம் சாட்டப்படக் கூடாது

(B) ஒரே குற்றத்திற்காக ஒருவர் இரண்டு முறை தண்டிக்கப்படக் கூடாது

(C) எந்த குற்றத்திற்கு குற்றவாளியை ஒப்படைக்க கோரப்படுகிறதோ அக்குற்றம் இரண்டு நாடுகளிலும், ஒரு குற்றமாக இருக்க வேண்டும்

(D) ஒரு நபர் இரண்டு முறை குற்றம் சாட்டப்படவோ அல்லது தண்டிக்கப்படவோ கூடாது

60. If a person does not have the necessary educational background to qualify as a doctor, but still proffers an expert opinion as other people refer to him as an expert-will his opinion be counted as such?

(A) Yes, he can if he is aware of medical procedures to be able to offer an opinion

(B) No, it is essential that the expert opinion should be delivered by someone who is a qualified doctor

(C) Yes, he can if the court is convinced that he is an expert

(D) Yes he can if he is accepted as expert by both parties

ஒரு நபர் மருத்துவராக தகுதி பெற அவருக்கு தேவையான கல்வித்தகுதி எதுவும் அவரிடம் இல்லை, ஆனாலும் அவரை மற்றவர்கள் நிபுணர் என்று அழைக்கிறார்கள். அவர் நிபுணருக்கான கருத்துரையை வழங்குகிறார். அவரின் கருத்துரையை நிபுணரின் கருத்துரையாக கணக்கில் கொள்ள முடியுமா?

(A) ஆம். கருத்துரை கொடுக்கும் அளவிற்கு அவருக்கு மருத்துவ நடைமுறை பற்றி தெரிந்திருந்தால் அவர் கருத்துரை வழங்கலாம்

(B) இல்லை. நிபுணராக கருத்துரை வழங்க மருத்துவராக தகுதி பெற்றிருப்பது அத்தியாவசியமாகும்

(C) ஆம். அவரை ஒரு நிபுணர் என்று நீதிமன்றம் திருப்தி அடைந்தால் அவர் கருத்துரை வழங்கலாம்

(D) ஆம். இருதரப்பினரும் அவரை நிபுணர் என்று ஒப்புக்கொண்டால் அவர் கருத்துரை வழங்கலாம்

61. Statement: Hearsay information from a person who is now dead is not admissible as evidence, except if the information relates to the circumstances of his death.

Reason : If a person provides clear and accurate information as to the circumstances of his death, at the time of his death, it is admissible as conclusive evidence of dying declaration.

Which of the following is correct?

(A) Both statement and reason are right, but the statement is not an effect of the reason

(B) The statement is not valid, but the reason provided is a valid statement

(C) The statement and reason both are not correct

(D) The statement and reason both are correct

கூற்று : ஒரு நபரிடமிருந்து, ஆனால் அவர் தற்போது உயிருடன் இல்லை, கேள்விப்பட்ட தகவல், அது அவரின் இறப்பிற்குரிய சூழ்நிலைகள் சம்மந்தப்பட்டது என்பதை தவிர, சாட்சியாக அனுமதிக்கத்தக்கது

காரணம் : ஒரு நபர் இறக்கும் தருவாயில் அவர் இறப்புக்கான சூழ்நிலைகள் குறித்து தெளிவான மற்றும் சரியான தகவலை அளித்தால், அந்த தகவல் மரண வாக்குமூலம். அறுதியிட்ட சாட்சியமாக ஏற்றுக்கொள்ளத்தக்கது

கீழ்கண்டவற்றில் எது சரியானது?

(A) கூற்று மற்றும் காரணம் சரியானது. ஆனால் கூற்று காரணத்தின் விளைவு இல்லை

(B) கூற்று செல்லாது. ஆனால் கொடுக்கப்பட்ட காரணம் சரியான கூற்று ஆகும்

(C) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரியானதல்ல

(D) கூற்று மற்றும் காரணம் ஆகிய இரண்டும் சரியானது.

62. While examining a witness in Chief, the Assistant public prosecutor, puts leading questions to a witness. The same is objected to by the defense counsel. Which of the following statements is not correct as regards "leading questions"?

(A) Any question suggesting the answer the person putting it wishes or expects to receive, is called a leading question

(B) Leading question must not be asked in cross-examination

(C) Leading questions must not, if objected by the adverse party, be asked in an examination-in-chief, except with the permission of the Court

(D) Leading questions must not, if objected by the adverse party, be asked in a re-examination, except with the permission of the Court

ஒரு சாட்சியை முதல் விசாரணை செய்யும் பொழுது அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் சாட்சியிடம் விடைபொதிந்துள்ள வினாக்களை கேட்கிறார். அதை எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபிக்கிறார். "விடைபொதி வினாக்கள்" சம்மந்தமாக கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது அல்ல?

(A) விடைகளை பெறும் பொருட்டு ஒரு நபர் விடையை தாங்கியுள்ள வினாக்களை கேட்டால் அது விடைபொதி வினாக்கள் என்று அழைக்கப்படும்

(B) குறுக்கு விசாரணையில் விடைபொதி வினாக்களை கேட்கக்கூடாது

(C) எதிர் தரப்பினர் ஆட்சேபித்தால், நீதிமன்றத்தின் அனுமதியின்றி, முதல் விசாரணையில் விடைபொதி வினாக்களை கேட்கக்கூடாது

(D) எதிர் தரப்பினர் ஆட்சேபித்தால், நீதிமன்றத்தின் அனுமதியின்றி, மறுவிசாரணையில் விடைபொதி வினாக்களை கேட்கக்கூடாது

63. In India, the interest rate on savings accounts in all the nationalized commercial banks are fixed by

(A) Union Ministry of Finance

(B) Union Finance Commission

(C) Indian Bankers Association

(D) None of the Above

இந்தியாவில் தேசியமயமாக்கப்பட்ட வணிக வங்கிகளில் உள்ள சேமிப்பு கணக்கின் மீதான வட்டி விகிதம் யாரால் நிர்ணயிக்கப்படுகிறது?

(A) மத்திய நிதித்துறை அமைச்சகம்

(B) மத்திய நிதிக்குழுமம்

(C) இந்திய வங்கிகள் அமைப்பு

(D) மேற்கண்ட எதுவுமில்லை

64. The only one instance when the President of India exercised his veto power related to

(A) Hindu Code Bill

(B) PEPSU appropriation Bill

(C) The Indian Post Office Amendment Bill

(D) The Dowry Prohibition Bill

எது சம்மந்தமாக இந்திய குடியரசு தலைவர் ஒரே ஒருமுறை தன்னுடைய வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தினார்?

(A) இந்துச் சட்ட மசோதா

(B) பெப்சு ஒதுக்கீட்டு மசோதா

(C) இந்திய அஞ்சல் அலுவலக திருத்த மசோதா

(D) வரதட்சணை தடுப்பு மசோதா

65. The Criminal Justice System needs to change. The system could be more just if it allowed victims the opportunity to confront the person who has harmed them. Also, mediation between victims and their offenders would give the offenders a chance to apologize for the harm they have done.

This paragraph best supports the statement that victims of a crime should

(A) learn to forgive their offenders

(B) have the right to confront their offenders

(C) learn the art of mediation

(D) insist that their offenders be punished

குற்றவியல் நீதி நிர்வாகத்தில் ஒரு மாற்றம் தேவை. பாதிக்கப்பட்டவர் தனக்கு ஊறுவிளைத்தவரை எதிர்கொள்ள ஒரு சந்தர்ப்பம் வழங்குவது இந்த அமைப்பில் நியாயமாக இருக்கும். மேலும், பாதிக்கப்பட்டவர் மற்றும் குற்றவாளிக்கு இடையே உள்ள ஒரு சமரச பேச்சுவார்த்தை குற்றவாளிகளுக்கு தாம் இழைத்த ஊறுக்கு மன்னிப்பு கேட்பதற்கு ஒரு வாய்ப்பாக அமையும்.

மேற்கூறிய பத்தி கீழ்கண்ட எந்த வாக்குமூலத்தை ஆதரிக்கிறது?

(A) பாதிக்கப்பட்டவர் குற்றவாளிகளை மன்னிக்க கற்றுக்கொள்ள வேண்டும்

(B) பாதிக்கப்பட்டவர் குற்றவாளிகளை எதிர்கொள்ளும் உரிமையை பெற வேண்டும்

(C) பாதிக்கப்பட்டவர் சமரச பேச்சுவார்த்தை கலையை கற்க வேண்டும்

(D) பாதிக்கப்பட்டவர் குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும்

66. The power of the court to suspend sentence under NDPS Act:
(A) Section 32A of NDPS Act bars the court to suspend the sentences awarded
(B) In Union of India v. Ram Samujh 1999 (9) SCC 429, only the powers of regular bail has been dealt with and did not deal with suspension of sentence
(C) Subject to the conditions spelt out under section 37, sentence can be suspended
(D) Only the High Court can suspend the sentence

போதைமருந்து தடுப்புச் சட்டத்தின்கீழ் தண்டனையை தற்காலிகமாக நிறுத்தி வைக்க நீதிமன்றத்திற்குரிய அதிகாரம்
(A) மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 32A நீதிமன்றம் தண்டனையை நிறுத்தி வைப்பதை தடை செய்கிறது
(B) யூனியன் ஆஃப் இந்தியா–எதிர்–ராம் சமூஜ் 1999 (9) SCC 429 என்ற வழக்கில், வழக்கமான பிணையம் பற்றிய அதிகாரங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர தண்டனையை நிறுத்தி வைப்பது பற்றி குறிப்பிடப்படவில்லை
(C) பிரிவு 37 ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் குறித்து தண்டனைகள் நிறுத்தி வைக்கப்படலாம்
(D) உயர்நீதிமன்றம் மட்டுமே தண்டனைகளை நிறுத்தி வைக்கலாம்

67. The previous statements for a pre Trap or Post Trap mahazar in a corruption case
(A) Come within the ambit of statement made to the police officer as contemplated under section 162 Crpc.
(B) They are not previous statements which could be used for corroboration under section 157 of Indian Evidence Act
(C) Section 162, Cr.P.C. contains a prohibition against obtaining the signature of witness whose statement is recorded during investigation.
(D) Will not come within the ambit of statement

ஒரு ஊழல் வழக்கில் பொறிக்கு முந்தைய வாக்குமூலம் அல்லது பொறிக்கு பிந்தைய மகசர் வாக்குமூலம்
(A) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 162 குறிப்பிடப்பட்டுள்ளபடி காவல் அலுவலரிடம் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தின் வரையறைக்குள் வரும்
(B) அவை, இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 157ன் கீழ் உறுதிப்படுத்தலுக்கு பயன்படுத்தக்கூடிய முந்தைய வாக்குமூலங்கள் இல்லை
(C) புலன் விசாரணையின்போது சாட்சியிடம் பதிவு செய்யப்படும் வாக்குமூலங்களில் சாட்சியின் கையெழுத்தை பெறுவதை குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 162 தடைசெய்கிறது
(D) வாக்குமூலம் என்ற வரையறைக்குள்ளேயே வராது

68. Illustration I : A killed B for financial gain.

Illustration II : C Steals D to feed his starving children.

Illustration III : E set fire to the house of F out of jealousy and two of the three children in the house were killed in the fire. Identify whether the above acts would amount to intention or motive.

(A) Illustration I Motive, Illustration II and III Intention

(B) Illustration II Motive, Illustration I and III Intention

(C) Illustration III Motive, Illustration I and II Intention

(D) All the three illustrations relate to motive

உதாரணம் I : பண ஆதாயத்திற்காக A என்பவர் B என்பவரை கொன்றுவிடுகிறார்.

உதாரணம் II : C என்பவர் பட்டினியால் வாடும் தனது குழந்தைகளுக்கு உணவு கொடுக்க D என்பவரிடமிருந்து திருடுகிறார்.

உதாரணம் III : F மீதுள்ள பொறாமையின் காரணமாக E என்பவர் F என்பவரது வீட்டில் தீ வைக்கிறார். அந்த தீயில் வீட்டில் இருந்த மூன்று குழந்தைகளில் இரண்டு குழந்தைகள் கொல்லப்படுகிறார்கள். மேற்கூறிய செயல்களில் எது உட்கருத்தாகும் அல்லது நோக்கம் ஆகும் என்பதை காட்டுக

(A) உதாரணம் I நோக்கம், உதாரணம் II மற்றும் III உட்கருத்து

(B) உதாரணம் II நோக்கம், உதாரணம் I மற்றும் III உட்கருத்து

(C) உதாரணம் III நோக்கம், உதாரணம் I மற்றும் II உட்கருத்து

(D) மேற்கண்ட உதாரணங்கள் அனைத்தும் நோக்கமாகும்

69. The Accused deliberately and systematically starved his wife and denied her food, for days together and also prevented her from leaving his home. Owing to this calculated under nourishment and starvation her health deteriorated to such an extent, that she was reduced to a condition of acute emaciation. One day she managed to escape from the home and reached Hospital and the doctor found her actually ill and likely to collapse at any moment. After treatment, she recovered. The act of accused amounts to

(A) Attempt to commit Murder

(B) The Act of accused has not caused immediate effect on the victim, hence not an attempt to commit murder

(C) Mere omission to provide food would not attract Section 307 IPC

(D) The act of accused is not capable of causing death

எதிரி அவரது மனைவியை வேண்டுமென்றே பட்டினிபோட்டு பல நாட்களாக உணவு கொடுக்காமல் இருந்தார். அவரை வீட்டை விட்டு வெளியே விடாமலும் தடுத்துவிட்டார். திட்டமிடப்பட்ட ஊட்டச்சத்தின்மை மற்றும் பட்டினியின் காரணமாக அவருடைய ஆரோக்கியம் கெட்டு மிகவும் இளைத்துவிட்டார். ஒரு நாள் அவள் வீட்டை விட்டு தப்பித்து மருத்துவமனையை அடைந்தாள். மருத்துவரும் அவள் நோய்வாய்ப்பட்டிருப்பதை அறிந்தார். அவள் எந்த நேரத்திலும் சரியக்கூடிய நிலையில் இருந்தாள். சிகிச்சைக்கு பின் அவள் குணமடைந்தாள்

(A) எதிரியின் செயல் கொலை செய்ய முயற்சித்தல் ஆகும்

(B) எதிரியின் செயல் பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக எவ்வித விளைவையும் ஏற்படுத்தாததால், அவரது செயல் கொலை செய்ய முயற்சித்தல் ஆகாது

(C) உணவு கொடுக்காமல் இருத்தல் மட்டும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 307ஐ தருவிக்காது

(D) எதிரியின் செயல் மரணத்தை ஏற்படுத்தும் திறன் கொண்டதில்லை

70. Illustration 1 :- A builds a wall across a path, along which Z has a right to pass, thereby Z cannot use the pathway.

Illustration 2 :- A illegally omits to take proper care of his furious bull and deters Z from passing along a road.

Illustration 3 :- A threatens to set a savage dog at Z, if Z goes along a path along which Z has a right to go. Z is prevented from going through the path.

(A) Illustration 1 and 3 alone under definition of section 339 IPC

(B) Illustration 2 and 3 alone under definition of section 339 IPC.

(C) Illustration 1 to 3 comes under definition of section 339 IPC.

(D) None of the above.

உதாரணம் 1 :- Z என்பவர் சென்று வர உரிமையுள்ள ஒரு பாதைக்கு குறுக்கே A என்பவர் ஒரு சுவரை கட்டுகிறார். அதனால் Z அந்த பாதையை பயன்படுத்த முடியவில்லை.

உதாரணம் 2 :- A சட்டவிரோதமாக அவருடைய மூர்க்கமான காளையை சரியாக கவனித்துக்கொள்ள தவறிவிட்டார் மற்றும் Z ஐ சாலை வழியே செல்லவிடாமல் தடுத்துவிட்டார்.

உதாரணம் 3 :- Z என்பவர் நடந்து செல்ல உரிமையுள்ள பாதையின் வழியாக அவர் சென்றால் அவர் மீது மூர்க்கத்தனமான நாயை ஏவவிட்டுவிடுவதாக A என்பவர் Z ஐ மிரட்டினார், ஆகவே அந்த பாதையின் வழியாக செல்ல Z தடுக்கப்பட்டார்.

(A) உதாரணங்கள் 1 மற்றும் 3 இதச பிரிவு 339ன் கீழான வரையறைக்குள் வரும்

(B) உதாரணங்கள் 2 மற்றும் 3 இதச பிரிவு 339ன் கீழான வரையறைக்குள் வரும்

(C) உதாரணங்கள் 1 முதல் 3 இதச பிரிவு 339ன் கீழான வரையறைக்குள் வரும்

(D) மேலே கண்ட எதுவும் இதச பிரிவு 339ன் கீழான வரைறைக்குள் வராது

71. A Farmer was storing his red gram in his godown for the purpose of sale when the price raises and also pledges the goods for loan of the Bank. Under the Provisions of Essential commodities Act whether a farmer comes under the definition of Dealer to be held liable under the provisions of the Act for stocking

(A) Farmer is a dealer and Seizing of his stock is legal

(B) Farmer will not be dealer if he is not involved in selling goods directly

(C) Farmer will not be a dealer

(D) None of the above.

விலை உயரும் போது விற்பனை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில், ஒரு விவசாயி துவரம் பருப்பை அவருடைய கிடங்கில் சேமித்து வைத்திருந்தார் மற்றும் வங்கியில் கடன்பெற அதை அடகு வைத்திருந்தார். அத்தியாவசிய பொருட்கள் சட்டம் வகைமுறைகளின் கீழ் விவசாயியின் செயல் இருப்பு வைத்திருந்ததற்காக டீலர் என்ற வரையறைக்குள் வருவாரா?

(A) விவசாயி ஒரு டீலர் ஆவார். அவர் இருப்பை கைப்பற்றியது சட்டப்பூர்வமானது ஆகும்.

(B) சரக்கை நேரடியாக அவர் விற்கவில்லை எனில் விவசாயி டீலர் இல்லை

(C) விவசாயி ஒரு டீலர் இல்லை

(D) மேற்கண்ட எதுவுமில்லை

72. Where a person is prosecuted for committing or abetting or attenuating to commit any offence under sections 3,5,7 and section 9 of POCSO Act, the Special Court shall presume, that such person has committed or abetted or attempted to commit the offence, as the case may be unless the contrary is proved" At what stage does the presumption of guilt embedded in section 29 operate?

(A) Even during enquiry in bail application after final report is filed, the presumption shall be raised.

(B) Only during trial the presumption can be raised

(C) Prosecution shall first discharge their burden.

(D) None of the above.

பாலியல் வன்முறையிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டத்தின் பிரிவுகளான 3,5,7 மற்றும் 9ன் கீழான குற்றத்தை செய்ததாக அல்லது செய்ய உடந்தையாக இருந்ததாக அல்லது செய்ய முயற்சித்ததாக ஒரு நபரை குற்றம் சாட்டும்போது, வேறு வகையில் அதற்கு மாறாக நிரூபிக்கப்பட்டாலொழிய, அந்த நபர் அந்த குற்றத்தை செய்ததாகவோ அல்லது செய்ய உடந்தையாக இருந்ததாகவோ அல்லது செய்ய முயற்சித்ததாகவோ, சிறப்பு நீதிமன்றம் அனுமானம் செய்ய வேண்டும். பிரிவு 29ல் குறிப்பிடப்பட்ட அத்தகைய அனுமானம் எந்த நிலையில் எழக்கூடும்?

(A) குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்த பின்னர் பிணை மனுவை விசாரிக்கும்போதே அத்தகைய அனுமானம் எழும்

(B) வழக்கின் விசாரணையின் போதே அத்தகைய அனுமானம் எழும்.

(C) அரசு தரப்பில் முதலில் அவர்கள் தரப்பு பொறுப்பை நிரூபிக்க வேண்டும்.

(D) மேற்கண்ட எதுவுமில்லை

73. To what extent a victim's counsel can participate in the prosecution of a case:

(A) The victim's counsel can make up for any oversights or deficiencies in the prosecution case.

(B) Even where the Public Prosecutor fails to highlight some issue of importance despite it having been suggested by the victim's counsel, he still has recourse by channeling his questions or arguments through the Judge first.

(C) The victim's counsel should ordinarily not be given the right to make oral arguments or examine and cross examine witnesses.

(D) Both (A) and (B) are correct.

பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர் ஒரு குற்ற வழக்கு விசாரணையில் எந்த அளவுக்கு பங்குகொள்ளலாம்?

(A) அரசு தரப்பில் உள்ள தவறுகளை அல்லது குறைகளை பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர் சரிசெய்யலாம்.

(B) பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர் சுட்டிக்காட்டியும், அரசு வழக்கறிஞர் முக்கிய பிரச்சனையை சுட்டிக்காட்ட தவறினால், பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞர் வாதங்கள் மற்றும் கேள்விகளை ஒழுங்குபடுத்தி முன்னிலைப்படுத்தும் உபாயத்தை கொண்டிருப்பார்.

(C) பாதிக்கப்பட்டவரின் வழக்கறிஞருக்கு பொதுவாக, சாட்சிகளை விசாரிக்கவோ அல்லது குறுக்கு விசாரணை செய்யவோ வாய்மொழியாக வாதம் செய்யவோ உரிமை இல்லை.

(D) (A) மற்றும் (B) இரண்டும் சரியானது.

74. Which of the following is not a necessary requirement for a proper procedure of arrest under section 41B of the Code of Criminal Procedure?

(1) The police officer shall inform the person arrested that he has the right of legal counsel during investigation.

(2) The police officer should bear an accurate, visible and clear identification of his name.

(3) The police officer shall prepare a memorandum of arrest and it shall be countersigned by the person arrested.

(4) The police officer shall inform the person arrested that he has a right to have a relative or a friend named by him to be informed unless the memorandum is attested by a member of his family.

(A) all the above four statements are correct.

(B) statements 1 to 3 alone are correct

(C) statements 2 to 4 alone are correct

(D) statements 1, 3 and 4 alone are correct

பின்வருவனவற்றில் எது குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 41B யின்கீழ் கைது செய்வதற்கான உரிய நடைமுறைக்கு தேவையானவை இல்லை?

(1) கைது செய்யப்பட்டவருக்கு புலன்விசாரணையின்போது வழக்கறிஞரை வைத்துக்கொள்ளும் உரிமை இருக்கிறது என்று கைது செய்யப்பட்டவருக்கு காவல் அலுவலர் தெரிவிக்க வேண்டும்.

(2) காவல் அலுவலர் சரியாகவும், காணக்கூடியவகையிலும், தெளிவாக அடையாளம் காட்டும் வகையிலும், தன் பெயரை தாங்கியிருக்க வேண்டும்.

(3) காவல் அலுவலர் கைது குறிப்பாணையை தயார் செய்து அதில் கைது செய்யப்பட்டவரின் கையெழுத்தை பெற வேண்டும்.

(4) கைது குறிப்பாணையில் கைது செய்யப்பட்டவரின் குடும்ப உறுப்பினர் கையொப்பம் இடாவிடில் கைது செய்யப்பட்டவரின் உறவினர் அல்லது அவரால் குறிப்பிடப்படும் நபருக்கு கைது செய்யப்பட்டதை தெரிவிக்க அவருக்கு உரிமை இருக்கிறது என்று காவல் அலுவலர் தெரிவிக்க வேண்டும்.

(A) மேற்கண்ட கூற்றுக்கள் அனைத்தும் சரியானது.

(B) கூற்றுக்கள் 1 முதல் 3 மட்டும் சரியானது.

(C) கூற்றுக்கள் 2 முதல் 4 மட்டும் சரியானது.

(D) கூற்றுக்கள் 1, 3 மற்றும் 4 மட்டும் சரியானது.

75. In a criminal trial, the incriminating circumstances were not properly put to the accused. The prosecutor moved a petition to put all the incriminating circumstances to the accused.

(A) The questioning under section 313 CrPC is matter between the court and the accused. The prosecutor has no role.

(B) Only on a petition by the accused further questioning can be made under Section 313 Crpc

(C) Court alone can suo moto do it

(D) Court can act on the petition filed by the prosecutor.

ஒரு குற்றவழக்கு விசாரணையில் எதிரிக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் அவருக்கு விளக்கப்படவில்லை. அரசு வழக்கறிஞர், பாதகமான சூழ்நிலையை எதிரிக்கு விளக்க வேண்டுமென்று ஒரு மனுவை தாக்கல் செய்தார்.

(A) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 313ன்கீழ் கேள்வியை கேட்பது என்பது நீதிமன்றத்திற்கும், எதிரிக்கும் இடையேயுள்ள சங்கதியாகும். அதில் அரசு வழக்கறிஞருக்கு எந்த பாத்திரமும் இல்லை.

(B) எதிரி மனு தாக்கல் செய்தால் மட்டுமே பிரிவு 313ன்கீழ் மேலும் கேள்விகளை கேட்க முடியும்.

(C) நீதிமன்றம் மட்டும் மேற்கூறிய செயலை தானாகவே செய்ய முடியும்.

(D) அரசு வழக்கறிஞர் தாக்கல் செய்யும் மனுவின் பேரில் நீதிமன்றம் செயல்படலாம்.

76. Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | Cut | 1. | Ctrl + z |
| (b) | Copy | 2. | Ctrl + v |
| (c) | Paste | 3. | Ctrl + x |
| (d) | Undo | 4. | Ctrl + c |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | Cut | 1. | Ctrl + z |
| (b) | Copy | 2. | Ctrl + v |
| (c) | Paste | 3. | Ctrl + x |
| (d) | Undo | 4. | Ctrl + c |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

77. Statement No. 1 : Under the National Security Act, the Central Government and State Governments can detain a person to prevent any person from acting in any manner prejudicial to the security of India, the relations of India with foreign countries, the maintenance of public order.

Statement No. 2 : The Act gives power to the governments to detain a Foreigner with a view to regulate his presence or expel from the country.

Statement No. 3 : The person need not be charged during the period of detention.

Which of the above statements is correct?

(A) Statements No. 1 and 2 alone are correct

(B) Statements No. 2 and 3 alone are correct

(C) All the statements are correct

(D) Statements 1 and 3 alone are correct

கூற்று 1 : தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்திய பாதுகாப்பு, வெளிநாடுகளுடனான இந்தியாவின் உறவு மற்றும் பொது ஒழுங்கை பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு எதிராக ஒரு நபர் செயல்படுவதை தடுப்பதற்காக அந்த நபரை மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் தடுப்புக் காவலில் வைக்கலாம்

கூற்று 2 : ஒரு வெளிநாட்டைச் சேர்ந்த நபர் அவர் இந்தியாவில் இருப்பதை ஒழுங்குபடுத்தவும் அல்லது அவரை நாட்டிலிருந்து வெளியேற்றவும் அந்த நபரை பாதுகாவலில் வைக்க இந்த சட்டம் அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கிறது

கூற்று 3 : தடுப்பு காவலில் இருக்கும்போது அந்த நபர் குற்றம்சாட்டப்பட தேவையில்லை
மேலே கண்ட கூற்றுகளில் எது சரியானது?

(A) கூற்றுக்கள் 1 மற்றும் 2 மட்டும் சரியானது

(B) கூற்றுக்கள் 2 மற்றும் 3 மட்டும் சரியானது

(C) மேற்கண்ட அனைத்து கூற்றுக்களும் சரியானது

(D) கூற்றுக்கள் 1 மற்றும் 3 மட்டும் சரியானது

78. Police employed a decoy in the guise of a customer, who went to a brothel house and had sexual intercourse with a lady. The rest of the police team and two witnesses barged into the room and arrested the lady and the keeper of the house in order to prove that the woman was a prostitute and the house, a brothel. Which of the following statements is correct?

(A) This method of investigation by barging into the room, without even a knock cannot be regarded as proper investigation

(B) For proving the offence of prostitution, the evidence of decoy witness can be accepted

(C) The purpose of the Act is to prevent prostitution, as prostitution per se is illegal

(D) The action of authorities in maintaining surveillance over the business place of these persons would be violative of Art 14 and 21 of the Constitution

காவல் துறையினர் வாடிக்கையாளரை போன்று ஒரு நபரை ஏற்பாடு செய்கிறார்கள். அந்த நபர் ஒரு விபச்சார விடுதிக்கு சென்று அங்கே ஒரு பெண்ணிடம் உடலுறவு வைத்துக் கொண்டார். காவல் துறை குழு இரண்டு சாட்சிகளுடன் அந்த அறைக்குள் திடீரென புகுந்து அந்த பெண்ணையும், விபச்சார தரகரையும் விபச்சார விடுதியாளரையும், அந்த பெண் விபச்சார பெண் என்றும், அந்த வீடு விபச்சார விடுதி என்றும் நிரூபிப்பதற்காக கைது செய்தது. இந்த சூழ்நிலையில், கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) கதவை தட்டாமல் திடீரென்று ஒரு அறைக்குள் புகும் புலன்விசாரணை முறையானது புலன்விசாரணை என்று கருதப்பட முடியாது

(B) விபச்சார குற்றத்தை நிரூபிக்க ஏற்பாடு செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியம் மட்டுமே ஏற்றுக்கொள்ளக்கூடியது

(C) விபச்சார தடுப்பு சட்டத்தின் நோக்கமே விபச்சாரத்தை தடை செய்வது ஏனென்றால் விபச்சாரம் என்பதே சட்டவிரோதம் ஆகும்

(D) மேற்கூறிய நபர்கள் தொழில் செய்யும் இடத்தை கண்காணித்த அந்த அலுவலர்களின் செயல் அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்துக்கள் 14 மற்றும் 21 யை மீறிய செயல்களாகும்

79. Which among the following has been included as new offence in the 2015 amendment of SC and ST (Prevention of Atrocities) Act?

(A) Forcible removal of clothes from the person of a member of SC or ST

(B) Being in a position to dominate the will of a woman belonging to a SC or ST, using that position to exploit her sexually to which she would not have otherwise agreed

(C) Assault or use of force on a woman belonging to a SC or ST with intent to dishonor

(D) Causing physical harm or mental agony to a member of SC or ST on the allegation of practicing witchcraft or being a witch

வன்கொடுமை தடுப்பு திருத்தச் சட்டம் 2015ல் கீழ்கண்டவற்றில் எது புது குற்றமாக சேர்க்கப்பட்டுள்ளது?

(A) பட்டியலிடப்பட்ட அல்லது பழங்குடியினத்தை சேர்ந்த நபரின் உடைகளை பலவந்தமாக அப்புறப்படுத்துவது

(B) பட்டியலிடப்பட்ட அல்லது பழங்குடியினத்தைச் சேர்ந்த பெண்ணின் விருப்பத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலையிலிருக்கும் ஒருவர், அப்பெண் வேறு வகையில் சம்மதித்திருக்கமாட்டார் என்ற நிலையில், அவரை பாலியல் ரீதியாக பயன்படுத்திக் கொள்வது

(C) அவமதிப்பு செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் பட்டியலிடப்பட்ட அல்லது பழங்குடியினத்தைச் சேர்ந்த பெண்ணை தாக்குதல் அல்லது பலவந்தப்படுத்துவது

(D) பட்டியலிடப்பட்ட அல்லது பழங்குடியினத்தை சேர்ந்தவர் சூனியகாரர் அல்லது சூனியத்தொழிலை செய்கிறார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு உடல் ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ தீங்கு விளைவித்தல்

80. Statement 1: A young man aged 19 years old (or older) is produced before the court for commission of rape at the age of 17 years

Statement 2: A 20 year old woman is produced as witness before Court being the victim of rape at the age of 17 years

Statement 3: A 17 year old boy is produced before Court for allegedly committing murder?

Are they covered under POCSO?

(A) Only statement 1
(B) Only Statement 2
(C) Only statement 3
(D) Only 1 and 2

கூற்று 1 – 19 வயதையுடைய ஒரு இளைஞர், அவர் தனது 17வது வயதில் கற்பழிப்புக் குற்றத்தை செய்ததாக நீதிமன்றம் முன் ஆஜர்படுத்தப்படுகிறார்.

கூற்று 2 – 20 வயதையுடைய ஒரு பெண், அவர் தனது 17வது வயதில் கற்பழிக்கப்பட்டதாக கூறி அவரை ஒரு சாட்சியாக ஆஜர்படுத்தப்படுகிறார்.

கூற்று 3 – 17 வயதையுடைய ஒரு சிறுவன் கொலை செய்ததாக நீதிமன்றம் முன் ஆஜர்படுத்தப்படுகிறார்.

மேற்கூறிய கூற்றுக்களில் எது பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் வரும்?

(A) கூற்று 1 மட்டும்.
(B) கூற்று 2 மட்டும்.
(C) கூற்று 3 மட்டும்.
(D) கூற்றுக்கள் 1 மற்றும் 2 மட்டும்.

81. Who generates the key pair for using Digital Signature?

(A) Subscriber
(B) Certifying authority
(C) Controller of certifying authority
(D) Central Government

டிஜிட்டல் கையெழுத்தை (இலக்கமுறை கையெழுத்தை) பயன்படுத்தி யார் Key Pairஐ யார் உருவாக்குகிறார்?

(A) சந்தாதாரர்
(B) சான்றளிக்கும் அதிகாரி
(C) சான்றளிக்கும் அதிகாரியின் கட்டுப்பாட்டாளர்
(D) மத்திய அரசு

82. C had signed a deed pledging 'his property in Kolkata' to B. It was found that he did not have property in Kolkata but in Howrah. Can C be allowed to lead evidence to show that he was referring to the Howrah property?

(A) No, the words of a document should be read as to give effect to their natural meaning

(B) Yes, although the words make sense by themselves, the reference to the property in Kolkata is ambiguous as C does not have property in Kolkata

(C) Since there is no ambiguity in the document, there need not be any additional clarification provided

(D) Yes, because his property in Howrah does not have the same description as his property in Kolkata

C என்பவர் கொல்கத்தாவில் உள்ள அவரது சொத்தை B என்பவரிடம் அடகு வைத்து ஒரு ஆவணத்தில் கையொப்பம் இட்டார். அவருக்கு கொல்கத்தாவில் சொத்து இல்லை என்றும் அவுராவில் தான் சொத்து இருந்தது என்று தெரியவந்தது. அவுராவில் இருந்த சொத்தைதான், தான் குறிப்பிட்டதாக சாட்சியம் அளிக்க C ஐ அனுமதிக்கலாமா?

(A) இல்லை. ஆவணத்தில் உள்ள வார்த்தைகளை அதற்கு உண்மையான பொருள் கொடுக்கும் வகையில் அதை வாசிக்க வேண்டும்

(B) ஆம். C க்கு கொல்கத்தாவில் சொத்து இல்லாததால் கொல்கத்தாவில் சொத்து இருக்கிறது என்று குறிப்பிட்டிருப்பது இரு பொருள்படக்கூடியது

(C) ஆவணம் இருபொருள்படக்கூடியதாக இல்லாததால், மேற்கொண்டு விளக்கம் எதுவும் தேவையில்லை

(D) ஆம். அவுராவில் உள்ள அவரது சொத்து விவரம் கொல்கத்தாவில் உள்ள அவரது சொத்து விவரம் போல் இல்லை

83. A is tried for murder of B by intentionally shooting him dead. The fact that A was in the habit of shooting at people with intent to murder them is

(A) Relevant fact
(B) Irrelevant fact
(C) Collateral fact
(D) Admission

A வேண்டுமென்றே B ஐ சுட்டுக் கொன்றதாக A ஒரு கொலை வழக்கில் விசாரிக்கப்படுகிறார். மக்களை கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் மக்கள் மீது சுடும் பழக்கத்தை A கொண்டிருந்தார் என்ற சங்கதியானது:

(A) தொடர்புடைய சங்கதி
(B) தொடர்பற்ற சங்கதி
(C) துணையான சங்கதி
(D) ஒப்புதலுரை

84. Admissibility of the evidence under section 122 of Evidence Act has to be adjudged

(A) In the light of the status, on the date when the communication was made
(B) In the light of the status, on the date when the communication is sought to be tendered in court
(C) In the light of the status, on the date when the evidence is to be given in the court
(D) Either (A) or (B) or (C) is correct

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 122 ன் கீழான சாட்சியத்தின் ஏற்கத்தகு தன்மை குறித்து

(A) தகவல் ஏற்பட்ட நாளில் இருந்த தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டும்
(B) தகவலை நீதிமன்றத்தில் கொடுத்த நாளிலிருந்த தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டும்
(C) நீதிமன்றத்தில் சாட்சியம் கொடுக்கப்படும் நாளில் இருந்த தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டும்
(D) (A) அல்லது (B) அல்லது (C) ஆகியவைகளில் ஏதேனும் ஒன்று சரி

85. A and B went to the local Inspector of Police and asked him to hush up the case against B, promising him that he would be amply rewarded. Later A went with money to the Inspector at which time he was arrested and the money was seized. Both were charged for conspiracy and other offences. Before arrest A made a statement that he is there with the money on the saying of B. To prove conspiracy, this statement made by A:

(A) Is admissible only against A

(B) Is admissible against A and B

(C) Is not admissible against A and B

(D) Admissible against B alone

A மற்றும் B ஆகியோர்கள் காவல் ஆய்வாளரிடம் சென்று B க்கு எதிரான வழக்கை மறைக்கும் படியும், அவ்விதம் செய்தால் ஆய்வாளருக்கு உரிய வெகுமானம் கொடுப்பதாக உறுதியளித்தார்கள். A ஆய்வாளரிடம் பணத்தை கொடுக்க சென்றபோது, அவர் கைது செய்யப்பட்டு, பணமும் கைப்பற்றப்பட்டது. இருவரும் கூட்டுசதிக்காகவும், மற்ற குற்றங்களுக்காகவும் குற்றம் சாட்டப்பட்டார்கள். கைது செய்யப்படுவதற்கு முன், A என்பவர் B கேட்டுக் கொண்டதால்தான் தான் பணத்துடன் அங்கு இருந்ததாக வாக்குமூலம் கொடுத்தார். கூட்டுசதியை நிரூபிக்க A கொடுத்த அந்த வாக்குமூலம்

(A) A க்கு எதிராக மட்டுமே ஏற்றுக்கொள்ளத்தக்கது

(B) A மற்றும் B க்கு எதிராக ஏற்றுக்கொள்ளத்தக்கது

(C) A மற்றும் B க்கு எதிராக ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல

(D) B க்கு எதிராக மட்டுமே ஏற்றுக்கொள்ளத்தக்கது

86. Sarkaria Commission was set up for reviewing the relationship between

(A) The President and the Prime Minister

(B) Legislature and the Executive

(C) The Executive and the Judiciary

(D) The Centre and the State

யாருக்கிடையே உள்ள உறவை மறு ஆய்வு செய்ய சர்காரியா கமிஷன் அமைக்கப்பட்டது?

(A) குடியரசு தலைவர் மற்றும் பிரதம மந்திரி

(B) சட்டமன்றம் மற்றும் நிர்வாகத்துறை

(C) நிர்வாகத்துறை மற்றும் நீதித்துறை

(D) மத்திய மற்றும் மாநில அரசுகள்

87. India opted for a federal form of government because of

(A) vast territory

(B) cultural integration

(C) linguistic and regional diversity

(D) administrative convenience

எதற்காக இந்தியா கூட்டாட்சி வடிவத்தை தேர்ந்தெடுத்தது?

(A) பரந்த நிலப்பரப்பு

(B) கலாச்சார ஒற்றுமை

(C) மொழி மற்றும் பிராந்திய பன்முகத்தன்மை

(D) நிர்வாக வசதி

88. In the year 1966, the US Supreme Court's decision in Miranda v. Arizona, the court held that before the police can obtain statements from a person subjected to an interrogation, the person must be given a Miranda warning. This warning means that a person must be told that he or she has the right to remain silent during the police interrogation. Violation of this right means that any statement that the person makes is not admissible in a court hearing.

This paragraph best supports the statement that

(A) police who do not warn persons of their Miranda rights are guilty of a crime

(B) a Miranda warning must be given before a police interrogation can begin

(C) the police may no longer interrogate persons suspected of a crime unless a lawyer is present

(D) the 1966 Supreme Court decision in Miranda should be reversed

1966ல் அமெரிக்க உச்சநீதிமன்றம் மிரான்டா–எதிர்–அரிஜோனா என்ற வழக்கில் விசாரணைக்கு உட்படுத்தப்படும் நபரின் வாக்குமூலத்தை, காவல்துறையினர் பெறுவதற்கு முன்னர், அந்த நபருக்கு மிரான்டா எச்சரிக்கையை கொடுக்க வேண்டுமென்று கூறியது. அந்த எச்சரிக்கை என்பது காவல்துறையினர் விசாரணையின்போது அந்த நபர் அமைதியாக இருப்பதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது என்று அவருக்கு தெரிவிக்க வேண்டும் என்பது ஆகும். அந்த உரிமை மீறப்பட்டால் அந்த நபர் கொடுத்த வாக்குமூலம் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்கது இல்லை.

கீழ்கண்ட எந்த வாக்குமூலத்தை மேற்கூறிய பத்தி ஆதரிக்கிறது?

(A) மிரான்டா உரிமைகளைப் பற்றி அறிவிக்காத காவல்துறையினர் குற்றத்திற்கு உள்ளாவார்

(B) காவல்துறையினர் விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்னர் மிரான்டா எச்சரிக்கையை கொடுக்க வேண்டும்

(C) ஒரு குற்றத்தில் சந்தேகிக்கப்படும் நபர்களை, வழக்கறிஞர்கள் இல்லாவிட்டால் காவல்துறையினர் விசாரிக்க முடியாது

(D) 1966ம் வருடத்தில் உச்சநீதிமன்றம் மிரான்டா என்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பு ரத்து செய்யப்பட வேண்டும்

89. The definition of 'Undue Advantage' under Prevention of Corruption Act means

(A) Any gratification other than legal remuneration that a public servant is permitted to receive

(B) Pecuniary gratifications or gratifications estimable in money

(C) Non-monetary considerations such as a better posting, post-retirement benefits and favours not estimable in money

(D) All the above

ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் "தகாத பயன்" என்பது

(A) ஒரு பொது ஊழியர் வாங்க அனுமதிக்கப்படும் சட்டப்படியான ஊதியம் போக வேறு உபகாரம்

(B) பண ரீதியான உபகாரங்கள் அல்லது பணத்தால் மதிப்பிடத்தக்க உபகாரங்கள்

(C) நல்ல இடத்தில் பணியமர்த்துதல் போன்ற பணமற்ற உபகாரங்கள், ஓய்வுக்கு பிந்தைய பலன்கள் மற்றும் பணத்தால் மதிப்பிட முடியாத உதவிகள்

(D) மேற்கண்ட அனைத்தும்

90. Whether Conspirator can be tried as Co-Accused along with the public servant under Prevention of Corruption Act

(A) Yes, he can be tried

(B) No, he cannot be tried as he is not a public servant

(C) No, joint trial is permissible

(D) Simultaneous trial only is possible

ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ், ஒரு பொது ஊழியருடன், கூட்டு சதி செய்பவர் உடனிணைந்த எதிரியாக விசாரிக்கப்பட முடியுமா?

(A) ஆம் முடியும்

(B) முடியாது, ஏனெனில் அவர் பொது ஊழியர் இல்லை

(C) முடியாது, ஏனெனில் கூட்டு விசாரணை அனுமதிக்கத்தக்கது

(D) இணையான விசாரணை மட்டுமே சாத்தியமானது

91. Statement I : Sudden Provocation from anyone other than the deceased victim has to be ignored and not an exception to sec 300 IPC.

Statement II : The sudden provocation by the deceased victim which was directed at someone other than the accused has to be ignored.

Statement III : D blackmailed V which led to provocative conduct by V causing D to stab 27 times V to death. The act of D could not form the basis of a plea of sudden provocation.

Which of the above statements is correct?

(A) All the Statements are correct

(B) Statement III alone correct

(C) Statement II and III alone correct

(D) Statement I and II alone correct

கூற்று I : இறந்தவரைத் தவிர, வேறு நபரால் செய்யப்படும் திடீர் ஆத்திரமூட்டலை புறக்கணிக்க வேண்டும் மற்றும் அது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 300ன்கீழ் ஒரு விதிவிலக்கல்ல

கூற்று II : எதிரி அல்லாத மற்றொரு நபரின் ஏவுதலின் பேரில் இறந்த நபரால் செய்யப்பட்ட திடீர் ஆத்திரமூட்டலை புறக்கணிக்க வேண்டும்.

கூற்று III : D என்பவர் V என்பவரை அச்சுறுத்தினார். V என்பவரால் D என்பவருக்கு ஆத்திரம் ஏற்பட்டு D என்பவர் V என்பவரை 27 முறை குத்தி கொன்றார். Dயின் செயல் திடீர் ஆத்திரமூட்டல் என்ற வாதத்திற்குள் வராது.

மேற்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) மேற்கண்ட கூற்றுக்கள் அனைத்தும் சரியானது

(B) கூற்று III மட்டும் சரியானது

(C) கூற்றுக்கள் II மற்றும் III மட்டும் சரியானது

(D) கூற்றுக்கள் I மற்றும் II மட்டும் சரியானது

92. Illustration I :- A person struck another on head with a stick and believing him to be dead, set fire to the hut with a view to erase the evidence of the crime. The doctor deposed that the blow only stunned the deceased and the death was really caused by the injuries from the burning when the Accused set fire to the hut.

Illustration II :- The Accused deliberately in order to kill a woman under the pretext of having physical relationship, on the way had dragged the woman in semi-conscious condition to a railway line and put across the Railway track and she was killed by a passing train.

The accused in the above _____ are liable to be convicted under:-

(A) Illustration I Illustration II under section 302 IPC
(B) Illustration I under section 307 IPC, Illustration II under section 302 IPC
(C) Illustration I Illustration II under section 307 IPC
(D) Illustration I under section 302 IPC, Illustration II under section 307 IPC

உதாரணம் I : ஒரு நபர் மற்றொருவரை கம்பால் அடித்தார். அந்த நபர் இறந்துவிட்டார் என்று கருதி, சாட்சியத்தை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவரது குடிசைக்கு தீ வைத்துவிட்டார். எதிரி அடித்ததால் இறந்தவர் அதிர்ச்சியில் திகைத்துவிட்டார் என்றும், எதிரி குடிசைக்கு தீவைத்ததால்தான் தீக்காயத்ததால் இறந்தவருக்கு மரணம் ஏற்பட்டது என்றும் மருத்துவர் சாட்சியமளித்துள்ளார்.

உதாரணம் II : ஒரு பெண்ணை கொல்ல வேண்டும் என்று எதிரி வேண்டுமென்றே திட்டமிட்டு அவளை ஏமாற்றி ஆசைகாட்டி அவருடன் உடல்ரீதியான தொடர்பு கொண்டார். பாதி நினைவில் இருந்த அந்த பெண்ணை ரயில் பாதைக்கு இழுத்துச் சென்று இருப்புப் பாதையின் குறுக்கே போட்டுவிட்டார். அவ்வழியே சென்ற புகைவண்டியால் அவள் கொல்லப்பட்டாள்.

எதிரி —————— ன் கீழான குற்றத்திற்காக தண்டிக்கப்பட வேண்டியவர் ஆவார்.

(A) உதாரணம் I மற்றும் II – இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302
(B) உதாரணம் I – இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 307, உதாரணம் II – இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302
(C) உதாரணம் I மற்றும் II– இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 307.
(D) உதாரணம் I – இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302, உதாரணம் II – இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 307

93. A and B lovers indulge in physical relationship and A with the consent of B captures the acts in his mobile phone subsequently with her consent stored/saved in his mobile phone. When the relationship between them strained, A uploaded the video in the social media without the knowledge of B.

(A) "B" is entitled to claim only damages from "A" for uploading the images without her consent.

(B) Since B consented for shooting and saving in 'A's mobile phone, the same would not amount to voyeurism under section 354 IPC.

(C) The Act of uploading in social media misused consent of 'B' alone would amount to voyeurism.

(D) A by shooting the act in his mobile phone is liable for voyeurism under section 354 IPC

காதலர்களான A மற்றும் B உடல்ரீதியான தொடர்பில் ஈடுபடுகிறார்கள். அந்த செயலை B யின் சம்மதத்துடன் A என்பவர் தன் மொபைல் போனில் படம் பிடிக்கிறார். B யின் சம்மத்துடனே A என்பவர் தன் மொபைல் போனில் சேமித்து வைக்கிறார். அவர்களுக்கிடையேயான உறவுமுறை கெட்டவுடன், A என்பவர் அந்த வீடியோவை B க்கு தெரியாமல் சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்கிறார்

(A) B யின் சம்மதமின்றி பதிவேற்றம் செய்யப்பட்டதற்கு A யிடமிருந்து B நஷ்டஈடு மட்டுமே கோர முடியும்

(B) A யின் மொபைல் போனில் படம் பிடித்து சேமித்து வைக்க B யின் சம்மதம் இருந்ததால் A யின் செயல் இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 354ன் கீழான வோயோரிசத்தில் வராது

(C) B யின் சம்மதத்தை தவறாக பயன்படுத்தி சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்தது தான் வோயோரிசம் ஆகும்

(D) மொபைல் போனில் படம் பிடித்த A யின் செயல் இதச பிரிவு 354ன் கீழ் வோயோரிசத்திற்காக தண்டிக்கத்தக்கது

94. Criminal complaint was filed against the "Occupier" (Public Servant) of a factory owned by Central Government, as he failed to comply with the provisions factories Act. Magistrate took cognizance followed by issuance of summons to accused without sanction :

(A) Omissions allegedly committed by accused amount to offence under section 92 of Factories Act. Hence sanction is not required

(B) Section 105 of Factories Act impliedly excludes operation of Section 197 of CrPC. Hence sanction is not required

(C) Offence was committed while acting in discharge of official duty. Hence sanction is not required

(D) Sanction from Central Government should have been obtained. For want of sanction, order of cognizance is illegal

தொழிற்சாலைகள் சட்டத்தின் வகைமுறைகளை கடைப்பிடிக்காததால் மத்திய அரசுக்கு பாத்தியப்பட்ட ஒரு தொழிற்சாலையின் ஒரு பொது ஊழியரான "Occupier" மீது ஒரு குற்றப்புகார் மனுதாக்கல் செய்யப்பட்டது. முன் அனுமதி இல்லாமல், நீதித்துறை நடுவர் வழக்கை கோப்புக்கு எடுத்து எதிரிக்கு அழைப்பாணை அனுப்பினார்

(A) எதிரியால் செய்யப்பட்ட குறைகள், தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 92ன் படி குற்றமாகையால், முன் அனுமதி தேவையில்லை

(B) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 197ன் செயல்பாட்டை தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 105 உட்கிடையாக விலக்கி விடுவதால், முன் அனுமதி தேவையில்லை

(C) உத்தியோக கடமையை ஆற்றும் போது குற்றம் இழைக்கப்பட்டதால், முன் அனுமதி தேவையில்லை

(D) மத்திய அரசின் முன் அனுமதியை பெற்றிருக்க வேண்டும். முன் அனுமதியை பெறாததால் வழக்கை கோப்புக்கு எடுத்தது சட்டவிரோதமானது

95. A mother of two minor children, while teaching them sex education asked them to paint her naked body above the navel. The video was recorded of the said act and uploaded on social media with the heading — "Body Art and Politics" and the purpose to do so was to teach sex education to them. Cyber dome, Kochi City Police on discovering the said video submitted the report before the Inspector General of Police and Commissioner of Police, Kochi for registration of case:

(A) The children should be given sex education, and they also need to be made aware of the body and body parts as well, she has not committed any offence

(B) Morality of the society and public outcry cannot be a reason and there should be logic for instituting a crime and prosecuting a person.

(C) The intention of the mother was clear. There is no indecency or obscenity and no offence could be made out against the Mother.

(D) Mother has committed Offence as the children were used in any form of medium for the purpose of sexual gratification

ஒரு தாய் தனது இரண்டு இளவல் குழந்தைகளுக்கு பாலியல் கல்வியை சொல்லிக் கொடுக்கும் போது தன்னுடைய தொப்புளுக்கு மேல் உள்ள நிர்வாணமான உடலை வரையும்படி குழந்தைகளை கேட்டு, அதை வீடியோ எடுத்து, சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்தார். பாலியல் கல்வி கொடுப்பதற்காக அவ்விதம் செய்ததாகவும், அதற்கு தலைப்பும் கொடுத்தார். அந்த வீடியோவை பார்த்த கொச்சி சைபர் கிரைம் போலீசார் வழக்கை பதிவு செய்ய கேட்டு, கொச்சி காவல் ஆணையரிடம் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தார்கள்.

(A) குழந்தைகளுக்கு பாலியல் கல்வியை கொடுக்க வேண்டும். உடல் மற்றும் உடல் பாகங்கள் பற்றி அவர்களை அறிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். குழந்தையின் தாயார் குற்றம் இழைக்கவில்லை.

(B) சமுதாயத்தின் ஒழுக்கம் மற்றும் பொதுமக்களின் கூக்குரல் ஒரு காரணம் இல்லை. வழக்கை பதிவு செய்து குற்றம் சாட்ட தகுந்த வாதம் இருக்க வேண்டும்.

(C) தாயின் எண்ணம் தெளிவாக இருந்தது. அங்கே அநாகரிகமோ அல்லது ஆபாசமோ இல்லை என்பதால் தாயிக்கு எதிராக எந்த குற்றமும் எழவில்லை

(D) பாலியல் திருப்திக்காக குழந்தைகள் எந்த வடிவத்தில் பயன்படுத்தப்பட்டாலும், தாய் குற்றம் இழைத்தவர் ஆவார்.

96. After a charge sheet is filed by the police, the Magistrate has ordered further investigation. As regards the power of the court to order further investigation, which of the following is correct:

(A) Under S. 173(8) of the Cr.P.C, i.e., the power is conferred only on the investigating body and the Magistrate had no authority to order further investigation under S. 173(8) of the Cr.P.C at the post-cognizance stage.

(B) The Magistrate has the authority to order further investigation, post-cognizance right up to the phase of the framing of charges

(C) The magistrate he has no powers Under *S. 156(3)* of CrPC to order further investigation and cannot be considered to have taken cognizance of the crime within the context of Section 190(1) (a)

(D) The power for Magistrate to order further investigation under sections 156(3) and173(8), has been expanded to the post-cognizance level.

காவல் துறையினரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின்னர், ஒரு நீதித்துறை நடுவர் மேற்கண்ட புலன்விசாரணைக்கு உத்தரவிடுகிறார். மேற்கண்ட புலன்விசாரணை செய்ய உத்தரவிட நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரம் சம்மந்தமாக கீழ்கண்டவற்றில் எது சரியானது?

(A) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 173(8)ன்கீழ் புலன் விசாரணை அமைப்புக்கு மட்டும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வழக்கை கோப்புக்கு எடுக்கப்பட்ட பிந்தைய நிலையில் (post cognizance stage) மேற்கண்ட புலன்விசாரணைக்கு பிரிவு 173(8)ன்கீழ் நீதித்துறை நடுவருக்கு அதிகாரம் இல்லை.

(B) வழக்கை கோப்புக்கு எடுத்த பின்னர், குற்றச்சாட்டை வனையும் கட்டம் வரை மேற்கண்ட புலன்விசாரணை செய்ய நீதித்துறை நடுவருக்கு அதிகாரம் இருக்கிறது.

(C) குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 156(3)ன்கீழ் மேற்கண்ட புலன்விசாரணைக்கு உத்தரவிடுவதற்கு நீதித்துறை நடுவருக்கு அதிகாரமில்லை. மேலும் பிரிவு 190(1)(a)ன்கீழ் வழக்கினை நீதித்துறை நடுவர் கோப்புக்கு எடுத்துக்கொண்டதாக கருத முடியாது.

(D) பிரிவு 156(3) மற்றும் 173(8)ன்கீழ் மேற்கண்ட புலன்விசாரணை செய்ய உத்தரவிட நீதித்துறை நடுவரின் அதிகாரம், வழக்கை கோப்புக்கு எடுத்த பின்னரும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

97. During investigation in a criminal case, the investigating officer obtains a search warrant to search the house of the accused for a stolen car. During the search, he learns that the car has been sold. Whether the IO has legal authority to open and search for the cash in the house of the accused.

(A) The IO cannot search for cash in the house when the warrant does not specify it.

(B) The IO has wider powers to seize any property suspected to have connection with the stolen property.

(C) The IO can seek for modification of the warrant and then go and seize the cash.

(D) The IO can seize the cash but must get his act ratified by the magistrate.

ஒரு குற்ற வழக்கில் புலன்விசாரணையின்போது, திருடப்பட்ட காரை கண்டறிய எதிரியின் வீட்டை சோதனையிட ஒரு சோதனை கட்டளையை புலன்விசாரணை அதிகாரி பெறுகிறார். அந்த கார் விற்கபட்டுவிட்டதாக அவர் சோதனையின்போது அறிந்து கொள்கிறார். எதிரியின் வீட்டை திறக்கவும், பணம் இருக்கிறதா என்று சோதனையிடவும் புலன்விசாரணை அதிகாரிக்கு அதிகாரம் இருக்கிறதா?

(A) சோதனை கட்டளையில் பணத்தை பற்றி குறிப்பிடாதபோது புலன்விசாரணை அதிகாரி எதிரியின் வீட்டில் பணம் இருக்கிறதா என்று சோதனையிட முடியாது.

(B) திருடப்பட்ட பொருளுடன் சம்மந்தம் உள்ளதாக சந்தேகிக்கப்படும் எந்த சொத்தையும் கைப்பற்ற புலன்விசாரணை அதிகாரிக்கு பரந்த அதிகாரம் இருக்கிறது.

(C) புலன்விசாரணை அதிகாரி சோதனை கட்டளையை திருத்தம் செய்ய கேட்கலாம் பின்னர் பணத்தை கைப்பற்றலாம்.

(D) புலன்விசாரணை அதிகாரி பணத்தை கைப்பற்றலாம், ஆனால் பின்னர் அவரது செயலை நீதித்துறை நடுவரை உறுதிபடுத்த வேண்டும்.

98. As per the Criminal Law (Amendment) Act, 'Voyeurism' is a criminal offence and means

(A) Violence against women in domestic environment

(B) Watching or capturing images of a woman engaged in a private act

(C) Violence against women at workplace

(D) Showing pornography

குற்றவியல் சட்டம் (திருத்த) சட்டத்தின்படி, வோயோரிசம் என்பது ஒரு குற்றமாகும். அது

(A) குடும்ப சூழலில் பெண்களுக்கெதிரான வன்முறையாகும்

(B) தனிசெயலில் ஈடுபட்டுள்ள பெண்ணை கவனித்தல் அல்லது அப்பெண்ணை படம் பிடிப்பது

(C) வேலை செய்யும் இடத்தில் பெண்களுக்கெதிரான வன்முறை

(D) ஆபாசத்தை காட்டுதல்

99. Which of the following sections was partly struck down by the Supreme court?

(A) section 198 CrPC.

(B) section 377 IPC

(C) both (A) and (B)

(D) neither (A) nor (B)

உச்சநீதிமன்றம் கீழ்கண்ட பிரிவுகளில் எதை பகுதியாக ரத்து செய்தது?

(A) குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 198

(B) இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 377

(C) (A) மற்றும் (B)

(D) (A)–வும் இல்லை, (B)–வும் இல்லை.

100. X was convicted in a case for 3 years and was undergoing imprisonment. He had completed 1 year in prison. Subsequently, he was convicted to 2 years in another case before another court.

(A) the sentence for the subsequent case can be set off under section 428 CrPC.

(B) the sentence for the subsequent case cannot be set off under section 428 CrPC.

(C) the sentence for the subsequent case can be set off only when the accused was in judicial custody in the subsequent case also.

(D) the sentence for the subsequent case can be set off only when the accused was tried by the same court in both the cases.

X என்பவருக்கு 3 வருடங்கள் தண்டனை கொடுக்கப்பட்டு சிறை தண்டனையை அனுபவித்து வந்தார். சிறையில் ஒரு வருடம் முடிந்துவிட்டது. மற்றொரு நீதிமன்றத்தில் பின்னர் வேறு ஒரு வழக்கில் அவருக்கு இரண்டு வருட சிறை தண்டனை வழங்கப்பட்டது.

(A) பிந்தைய வழக்கில் அவருக்கு கொடுக்கப்பட்ட தண்டனையை குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 428ன்கீழ் கழித்துக்கொள்ளலாம்.

(B) பிந்தைய வழக்கில் அவருக்கு கொடுக்கப்பட்ட தண்டனையை குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 428ன்கீழ் கழித்துக்கொள்ள முடியாது.

(C) பிந்தைய வழக்கில் எதிரி நீதிமன்ற காவலில் இருந்தால் மட்டுமே பிந்தைய வழக்கில் உள்ள தண்டனை காலத்தை கழித்துக்கொள்ளலாம்.

(D) இரண்டு வழக்குகளையும் ஒரே நீதிமன்றம் விசாரித்தால் மட்டுமே பிந்தைய வழக்கில் உள்ள தண்டனை காலத்தை கழித்துக்கொள்ளலாம்.

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

6. You must write your Question Booklet number in the space provided in the OMR Answer Sheet with Blue or Black ink Ball point pen only.

7. The Question Booklet is provided in four series viz., [A], [B], [C] & [D]. The name of the series is printed on the Right corner of the Question Booklet. Mark and shade your Question Booklet series [A], [B], [C] or [D] in the OMR answer sheet by darkening the appropriate circle. Wrong marking/non-marking of the Booklet series will lead to invalidation of the OMR answer sheet.

8. Each question has four responses Ⓐ, Ⓑ, Ⓒ and Ⓓ. You have to select ONLY ONE correct answer in the OMR Answer Sheet. In case, you feel that there are more correct answers than one, mark only the answer which you consider as the most appropriate. In any case, choose ONLY ONE answer for each question. E.g., If for any question, response B is the correct answer, you have to shade as follows: Ⓐ ● Ⓒ Ⓓ . If you mark more than one answer, for one question, the answer will be treated as incorrect.

9. You should not remove or tear off any sheet from this Question Booklet. You are not allowed to take the Question Booklet and the OMR Answer Sheet out of the Examination Hall during the time of examination. You are permitted to take the Question Booklet only after completion of the Examination.

10. Failure to comply with any of the above instructions will render you liable for action or penalty as the High Court may decide at their discretion.

11. The facts and particulars given in the Question paper i.e. name of Court, place, name of parties etc. are fictional and may not be true in real and legal sense. Yet the candidates have to conclusively assume them to be true for the purpose of answering the paper, without interpreting them in any other manner.

12. Using Whitener / Blade / Sharp edged instrument / Eraser or any kind of tampering to change the answers on OMR answer sheet will lead to invalidation.

---